ரிஜிஸ்டர் நெ. 2041

தனிப்பிரதி விலை | உள்நாடு 1 அணா | வெளிநாடு 1½ அணா

# குடி அரசு

| | | |
|---|---|---|
| வருட சந்தா | | ரூ 3—0 |
| 6 மாத சந்தா | ,, — | ,, 1 12 |
| வெளிநாட்டிற்கு | ,, — | ,, 4—0 |

வாரப்பதிப்பு

ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங். 1க்கு ரூ. 1
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2
☞ நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 5 | சென்னை, சுக்கில௵ ஆவணி௴ 24௳ (8—9—29) ஞாயிற்றுக்கிழமை | மலர் 18

Souriya REGD.

கர்ப்பாசய

ரோக நிவாரணி

''சௌரியா''வின் அபூர்வ சக்தியைக்கண்ட பெண்மணிகள் இதைஸ்திரீகளுக்கோர் வரப்பிரசாதினி என்றும், அதி சிரேஷ்டமான அவுஷதமென்றும், விலையில்லா ஆபரணமென்றும் சொல்லுகிறார்கள். குதருலை, அகால பஹிஷ்டி, ருதுசிராவம், பஹிஷ்டை தடைபட்டுப்போவது, வெண் ரத்தப் போக்கு, கர்ப்பஸ்ராவம், அகால பிரசவம், கருப்பை நழுவி விடுதல், ருதுசூலையினால் வயிற்றில் உண்டாகும் கட்டி, மூர்ச்சை, கணச்சூடு, சந்தானமில்லாமை, மலபந்தம், இருமல், உப்பசம் முதலிய சகல ரோகங்களும் இந்த ''சௌரியா''வின் உபயோகத்தினால் சூரியனைக் கண்ட பனிபோல் நிவர்த்தியாகிவிடும்.


புட்டி 1-க்கு விலை ரூ. 3. பாக்கிங் தபால் செலவு வேறு.

கேட்லாக் இனாம், ஏஜண்டுகள் தேவை.

சங்கராராம் மெடிகல் ஹால்,

சேலம்.

(7)



இதுவரையில் தமிழில் வெளிவராத
''மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும்''
அதன்
''அநுபோகப் பயிற்சிமுறையும்''
(ஆப்டோன் படங்களுடன்)

(தபால் சார்ஜ் வேறு) விலை ரூபா 1—8—0

சிலோன், பினாங்கு, மலாக்கா முதலிய வெளிநாட்டு ஆர்டர்களுக்கு முன் பணம் அனுப்பவேண்டும். ஏஜெண்டுகளும் தேவை. மற்ற விவரங்களுக்கு எழுதவும்.

மோட்டார் பாடசாலை

(1916-ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது)

மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக்கொள்ளலாம்

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் பிரிக்கவும் பூட்டவும் கற்றுக்கொடுக்கப்படும். தேர்ச்சியடைந்தபின் கவர்ன்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக் கொடுக்கப்படும். மற்ற விவரத்திற்கு எழுதவும்.


மதராஸ் இந்தியா மோட்டார் இஞ்ஜினீரிங் ஒர்க்ஸ்,

மைலாப்பூர், சென்னை.

(11)

முந்துங்கள் ! முந்துங்கள்!!

விலை ரூபா 2—12—0 தான்



130 சாமான்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி
சாமான்கள் விவரம்.


14 காரட் ரோல்டுகோல்டு அழகிய நிப்புள்ள பவுண்டன் பேனா; ரோல்டுகோல்டு இமிடேஷன் வைர மோதிரங்கள் 2; டை ஷர்ட்டு பொத்தான்கள் செட் 12; டை கல்லிழைத்த புரூச் 1; ஜப்பான் நூதன பொம்மைகள் 6; கூர்த்தியான கத்தி 1; காலிகோஷன் நூதனசாவி வளையமும் செயின் 1; உயர்ந்த பென்சல்கள் 12; பென்சல் கிளிப்புடன் கூடிய கவர் 1; பலாக பென் ஹோல்டர்கள் 6; உயர்ந்த நிப்புகள் 12; மணிபார்ஸ் 1; ஜெர்மன் இங்கிபுட்டி 1; இங்கி மாத்திரைகள் 12; செண்ட் புட்டி 1; தேசிய டிரான்ஸ்பர் படங்கள் 32; அழகிய பலாக சேப்டி பின்கள் 25; ஆக 130 சாமான்கள் அடங்கிய ஜெர்மன்பெட்டி 1-க்கு 2-12-0.

கி. கிருஷ்ணா ஏஜன்ஸி,

தபால்பெட்டி 119, மதராஸ்.

(8)

A GOLD PLATED *LEVER* WRIST WATCH
FOR. Rs. 6—14—0.



எங்கள் ரிஜிஸ்டர்டு ரோல்டு கோல்டு ''பிடேர்'' லீவர் கைக்கடியாரம் பார்வைக்கு அழகாயிருக்கும், சரியான டைம் காட்டும். சிலிண்டர் கடியாரங்களைப்போல் கொஞ்ச நாளைக்குள் நின்று போவதல்ல. 5 வருஷமல்ல, 10 வருஷங்கள்கூட ரிப்பேர் இல்லாமல் போகக்கூடிய கடியாரம். இதை வாங்குவோருக்கு ரோல்டு கோல்டு கைச்சங்கிலி இனாமாகச் சேர்த்து அனுப்பப்படும். வீணிலே சிலிண்டர் கடியாரங்களில் பணத்தை இழக்காமல் எங்களை நம்பி எக்காலத்தும் உழைக்கக்கூடிய லீவர் கடியாரத்தை வரவழைத்துக் கொள்ளுங்கள். வாங்கிக்கொண்ட ஒருவாரம் வரை சரியாக ஓடவில்லையென்றால் வாபஸ் ஒப்புக் கொள்ளப்படும். 5 வருடம் காரண்டியுள்ளது. இனாம் சங்கிலியுடன் கடியாரம் விலை ரூ. 6-14-0. ஸ்டாக் கொஞ்சம். உடனே எழுதுங்கள்.

Fancy Watch House,

19, G. P. O. MADRAS.


(3)

## பூவுலக வாழ்க்கைக்கு இன்றியமையாத சிங்கபலத்தைத் தருவதெது?

# அமிர்த சஞ்சீவி லேகியமும் அயக்காந்த செந்தூரமுமே

முறையாய்ச் செய்த அயக்காந்த
செந்தூரத்தைக் காட்டிலும்
தேகபலத்தைத் தரும் ஔடதம்
வேறொன்றுமில்லை

விளம்பரம்
இதைக் காணும் கனவான்களே!



இந்த லேகிய செந்தூரங்கள் சாமான்யமானவையல்ல. அபாரமான பலத்தைத் தரக்கூடிய சக்தி அமைந்துள்ளவை. உறுதியாய் இவற்றை நம்பி வாங்கிச் சாப்பிட்டால் ஒரே தடவையிலேயே இவற்றின் விசேடகுணம் நன்கு விளங்கும்.

## இந்த லேகிய செந்தூரங்களால்

### நிவர்த்தியாகும் முக்கிய வியாதிகளாவன:

தற்காலத்தில் மனிதரின் பால்ய சேஷ்டையாலும், இரத்தப் போக்காலும் அவர்க்கு உண்டான 20 வகை மேகரோகங்கள், குஷ்டரோகம், குன்மரோகம், பித்தப்பாண்டு, கைகால் முடக்கு, ஓலைவாய்வு, பித்த எப்பம், நெஞ்சு தொண்டை எரிச்சல், வயிற்றுப்பிசம், அஜீரணம், பசியில்லாமை, தாதுவீனம், தேக உளைச்சல், கண்ணில் நீர்வடிதல், சோம்பல், நித்திரையில்லாமை, தலை சுழற்றல், நீர் இறங்கும்போது பொறுக்கமுடியாத பாதையைத்தரும் தந்திமேகம் முதலியவைகள் ஆச்சரியப்படத்தக்க விதமாய் நீங்கிவிடும். பயங்கரமான மேக சம்பந்த வியாதிகளைப் பத்தே வேளையில் போக்கி சப்த நாம்புகளுக்கும் முறுக்கேற்றி அபரிமிதமான இரத்த விருத்தியைப் பெருக்கி பலத்தைத் தருவதில் இதற்கு மிஞ்சின இலேகிய பஸ்பம் வேறெங்குமில்லை என்று நாம் உறுதியாகச் சொல்லுவோம். இதல்லாமல் தேகத்தைப் புஷ்டியாக்கித் தேகத்தடிப்பு, கைக்கண் வெளுத்திருத்தல் முதலிய வியாதிகளைக் கண்டித்து, தினந்தோறும் மலத்தைத் தாராளமாய்ப் போக்குவதில் இந்த லேகிய செந்தூரங்களே முதன்மையானவை யென்பதை நாம் எமது அனுபவத்தில் கண்டிருக்கிறோம். மிக, இந்த லேகிய செந்தூரங்கள், மேற்கண்ட வியாதிகளைக் கண்டிப்பாய் நிவர்த்திக்குமா என்னும் சந்தேகமுடையோர் பரீக்ஷார்த்தமாக முதலில் 48-நாளாவது வாங்கி புண்டால் இவற்றின் அபார குணம் தெரியவரும். தவிர யாங்கள் இம்மகத்துவம் பொருந்திய லேகிய செந்தூரங்களை எவ்வளவு சிறப்பித்துக் கூறியபோதிலும் அது தகும். மேலும் இவற்றை நோய் உள்ளவரேதாம் சாப்பிடவேண்டும் என்ற அவசியமில்லை; யாவரும் சாப்பிடலாம். நோய் உள்ளவர்களைவிட நோய் இல்லாதவர்கள் எண்ணிக்கையாக 48-நாள் இந்த லேகிய செந்தூரங்களை யாதும் பத்தியமின்றிச் சாப்பிட அவர்க்கு நல்ல பலம் ஏற்படும். இது தவறாது. இவற்றைத் தருவித்து நண்பர் எண்ணிக்கையாகச் சாப்பிட்டு 10-நாளைக்குள் குணம் இல்லாவிடில் உடனே தெரியப்படுத்தினால் கட்டாயம் இவற்றிற்கு வாங்கிய பணம் வாபீஸ் செய்யப்படும். தவிர மேற்காட்டிய நோய்கள் உடையோர் 48-நாட்கள் சாப்பிடுவார்களேயானால் அவை முழுதும் நீங்கிவிடும். அப்படி நீங்கிக் குணம் ஏற்படாவிடில் யாங்கள் அதற்கு உத்திரவாதிகளாவோம். யாங்கள் இவ்வளவு அருமையான லேகிய செந்தூரங்களை எவ்வளவோ சிரத்தையுடன் கஷ்டப்பட்டு முடித்துப் பரோபகாரத்தமாக வெளியிட்டோம். இவ்வருமை வாய்ந்த லேகிய செந்தூரங்களுக்குப் பொன் மெடல், வெள்ளி மெடல் பெற்றதல்லாமல் ஆயிரக்கணக்கான யோக்கியதா பத்திரங்களும் பெற்றிருக்கின்றோம். ஆதலின் நமது லேகிய செந்தூரங்கள் யாம் சொன்னபடி குணத்தைக் கொடுக்கும் என்பதைப்பற்றி ஜவாப்தாரியாயிருக்கக் காத்துக்கொண்டிருக்கிறோம்; இது உண்மை. இவற்றை ஒரே தரம் தருவித்துப் பாருங்கள்; எமது உண்மை விளங்கும்.

வாதாதிக்க தோஷத்தினாலாவது, தாப்பியாசத்தினாலாவது, அதிக மனக்கவலையினாலாவது, அடிக்கடி உண்டாகும் நோயினாலாவது, மற்றெந்தக் காரணத்தினாலாவது பல மிழந்தவர்கள் எண்ணிக்கையாக மேற்படி லேகிய செந்தூரங்களைப் புசிப்பார்களானால் இவை தேகாரோக்கியம், வலிமை, அழகு முதலியவற்றை அவர்க்குக் கொடுத்து அவர்களைச் சந்தோஷிக்கச் செய்யுமென்பதில் தடையில்லை. வெளியூர்க் கனவான்கள் இந்த லேகிய செந்தூரங்களில் முழு நம்பிக்கைவைத்து ஒரே ஒருதரம் இவற்றைப் பரீக்ஷிப்பார்களானால், அவர்கள் அவசியம் ஆனந்த மடைவார்கள்.

இந்த லேகிய செந்தூரங்களுக்குப் பத்தியமே கிடையாது. எந்தப் பண்டங்களையும் நீக்குதலின்றி சாப்பிடலாம். மருந்து சாப்பிடும்போது பசி அதிகமாய் எடுக்கும் ஆதலால் பச்சைப்பயற்றுக் குழம்பு, கறி, மார்க்கண்ட ருப்பு. இவைகளை அதிகமாகப் பசியைத் தணிக்கக்கூடிய விதமாகத் தாமதம் செய்யாமல் சாப்பிட்டுவர வேண்டியது. இவற்றைப் புசிக்கும்போதெல்லாம் பலகாராதிகள் சாப்பிடல் வேண்டும். தயிர், பால், நெய் முதலியவைகள் எவைகளாயிருந்தாலும் சந்தேகமின்றிச் சாப்பிட்டுவரலாம்.

இவ்வருமை வாய்ந்த லேகிய செந்தூரங்களை மட்டும் ஒருவர் தருவித்து எண்ணிக்கையாக 48 நாள் சாப்பிடுவாரேயானால் இவை தேகத்தில் ஊற ஊற, மேகமெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கி அவர் தேகமானது வலுத்துப் புதிய ரத்தம் பரவித் தன் வாழ்நாள் பரியந்தம் இளைக்காமலிருக்கும். இவற்றைப் புருஷன் பெண்சாதி இருவரும் ஏககாலத்தில் ஒற்றுமையாய்ச் சாப்பிட்டு வந்தார்களேயானால் அவர்க்கு உதிக்கும் மக்கள் மிகுந்த தேஜஸோடு தோன்றுவார்கள். இது உண்மை. இனி அதிகம் எழுதுதல் அனாவசியம்.

இந்தியா, பர்மா, ஸிலோன் ஆகிய உள் நாடுகளுக்கு 24 நாள் சாப்பிடக்கூடிய லேகியமும் செந்தூரமும் விலை ரூ. 1 12 0· போஸ்டேஜ் அணா 6. ஒரே தடவை 48 நாள் மருந்து வாங்குவோருக்கு போஸ்டேஜ் உள்பட ரூ. 4.

பினாங்கு, சிங்கப்பூர், நெட்டால் முதலிய அயல்நாடுகளுக்கு 24 நாள் சாப்பிடக்கூடிய மருந்து விலை ரூபா 1 12.0 தபாற் கூலி ரூபா 1 4 0

48 நாள் மருந்து வாங்குவோருக்கு போஸ்டேஜ் உள்பட ரூபா 5—8—0. சிங்கப்பூர், பினாங், மலாக்கா முதலிய வெளி நாடுகளுக்கு வி. பி. ஆர்டர் இருந்தாலும் முன்பணம் அனுப்பாதவர்களுக்கு மருந்து அனுப்பப்படமாட்டாது.

(5) விலாசம்:— **கருணாநிதி டிப்போ,** 1/6 வெங்கடேசமேஸ்திரி தெரு, சென்னை.

# திருநெல்வேலி சைவ மெய்யன்பர் மகாநாடு

## திரு. பி. சிதம்பரம் பிள்ளையவர்களின் வரவேற்புப் பேருரை

(சென்றவாரத் தொடர்ச்சி)

### ஹிந்து-சமணப் போர்

பஞ்சமர் உற்பத்தியைப்பற்றி நாம் அறிய விரும்பினால் ஹிந்து—சமணப் போரைப்பற்றியும், அதனால் சமணர்களுக்குண்டான விபத்தைப்பற்றியும் நாம் சிறிதளவு ஆராய்ந்தறியவேண்டும்.

ஒரு நூற்றாண்டுக்கு முன் தென்னிந்தியாவில் வாழ்ந்திருந்த பிரெஞ்சுக் கனவானான திரு. ஆபேடுபாய்ஸ் கூறியிருப்பதாவது:—"சமண மதம் தென்னாட்டில் ஆதிக்கம் பெற்றிருந்ததனால், பிராமண மதத்தை இலகுவில் தென்னாட்டில்பரப்ப பிராமணர்களுக்கு முடியவில்லை. எனினும், பிராமணர்கள் சமணர்களோடு நீண்டகாலம் போர் புரிந்து பிராமண மதத்தைத் தென்னாட்டில் நிலைநாட்டிவிட்டனர். பிராமணர் சொற்படி நடக்க சமணர்கள் கட்டாயப்படுத்தப்பட்டனர். அந்த ஹிந்து-சமணப்போர் நிகழ்ந்து இப்பொழுது ஆயிரம் வருடங்களுக்கு மேலாகிவிட்டதெனினும், ஹிந்து சமணப்பகை இன்னும் ஒழிந்தபாடில்லை; எத்தகைய பகைமையையும் தணிக்க காலசக்கரத்துக்குச் சக்தியுண்டெனினும் ஹிந்து சமணப்பகையை ஒடுக்க காலசக்கரத்துக்கு சக்தியில்லாமலே இருக்கிறது. பிராமணர்களில் ஒரு வகுப்பார் தங்கள் பிரதி தினப் பிரார்த்தனையின்போது சமணர்கள் ஒழிய வேண்டுமென்று கடவுளை வேண்டிக் கொள்ளுகிறார்கள். சமணர்களும் தங்கள் பிரார்த்தனைக் காலங்களில் "பிராமண க்ஷய" அதாவது பிராமணன் அழிந்தொழியட்டும் என்றும் வேண்டிக் கொள்கிறார்கள்.

இதற்கெல்லாம் மூலகாரணம் பிராமணர்கள் யாகஞ்செய்து உயிர்க்கொலைப் புரிவதேயாகும். சாதாரணமாக இத்தகைய யாகங்களில் ஒரு ஆடுகொலை செய்யப்படுகிறது. யாகம் ஒரு புண்ணிய கருமமென்று பிராமணர்கள் நினைக்கிறார்கள். யாகம் செய்கிறவர்களுக்கும் செய்விக்கிறவர்களுக்கும் அஷ்ட ஐஸ்வரியங்களும் மோட்சமும் கிடைக்குமென்பது பிராமணர்கள் நம்பிக்கை. அம்மட்டோ! இந்த யாகம் செய்யும் உரிமை பிராமணர்களுக்கு மட்டுமே உண்டுமாம். மற்ற ஜாதியார் யாகத்துக்கு வேண்டிய பொருளுதவி செய்தாலும் யாகசாலைக்குப் போகவோ, பார்க்கவோ கூடாதாம்.

சமீபத்திற்றான் காஞ்சீபுரத்தில் ஒரு யாகம் நடைபெற்றது. அதைத்தடுக்கக் காஞ்சீபுரம் ஜீவகாருண்ய சபையார் எவ்வளவோ முயன்றும், ஒரு பயனும் உண்டாகவில்லை. இந்த யாகம் செய்ய காஞ்சீபுரத்தைப் பிராமணர்கள் தேர்ந்தெடுத்தது நன்கு கவனிக்கப்படவேண்டியவிஷயம். கி.பி.640ல் சீனப்பிரயாணியான ஹியன்திசாங் காஞ்சீபுரத்துக்கு விஜயம் செய்த காலத்தில் 112 பௌத்த மடங்களும், 80 பௌத்த ஆலயங்களும் இருந்தனவாம். அந்த மடங்களில் சுமார் 10,000 பௌத்த சந்நியாசிகளும் இருந்தனராம். அவர்களில் மிக்கரும் திக்கம்பர வகுப்பைச் சேர்ந்தவர்கள். கி. பி. ஏழாவது நூற்றாண்டில் பௌத்தமதமும், சமண மதமும் காஞ்சீபுரத்தில் மிக்க ஆதிக்கம் பெற்றிருந்தது.

பண்டு காஞ்சீபுரத்தில் இத்தகைய யாகம் நடைபெற்றிருந்தால் பிராமணர்களுக்கும் சமணர்களுக்கும் போர் மூண்டு காஞ்சீபுரம் இரத்தக்களம் ஆகியிருக்கும். திரு. ஆபேடுபாய்ஸ் கூறுவதாவது:—"யாகம் ஹிந்து மதக் கொள்கைகளுக்கு முற்றிலும்விரோதமானதென்றும், எக்காரணம் பற்றியும் உயிர்க்கொலை புரியக்கூடாதென்று இந்துமதம்போதிக்கிறதென்றும் சமணர்கள் கூறுகிறார்கள்". "பௌத்த ஹிந்துப் பகை முற்றி முற்றுகையிடையில் சமண மதம் தோன்றிற்று. ஹிந்து மதத்தின் சுத்தமான ஆதிக்கொள்கைகளைச் சமணர்கள் ஆதரித்தார்கள். சமணர்களுக்குள்ளும் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்று நான்கு வகுப்பார் இருந்தனர். இந்த சமணர்கள் பூர்வத்தில் ஹிந்துக்களாய் இருந்தவர்களே. பலஜாதி ஹிந்துக்களும் பிற்காலத்தில் சமணர்களாயினர்.

### சமணமதமும் சுயமரியாதை இயக்கமும்

சமண மத வளர்ச்சியைச் சுயமரியாதை இயக்கத்தார் கவனிக்க வேண்டியது மிக முக்கியமாகும்.

திரு.ஆபேடுபாய்ஸ்கூறுவதாவது:- "சமணர்களுக்கும் பிராமணர்களுக்கும் நிகழ்ந்து வந்த வாய்ச்சண்டை முற்றி, கடைசியில் இருவகுப்பாரும் கைகலக்கத் தொடங்கினர். கொலைகளும் பிரதிதினமும் ஏராளமாக நடைபெற்றன. முதலில் சமணர்கள் வெற்றி பெற்றனர் எனினும், பிற்காலத்தில் சமண க்ஷத்திரியர்களும் வைசியர்களும் பிராமணர்களுடன் சேர்ந்துகொண்டு தம்மினத்தவரைக் காட்டிக் கொடுத்து துரோகம் செய்ததனால் சமணர்கள் தோற்கடிக்கப்பட்டனர். பிராமணர்கள் சமண ஆலயங்களையும் மடங்களையும் தரைமட்டமாக்கினர்.

சமணர்களுடைய மத சுதந்தரங்களும் பிரஜா சுதந்தரங்களும் பறிமுதல் செய்யப்பட்டன. சமணர்களுடைய செல்வாக்கும் ஒழிக்கப்பட்டது. சமணர்கள் அநாமதேயப் பேர்வழிகள் ஆயினர்

சைவர்களும் பிராமணர்களும் சேர்ந்துகொண்டு சமணர்களைத் தொலைக்கச் சூழ்ச்சிகள் செய்ததினால் தென்னாட்டில் சமணமதம் அடியோடு ஒழிந்தது. இந்தப் பிராமண- சமணப் போர் திப்பு சுல்தான்மலையாளத்தில் நடத்தியபோருக்கு அநேகமாக ஒப்புடையதென்று சொல்லலாம். இஸ்லாத்தைத் தழுவுகிறாயா? அல்லது வாளுக்கிரையாகிறாயா? என்பதுதான் திப்பு சுல்தான் போர் முழக்கம். அதுபோலவே "சைவ மதத்தைத் தழுவுகிறாயா? அல்லது கழுவேறுகிறாயா என்று திருஞான சம்பந்தரும் போர் முழக்கம் செய்தார்.

ஞான சம்பந்தரின் போர் முழக்கம் வீண் மிரட்டானாலும் அவரது உத்தேசம் சாத்தியமாயிற்று. சரித்திர சார்பாகப் பார்த்தால் அதனால் உண்டான பலன் மிகவும் பயங்கரமானது. பஞ்சமர்கள் தோன்றுவதற்கு ஞானசம்பந்தரின் சமணப் போரே காரணமாகும்.

### பஞ்சமர்கள் யார்?

பிராமண சைவப் பிரசாரத்தில் கலவாதவர்களும், பிராமண சைவ மதத்தை ஆதரிக்காதவர்களும், தம் மனச்சாட்சிப்படி நடந்த பௌத்த சமணர்களும், சமூக வாழ்விலும் அரசியல் வாழ்விலும் ஆதிக்கம் பெறாதவர்களும் பஞ்சமர்கள் எனப்புறக் கணிக்கப்பட்டனர். தீண்டப்படாதவர்கள் ஆனார்கள். அவர்களுக்கு மதமோ ஆலயங்களோ இல்லாதாயின. அவர்கள் சொத்துக்களையெல்லாம் இந்தப் பிராமணர்களும் சைவர்களும் பிடுங்கிக்கொண்டதனால் அவர்கள் ஆண்டிகள் ஆனார்கள். அவர்களுடைய ஆலயங்களைப் பிராமணர்களும் சைவர்களும் கைப்பற்றிக் கொண்டதனால் அவர்களுக்குக் கடவுள் வழிபாடு செய்ய இடமும் இல்லாததாயிற்று. சரித்திர ஆராய்ச்சியால் இவ்விஷயங்களையெல்லாம் இப்பொழுது வெளியாகிக்கொண்டு வருகின்றன; அவர்களுடைய இலக்கியங்களும் அழிந்தன; பாஷைகளும் அழிந்தது; சமண மடங்களும் பாழாயின; சமண சந்நியாசிகளும் நிர்மூலமாயினர். ஆபேடுபாய்ஸ் கூறுகிறபடி அவர்கள் "அடிமைப்படுகுழியில்" ஆழ்த்தப்பட்டார்கள். இவ்வண்ணம் தமிழ் நாட்டின் பூர்வ குடிகள் அடிமைகளாயினர்.

நான் கூறும் இந்த அபிப்பிராயம் என் மனோகற்பிதமானதல்ல. தற்கால ஜாதிகளைப்பற்றியும், ஹிந்து மதத்தைப்பற்றியும் சிறிது ஆராயத் தொடங்கினால் உண்மை வெளிப்பட்டுவிடும். அந்த ஆராய்ச்சியில் இறங்குமுன் நாம் ஒரு விஷயத்தை முக்கியமாகக் கவனிக்கவேண்டும்.

தென்னிந்தியாவிலே ஜாதியும் மதமும் அபேதமாக இணைக்கப்பட்டிருக்கிறது. ஜாதியை நீக்கினால் மதம் அழிந்துவிடும்; மதத்தை நீக்கினால் ஜாதி அழிந்துவிடும். அவ்வளவு கட்டுப்பாடாக அவ்விரண்டும் பிணைக்கப்பட்டிருக்கின்றன. இது பார்ப்பனச் சேர்க்கையினால் சைவ மதத்தில் தோன்றிய ஒரு பெரியதீமை. நீங்கள் மதத்தைக் கண்டிக்கப் புகுந்தால் ஜாதியையும் கண்டித்துத் தான் ஆக வேண்டும். ஜாதியைக் கண்டிக்கப் புகுந்தால் மதத்தையும் கண்டித்துத்தான் ஆகவேண்டும். ஒன்று விட்டு ஒன்றைக் கண்டிக்க முடியாது. ஜாதித் தடைகளையும் குறைபாடுகளையும் ஒழிப்பது தான் சுயமரியாதை இயக்கத்தின் ஆதி நோக்கமாக இருந்தது. ஜாதிக் கோட்டையைச் சுயமரியாதை இயக்கத்தார் தகர்க்கத் தொடங்கியபோது சமயம் குறுக்கிட்டது. ஆகவே ஜாதியையும் சமயத்தையும் தாக்கவேண்டிய நிர்ப்பந்தம் சுயமரியாதைக்காரருக்கு ஏற்பட்டுவிட்டது. ஒன்றை விட்டு ஒன்றை ஒழிப்பது சாத்தியமுமல்ல. நாம் முன்னேற சாதியும் சமயமும் ஒழிய வேண்டியது தான்.

ஹிந்து மகா சபையின் மாஜித் தலைவரும் பிராமணருமான டாக்டர் மூஞ்சே, சென்னையில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசியபொழுது பிராமணரல்லாதார் செய்து வரும் கிளர்ச்சியின் பயனாக இந்தியாவில் வாழும் இரண்டு கோடிப் பிராமணர்களும் கிறிஸ்தவர்களாகவோ முஸ்லிம்களாகவோ மதம் மாறிவிட்டால், கிறிஸ்து மதமும் இஸ்லாம் மதமும் வலிமையடையாதா என்று கேட்டார். உடனே ஒரு நிய நண்பர் எழுந்து பிராமணர்களும் மற்றும் உயர்ந்த ஜாதி ஹிந்துக்களும் ஒன்றாகச் சேர்ந்து ஒரே அடியாக கிறிஸ்தவர்களாகவோ முஸ்லிம்களாகவோ மதம் மாறிவிட்டாலும் ஒரு குடிகேடும் உண்டாய் விடாது என்று ஆணித்தரமாகப் பதிலளித்தார். நாம் கவனிக்க வேண்டிய முக்கியமான விஷயம் ஒன்றுண்டு. அதாவது, இந்தியாவில் 7 கோடிப் பஞ்சமர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஜாதியும் இல்லை; மதமும் இல்லை. அவர்கள் நிலைமையைப்பற்றி பிராமணர்களோ, ஜாதி ஹிந்துக்களோ, சைவர்களோ எள்ளளவு கூட சிந்திப்பதில்லை. இந்த ஜாதி ஹிந்துக்களும் பிராமணர்களும்சைவர்களும் பஞ்சமர்கள் ஆகிவிட்டால் அவர்கள் நிலைமை என்னவாக இருக்கும். பஞ்சமர் கொடுமைகளையும் துன்பங்களையும் தமதென்று எண்ண உயர்ந்த ஜாதியார் முன்வந்தால் இந்தியாவின் தற்கால நிலைமை மாற்றமடையாதா?

அரசியல் காரணங்களை முன்னிட்டும் நாகரிக உலகத்தை ஏமாற்றவும் பஞ்சமர்களும் ஹிந்துக்களென பாவிக்கப்படுகிறார்கள். எனது நண்பர் திரு. சச்சிதானந்தம் பிள்ளை

(தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க)

# இதிகாசங்கள்

## இராமாயணம்—கிட்கிந்தா காண்டம்

(கட்டுரை—3)

(திரு. சந்திரசேகரப் பாவலர்)

(சருக்கங்கள் 12 முதல் 16 முடிய)

சுக்கிரீவன் பேரிரைச்சலிட்டு வாலியைச் சண்டைக்கழைத்தான். அதைக்கேட்டு வாலி சண்டைக்கு வந்தான். இராமனுக்கு வாலியை அடையாளம் காணமுடியாமையால் அம்பைவிடவில்லை. அதனால் சுக்கிரீவன் அடிபட்டு அஞ்சி இராமனைக் காணுமல் மலையை நோக்கி ஓடினான். வாலி நகருக்குத்திரும்பினான்.

இராமனுடியோர் சுக்கிரீவன் இருக்கும் இடத்தை அடைந்தனர். அவன் வெட்கத்தால் தலை குனிந்து, "இராம! நீ இப்படிச் செய்வா யென்று தெரிந்திருந்தால் நான் சண்டைக்கேபோயிருக்கமாட்டேன்.' என்றான். இராமன "உனக்கும் அவனுக்கும் அடையாளம் தெரியவில்லை. உன்னை எங்கேகொன்றுவிடுவேனோ என்ற அச்சத்தால் நான் அம்பு விடவில்லை. நானும் இலக்குவனும் சீதையும் உன்னையே நம்பி இருக்கின்றோம். இக்காட்டில் உன்னைத் தவிர எங்களுக்கு வேறு யார்? நீ மறுபடியும் போர் செய்; வாலியைத் தவறாமல் கொன்றுவிடுகிறேன். தம்பி! அடையாளமாக பூக்களால் நிறைந்த இந்தக் கொடியை இவன் கழுத்தில்போடு" என்றான். இலக்குவன் அவ்வாறே சுக்கிரீவன் கழுத்தில் கொடியைப் போட்டான்.

எல்லாரும் கிட்கிந்தைக்குப் போனார்கள். வழியில் ஓர் சோலையிருந்தது. இராமன் வினவ சுக்கிரீவன், "இதில் எழு முனிவர்கள் வாழ்ந்தார்கள். அவர்கள் பெருந் தவம் செய்து உடலோடு விண்ணுலகடைந்தனர். நீங்கள் அவர்களை வணங்குங்கள்" என்றான்.

அவர்கள் கிட்கிந்தைக்கு வந்து இருண்ட காட்டில் மரங்களின் மறைவில் நின்றார்கள். சுக்கிரீவன், "இராம! பயங்கரமான யந்திரங்களால் காக்கப் பெற்றிருக்கும் கோட்டை மதில்களையுடைய இங்கே தான் வாலி அரசாட்சிபுரிகிறான். அவனைக் கட்டாயம் கொல்லவேண்டும்" என்றனன். இராமன், "நான் வாக்கை நிறைவேற்ற வில்லையாயின் என்னை நீ இகழலாம். வாலியுடன் போர்புரி" என்றான். சுக்கிரீவன் வாலியைப் போருக்கழைத்தான். வாலி உடனே புறப்பட்டான். தாரை அது கண்டு வாலியைத் தழுவிக் கொண்டு "தாங்கள் இப்படிப் போவது எனக்கு சம்மதமில்லை. சுக்கிரீவன் இவ்வளவு சீக்கிரமாக மறுபடியும் போருக்குவந்தால் நான் ஐயுறுகின்றேன். அவன் தகுந்த துணையுடன் வந்திருக்க வேண்டும். நமது மகன் அங்கதன் காட்டில் திரியும்போது தூதர்களால் இதை அறிந்தான். அயோத்திமன்னன் மக்களான இராம இலக்குவன் அவனுக்குத் துணை சேர்ந்துளராம். அவர்தலை சிறந்த வீரராம். ஆதலின் சினம் தவிர்ந்து சுக்ரீவனை அழைத்து இளவரசாக்குங்கள். அவன் தங்கள் தம்பியல்லவோ? இப்படிச்செய்யாமல்தாங்கள் போருக்குப் போவது எனக்கு விருப்பமில்லை." என்றனள். வாலி, "பெண்ணே! பகைவன்போருக்கழைக்க, வீரன் பின் வாங்குவனோ? இராமன் குற்றமற்ற என்னிடம் போரிட அவ்வளவு அயோக்கியனல்லன். நீ கவலைப்படாதே! நான் சுக்கிரீவனுடைய கொழுப்பை மாத்திரம் அடக்குவேனே ஒழிய அவனைக் கொல்ல மாட்டேன். எனக்கு விடைகொடு" என்றான். தாரை அவனை வாழ்த்தித் திரும்பினாள்.

ஆடைகளை இறுகக்கட்டிகொண்டு வாலியும் சுக்கிரீவனும் போர் தொடங்கினர். நெடுநேரம்சண்டையிட வாலியின் வலி வளர்ந்தது. சுக்கிரீவனே தளர்ந்தனன். ஆனால் அவன் இராமனைப் பார்த்தான். அப்போது இராமன் மறைவிடத்திலிருந்து ஓர் அம்பை விடுத்தான். அது வாலியின் மார்பில் பாய்ந்தது. அதனால் அவன் கீழே விழுந்தான். இவ்வரலாற்றை ஆராய்வோம்.

இராமன் முதலில் வாலியை அடையாளம் காண முடியாமல் அம்பை விடவில்லை. தன்னுடன் நெருங்கிப் பழகிய சுக்கிரீவனை விட்டுப்பிரித்து வாலிமேல்அம்பெய்யும்அறிவாற்றல் அவனுக்கில்லாது போயிற்று. மேலும், இராமன் எய்யும் அம்புகள் குறித்தவர் எங்கிருந்தாலும் போய்ப் பாயும் என்று கதைக்காரர் கூறுவனவெல்லாம் பொய்யான கட்டுக்கதைகளே என்பதும் இதனால் விளங்குகின்றது. அவ்வித ஆற்றல் இராமனுக்கிருந்தால் அவன் கட்டாயம் அம்பெய்திருப்பான்; அது வாலியைக் குறித்துப் போய்ப் பாய்ந்திருக்கும். அவ்வாறு செய்யாமல் தன்னை நம்பிச் சண்டை செய்த சுக்கிரீவனைத் திண்டாடி அடிபட்டோட விட்டுவிட்டபடியால் இராமனிடம் தெய்வத்தன்மை இல்லையென்பதும், இராமன் சாதாரண மக்களிலும்கேடுகெட்டவனே என்பதும் விளங்குகின்றது.

இதுபற்றி சுக்கிரீவன் வருந்திய போது இராமன், "அப்பா! நான் எய்யும் அம்பு தவறி உன்மேல் பட்டால் எங்கள் கதி என்னாகும்? உன்னைத் தவிர எங்களுக்குப் புகலேது?" என்று தெரிவிக்கிறான். அடையாளம் தெரிவதற்காக அவன் சுக்கிரீவனுக்கு ஓர் கொடி மாலை சூட்டுகிறான். இதனால் இராமனுக்கு சாதாரண மக்களுக்குஇருக்கும் அறிவாற்றலும் இல்லை என்பது புலனாகிறது மேலும், இராமன்சுக்கிரீவனையேநம்பியிருந்தனனென்பதும் அவனுக்கு தன் ஆற்றலில் நம்பிக்கை இல்லையென்பதும் தெரியவருகிறது.

எழு முனிவர்கள் உடலோடு விண்ணுலகடைந்தனரெனச் சுக்கிரீவன் கூறுகிறான். உடலோடு விண்ணுலகடைதலாவது என்ன? விண்ணுலகு எவண் உள்ளது? அதனை உடலோடு அடைதல் எங்ஙனம்?

கிட்கிந்தை பலமான கோட்டை மதில்களால் சூழப்பட்டிருந்ததென்பதும் அம்மதில்களில் பயங்கரமான யந்திரங்கள் வைக்கப்பட்டிருந்தன என்பதும் சுக்கிரீவன் பேச்சால்தெரியவருகிறது. இவ்வளவு தூரம் கோட்டை கொத்தளங்களை அமைத்துக் கொண்டதோடு சிறந்த போறிவால் மட்டும் கண்டு பிடிக்கக் கூடிய யந்திரங்களை அதில் வாலி வைத்திருந்தவன் என்பதால் எவ்வளவு நாகரீகமுடைய மக்களுக்கு வாலி அரசனாயிருந்திருக்க வேண்டும்; இவர்களை அக்கிரமமாகஆரியர் குரங்குகளென்று எழுதி வைத்து அக்கூற்றை வாலியின பின் தோன்றல்களாகிய தமிழ் மக்களே நம்பி மோசம் போகும்படியும் செய்து விட்டனரே!

வாலி தாரையிடம், "நான் சுக்கிரீவனுடைய கொழுப்பை அடக்குவேனே ஒழிய அவனைக் கொல்வதில்லை" என்று கூறுகிறான். இதனால் அவனுடைய பெருங்குணம் விளங்குகிறது. வாலி சுக்கிரீவனைக் கொல்ல எண்ணினால் முன்னரேயே கொன்றிருப்பான். அறிவும் அன்பும் மிக்க வாலி தன்னுடைய தம்பிக்கு நல்லறிவுச்சுடர் கொளுத்துவதற்காகவே அவனை அடித்துத் துரத்தியவனாவான். இத்தகைய அன்புருவனாகிய வாலியைச் சுக்கிரீவன் மறைந்திருந்து கொல்லும்படி இராமனை எவ்வனமே; இச்சுக்கிரீவனைப் போலும் கொடிய பாவிகளும் உளராவரோ? இத்தீயவன் அன்புருவனாகிய வாலி பின் எங்ஙனம் தோன்றினான்?

தாரை வாலியை நோக்கி, "இராமன் சுக்கிரீவனுக்கு உதவியாக வந்திருக்கிறான்" என்று சொல்ல வாலி, "இராமன் தனக்கு யாதொரு குற்றமும் செய்யாத என்னிடம் போருக்கு வர அவ்வளவு அயோக்கியனல்லன்" என்று மறுமொழி கூறுகிறான். இதை நோக்கின் வாலி பிறரை மிகவும் கௌரவமாக மதிக்கும் தன்மையன் என்பதும், பிறரையும் தன்னைப்போல நல்லவர்களாகவே இருப்பார்களென்று எண்ணும் பெருங்குணமுடையன் என்பதும் துலங்குகின்றது. இப்பெருந்தகையாளனது பெருங்குணத்தின் முன்னர் அவனை மறைந்து நின்று அம்பெய்த பேடியாகிய இராமனது அற்ப குணம் பேசும் தன்மையதாமோ? இனி கம்பர் போக்கைக்காண்பாம்.

இக்கட்டுரையில் அமைந்துள்ள கதையினையும் கம்பர் பெரும்பாலும் மாற்றியுரைத்தார். சுய நலக்காரனாகிய சுக்கிரீவனைச் சுயநலம் அற்றவனைப்போலவும் இராமன் நலத்திலேயே கண்ணுங்கருத்து உடையவனைப் போலவும் காட்டி, சீதையைக்கண்டு பிடிக்கவேண்டுமானால் வாலியைக் கொன்று வானரப்படைகளைக் கைப்பற்றினால் மட்டுமே முடியும்." என்று அனுமன் கூறியதாகக் பழியை அனுமன்மேல்போட்டு அதற்கு இணங்கி இராமன் சுக்ரீவனை அழைத்துக் கொண்டு வாலியைக் கொல்வதாகக் கம்பர் கூறுகிறார்.

வாலியைத் தாரைதடுத்தனளாக வாலி, "நான் சுக்கிரீவனைக் கொல்ல மாட்டேன். அவனுடைய செருக்கை அடக்கி மீள்வேன்?' என்று கூறினதாக வால்மீகி கூறுகிறார் இதனால் வாலியின் பெருந்தன்மை விளங்குகின்றது என்று நாம் எடுத்தியம்பினோம். வாலியின் இப்பெருந்தன்மையை மறைத்துகம்பர் அவனைச் சாதாரணமனிதனைப்போலக் கெட்டவனெனக் காட்டத்துணிந்து வாலி வதைப் படலத்தில் பதினான்காவது பாட்டில் "சுக்கிரீவனுடையஇன் னுயிர்குடித்து ஒல்லை மீள்குவல்" என்றும், இருபத்தேழாவது பாட்டில் "அவன் உயிர் குடித்து உடன் வந்தாரையும் கருத்தழித்து எய்துவேன்" என்றும் வாலி கூறினதாகக் கூறுகிறார்.

இராமன் சுக்கிரீவனோடு சேர்ந்திருப்பதை ஒற்றரால் உணர்ந்த அங்கதன் கூறினதாக தரை கூறினள் என வால்மீகி மொழிய, கம்பர் அதனைத்தானே ஒற்றரால் தாரை அறிந்ததாகக் கூறினள் எனப் பாடுகிறார். சுக்கிரீவன் முதன் முறை தோற்றோடிப் பின்னரும் வந்து போருக்கழைத்தனன் என்றும் அப்போது தான் தாரை வாலியைத் தடுத்தனளென்றும் வால்மீகி கூறுகிறார். கம்பரோ முதன் முறை வாலி சண்டைக்குப் புறப்பட்டபோதே தாரை தடுத்து மொழிந்தனள் எனக் கூறுவதோடு முதன் முறை செய்தபோரில் சுக்கிரீவன் தோற்றோடியதையும் அவன் தன்னைத் தேடிவந்த இராமனைக்கண்டவுடன்இகழ்ந்துரைத்ததையும் இராமன் அவனைச் சமாதானப் படுத்தி மறுபடியும் போருக்கழைத்து வந்ததையும் வழியில்எழுமுனிவர்களுடையவரலாற்றை இராமனுக்குச் சுக்கிரீவன் மொழிந்ததையும் முற்றிலும் மறைத்துவிட்டனர். அத்துடன் நில்லாமல் கம்பர் வாலியும் சுக்கிரீவனும் சண்டையிட்ட போது சுக்கிரீவன் களைத்து வந்து இராமனை யடைந்து

(தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க)

# புராண ஆராய்ச்சி

—0—

## வாமனவதாரம்

(ஆத்திகன் எழுதியது)

இந்த வாமனவதாரக் கதையை உபதேச காண்டத்தில் சொல்லியிருக்கிறபடி எடுத்துக் கொண்டு ஆராய்வோம். சோழ நாட்டில் திருமறைக்காடு என்னும் ஸ்தலத்தில் வசிக்கும் சிவன், ஞானம் பழுத்த நாயகியார் என்னும் திருநாமம்படைத்த உமா தேவியாரோடு ஒரு நாள் இராத்திரி படுத்துக்கொண்டிருந்தாராம்! ஒரு நாளைக்கு மூன்று வேளை பிரசாதம் சாப்பிடுகிற சுவாமிக்கு படுக்கையும் தூக்கமும் அவசியமில்லாமலிருக்குமா? பிரசாதம் உண்ட திருப்தியோடு சிவன் தன் மனைவியோடு சயனித்துக்கொண்டிருக்கும் போது அங்கு எரிந்துகொண்டிருந்த விளக்கு ஒளி குன்றி எரிந்ததாம்! அப்போது சிவன் "இந்த விளக்கின் திரியைத் தூண்டி தீபத்தை நன்றாக எரியச் செய்பவர் யாராயிருந்தாலும் அவர்களுக்கு மூன்று லோகங்களையும் கொடுத்து அரசாளச் செய்வேன்" என்று சொன்னாராம்! அதைக்கேட்ட உமாதேவியார் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்து "விளக்கின் திரியைத் தூண்டுவோர் இங்கு யாரேனும் உளரோ?" என்று கேட்டாராம். அச்சமயத்தில் ஒரு எலி ஓடி வந்து விளக்கில் இருந்த நெய்யைக் குடித்துவிட்டுத் திரும்பும்போது அந்த எலியின் வால் திரியில் பட்டுத் தூண்டிவிட, விளக்கு பிரகாசமாய் எரிந்ததாம். அப்போது சிவன் சந்தோஷப்பட்டு அந்த எலியைப் பார்த்து "நீ மூவுலகங்களையும் அரசாட்சி செய்வாயாக" என்று சொல்ல, அந்த எலி அசுர குலத்தில் மாவலி என்னும் பெயருள்ள அரசனாகப் பிறந்ததாம்! இதுவரையிலும் இதிலுள்ள ஆபாசத்தைக் கவனிப்போம்.

சூரியனையும் சந்திரனையும் கண்களாக உடைய சிவனுக்கு வெளிச்சம் கொடுக்க விளக்கும் வேண்டுமா? விளக்கு அவியும் சமயத்தில் இருந்தால் இவராவது இவர் மனைவியாவது திரியைத் தூண்டி விட்டிருக்கலாம், அப்படித் தூண்டுவது தமது கடவுள் தன்மைக்குப் பொருந்தாதென்றால் தன் பூத கணங்களில் ஒன்றை அல்லது தாசிப் பெண்களில் ஒருத்தியைக் கூப்பிட்டு விளக்கைச் சரியாக எரியச் செய்திருக்கலாம். நினைத்ததை நினைத்தபடி செய்யக்கூடிய சிவபெருமான் ஒரு எலக்ட்ரிக் விளக்கை உண்டாக்கிக் கொள்ளாதது அவருடைய சக்தியின்மையை விளக்குகிறது. அன்றியும் கடவுளாகிய சிவபெருமான் குடியிருக்கும் இடத்தில் எலிகளும் குடியிருக்கின்றன! எலியுள்ள இடத்தில் வசித்தால் பிளேக் உண்டாகும் என்பது இந்த சிவனுக்குத் தெரியாது போலும்! இருக்கட்டும் கதையைத் தொடர்வோம்.

மாவலி என்னும் பெயரோடு பிறந்த அந்த எலி, பெரியவனாக வளர்ந்து மண்ணுலகம், விண்ணுலகம் பாதாள உலகம் என்னும் மூன்று உலகங்களையும் அரசாண்டானாம். இவன் விண்ணுலகமாகிய தேவலோகத்தையும் அரசு செய்தபடியால் தேவேந்திரன் முதலிய தேவர்களும் இந்த அரசனுக்கு அடங்கி இவன் சொற்படி நடந்துகொண்டார்கள். ஆனால், இவன் தேவர்கள் மனிதர்கள் முதலிய எல்லோருக்கும் அவரவர்கள் வேண்டிய பொருள்களைத் தாராளமாகக் கொடுத்து, ஒரு குறையும் வராமல் காப்பாற்றி வந்தான். தான தருமங்களைச் செய்து நீதியோடு அரசாண்டு வந்தான். இந்த மாவலி அரசனைக் கொடியவன் என்று சொல்வதற்கு ஒரு குற்றமும் இவனிடத்தில் காணப்படவில்லை. புராணங்களும் இவன் மேல் ஒரு குற்றத்தையும் கற்பிக்கவில்லை. இப்படியிருக்கும்போது, இந்திரனுடைய தகப்பனாராகிய காசிப முனிவர் விஷ்ணுவை நோக்கித் தவமிருந்து, "இந்திர லோகத்தை மாவலி அரசாட்சி செய்கிறான்; அவனைக் கொல்வதற்காக நீர் எனக்குப் பிள்ளையாகப் பிறந்து அவனை ஒழிக்க வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார். திருமால் அதற்கு சம்மதித்து காசிப முனிவருக்குப் பிள்ளையாகப் பிறக்கிறார். இந்தப் பிள்ளைதான் வாமனவதாரம்.

இங்கு இதனை ஆராய்வோம். காசிப முனிவர் ஒரு பார்ப்பனன் இந்திரன் அவருடைய பிள்ளை என்றால், தேவர் என்று சொல்லப்படுவோர் பார்ப்பனர்கள் என்று ஏற்படுகிறது. தேவர்களாகிய சுரர்களுக்கு நேர் விரோதிகள் அசுரர்கள். இவர்கள் பார்ப்பனரல்லாதாராயிருக்க வேண்டும். எப்படியென்றால், சுரர்கள் அல்லது தேவர்கள் பார்ப்பனர்களாயிருந்தால், அசுரர் அல்லது தேவர்களல்லாதவர்கள் பார்ப்பனரல்லாதவராயிருக்கவேண்டும் என்று ஏற்படுகிறது. விஷ்ணு இந்திரனுக்குத் தம்பியாகப்பிறக்கிறார், அதாவது காசிபருக்குப் பிள்ளையாகப்பிறக்கிறார், அதுவும் தந்திரமுள்ள குள்ளப் பார்ப்பனனாகப்பிறக்கிறார். இதனால் விஷ்ணு எப்படிப்பட்டவர் என்பது விளங்கும். யாருக்கும் ஒரு துன்பமும் செய்யாமல் நன்மையையே செய்து கொண்டிருக்கும் மாவலியைக் கொல்வதற்காக விஷ்ணு அவதாரம் செய்தாரென்றால் "துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலகர்" என்று அவரை எவ்விதம் சொல்லக்கூடும்? அதற்கு மாறாக "சிஷ்ட நிக்கிரக துஷ்ட பரிபாலகர்" என்றுதான் இக்கதையைப் படிக்கும் அறிவாளிகள் சொல்வார்கள். அன்றியும், மும்மூர்த்திகளில் ஒருவர் கொடுத்த வரத்தை மற்றொருவர் அழிப்பது பொருத்தமாகுமா? இப்படிச் செய்வது அவர்களுக்குள் ஒற்றுமையின்மையைக் காட்டுகிறது அல்லவா? உதாரணமாக நமது அரசாங்கத்தில் மூன்று மந்திரிகள் இருக்கிறார்கள். முதல் மந்திரி ஒரு சட்டத்தை ஏற்படுத்துகிறார் என்று வைத்துக்கொள்வோம். அப்போது அச்சட்டத்தை உடைப்பதற்காக மற்றொரு மந்திரி முயற்சிக்கிறார் என்றும் வைத்துக் கொள்வோம். அப்போது அந்த அரசாங்கத்தின் நிலை என்னவாகும்? அந்த மந்திரியைப்பற்றி ஜனங்கள் தான் என்ன நினைக்கமாட்டார்கள்? மனிதர்களுக்கே இந்த நியாயம் தெரிந்திருக்க, தேவர்களுக்குத் தலைவராகிய மும்மூர்த்திகளில் ஒருவராகிய விஷ்ணுவே, தருமப் பிரபுவும் கொடை வள்ளலும் செங்கோலனுமாகிய மாவலியை, அதுவும் சிவனுடைய வரத்தால் மூன்று லோகங்களையும் அரசாள்வதற்கென்று பிறந்த அரசனைக் கொல்வதற்காகப் பிறந்தார் என்றால் அவருடைய அயோக்கியத் தனத்தை, அநியாயத்தை, பொறுப்பற்றத் தன்மையை என்னென்று சொல்வது? இருவரும் ஒரு கடவுளா? நல்லவரைக் கொல்வதுதான் கடவுள் லட்சணமோ? இப்படிப்பட்ட அயோக்கியர்களைக் கடவுள் என்று கோயில்கட்டிப் பூசிப்பதும், கும்பிடுவதும் அறிவுடைமையாகுமா? அந்தோ அநியாயம்! அநியாயம்! காசிபர் என்னும் பார்ப்பனனுக்குப் பிள்ளையாய்ப் பிறந்த விஷ்ணு எல்லா சாஸ்திரங்களையும் தாமாகவே தெரிந்து கொள்ளுகிறாரா? இவ்விதம் பெரியவனாகவளர்கிறார். ஆனால், வாமனனாக குள்ளப்பார்ப்பானாகத்தான் இருக்கிறார். அக்காலத்தில் பலிச்சக்கரவர்த்தி ஓர்யாகம் செய்துவிட்டு எல்லோருக்கும தானதருமங்களைக் குறைவிலலாமல் கொடுக்கிறார். இதையறிந்த குள்ளப் பார்ப்பனனாகிய விஷ்ணு, தன் சாதி வழக்கப்படி பிச்சை பெறுவதற்காக பலிச்சக்கரவர்த்தியிடம் செல்கிறார். பலி அவரை வரவேற்று உமக்கு என்ன வேண்டும் என்று கேட்கிறார். குள்ளப் பார்ப்பனன் "நான் இருந்து தவம் செய்வதற்காக மூன்று அடி மண் வேணும்" என்று கேட்கிறார். பலி கொடுக்க உடன்படுகிறார். அசுர குருவாகிய சுக்கிராசாரியார், இந்தப் பார்ப்பனன் விஷ்ணு அவதாரம். அவனுக்குத் தானம் செய்யாதே என்று சொல்லித் தடுக்கிறார். அதையும் கேளாமல் பலி மூன்றடி மண் தானம் செய்கிறான் உடனே விஷ்ணு ஆகாயம் அளவு உயர்ந்து தமது நீண்ட காலினால் பூமியை அளக்கிறார். மற்றொரு காலினால் தேவலோகத்தை அளக்கிறார். மூன்றாவது அடி வைத்தளப்பதற்கு இடம் இல்லையாம். ஆனதால், அவர் தமது காலை மாவலியின் தலைமேல்வைத்து அழுத்தினாராம்! அம்மட்டும் நில்லாமல் விஷ்ணு மிகவும் கோபமடைந்தாராம். கோபங்கொண்டு, பலிச்சக்கரவர்த்தியைச் சிறைப்படுத்திவிட்டு உலகங்களை யெல்லாம் பின்னும் விடுவதாகச் சொல்லி தமக்கு சமானமானவர் யாருமில்லை என்று சொல்லி கர்வப்பட்டாராம்.

பிச்சை வாங்கச் சென்ற குள்ளப் பார்ப்பனனுக்கு மாவலி அன்புடன் தானம் செய்கிறான். ஆனால், உபகாரம் செய்தவருக்கு அபகாரம் செய்கிறவனாகிய விஷ்ணு நன்றி கெட்டவனாய் மாவலியை அழிக்கப் பெரிய உருவம் எடுக்கிறான். இப்படிப்பட்ட நன்றி கெட்ட பாவி யாரேனும் உண்டா? மிருகங்களில் கேவலமாகிய காய்கூட நன்றி செய்தவரை நேசிக்கிறதே? செய்நன்றிமறதல் என்னும் மறந்த குணம் விஷ்ணுவுக்கு இல்லைபோலும்! அன்றியும் மாவலி எத்தனையோ ஏழைகளுக்குத் தானம் செய்தவன். நீதியோடு அரசாட்சிசெய்கிறவன். அவன்மேல் ஒரு சிறு குற்றமும் இல்லை. இத்தகைய மாசற்ற அரசனை விஷ்ணு ஒழிக்க எண்ணியது விஷ்ணுவின் இழிதன்மையை விளக்குகிறது. அன்றியும், விஷ்ணு ஒரு அடியால் மண்ணுலகத்தையும், இன்னொரு அடியால் விண்ணுலகத்தையும் அளந்துவிட்டு இன்னொரு அடி அளப்பதற்கு இடமில்லை என்று சொல்லி தன் காலை அவன் தலையில் வைத்து அழுத்தியது விஷ்ணுவின் அயோக்கியத்தனத்தைத் தெளிவாகத் தெரிவிக்கிறது. எப்படியென்றால், மாவலி மண்ணுலகம், விண்ணுலகம், பாதாள லோகம் என்னும் மூன்று அண்டங்களை ஆட்சி செய்கிறவன். மூன்று உலகங்களை ஆளும்படியாகத் தாம் சிவனும் அவனுக்கு வரங்கொடுத்திருக்கிறார். அவனும் அவ்விதமே மூன்று உலகங்களையும் ஆண்டு வருகிறான். அப்படியிருக்க, விஸ்வ ரூபங்கொண்ட விஷ்ணு மண்ணையும் விண்ணையும் மாத்திரம் அளந்துவிட்டு பாதாளத்தையும் அளக்காமல் இடமில்லை என்று சொல்லியது பொருத்தமாகத் தோன்றவில்லை. இரண்டு உலகங்களை யளக்கத் தெரிந்த விஷ்ணுவுக்கு பாதாள உலகத்தை அளக்கத் தெரியாமற்போன காரணம் யாதாயிருக்கக்கூடும்? தன் காலை பலியின் தலையில் வைத்து அவனை அவமானப் படுத்தவேண்டும் என்னும் எண்ணத்தோடுதான் அவர் அளக்க இடமில்லை என்று வஞ்சகமாகப் பொய் சொல்லியிருக்கவேண்டும். இவ்வளவும் செய்தது போதாதென்று அவனைச் சிறையில் வைக்கிறார். மேலும் காரணம் இல்லாமல் அளவுகடந்த மாகக் கோபித்துக் கொள்ளுகிறார். தன்னைவிடப் பெரியார் இல்லை என்றும் கர்வப்படுகிறார். இவர் உண்மையில் கடவுளாயிருந்தால் கோபம், கர்வம் முதலிய தீயகுணங்கள் இவருக்கு உண்டாகாது.

மாபலிச் சக்கரவர்த்தியைச் சிறையில் வைத்தபிறகு விஷ்ணு விண்ணுலகத்தை இந்திரனுக்குக் கொடுக்கிறார் இவர் இப்படிச் செய்தது அநியாயமல்லவா? உலகத்தில் பலசாலியான அரசன் மற்ற அரசர்களை அடக்கி ஆள்வது வழக்கம் அந்த முறைப்படி மாபலி இந்திரனை வென்று விண்ணுலகத்தை ஆள்கிறான் அதுவும் செங்கோல் செலுத்திக் குடி

களுக்குத் துன்பம் இல்லாமலும், தான தருமங்கள் செய்து கொண்டும் அரசாண்டிருந்தான். இவ்விதம் அரசாளும் சக்தியைச் சிவபெருமானே கொடுத்திருக்கிறார். அப்படியிருக்க இந்த செங்கோல் அரசனை கடவுள் எனப்படும் விஷ்ணு சிறையில் வைத்தது அநியாயம். இத்தகைய அநியாய செய்கையுடைய விஷ்ணுவைத் திரிவிக்கிரமன் என்றும், உலகளந்த பெருமாள் என்றும் நிலங்கடந்த நெடுமுடியண்ணல் என்றும் புகழ்ந்து அவருக்காகக் கோயில்கட்டி திருவிழா நடத்துவது பொருத்தமன்று

தேவர்களுக்காகப் பரிந்து வந்து மாபலி சக்கரவர்த்தியைச் சிறையில் வைத்த விஷ்ணு அகங்காரம் கொண்டு தன்னை எதிர்ப்பவர் ஒருவரும் இல்லை என்றுஎண்ணிக்கர்வப்பட்டு எல்லா அண்டங்களையும் பிளந்து விடுவேன் என்று சொல்லி ஆரவாரித்தாராம். அப்போது தேவர்கள் எல்லோரும் பயந்து கயிலைமலைக்குச் சென்று விஷ்ணுவின் அட்டகாசத்தைப் பற்றி இவனிடம் முறையிட்டு கொண்டார்களாம். அப்போது சிவன், வயிரவக்கடவுளை அனுப்ப அவர்போய்த்தண்டாயுதத்தைச்சுழற்றி வாமனனாகிய விஷ்ணுவின் மார்பில் ஓங்கி அடித்தாராம். விஷ்ணு மார்பு பிளவுபடக் கீழே விழுந்துவிட, வயிரவர் விஷ்ணுவின் கருமையான தோலை உரித்தெடுத்துக் கொண்டதோடு முதுகந்தண்டெலும்பையும் தமது கையில் பிடித்துக்கொண்டு கயிலாயஞ் சென்றாராம். அதன் பிறகு விஷ்ணு சிவனைத் துதித்து ஆணவச் செருக்கு நீங்கினாராம்.

இந்த ஆபாசத்தை என்னென்று சொல்வது! பார்ப்பனனாகப் பிறந்த விஷ்ணுவுக்கு ஏன் அகங்காரம் வந்தது? அண்டங்களை அழித்துவிடுவேன் என்று பயப்படுத்துகிறார். இப்படிச் செய்வது அவருக்கு ஒழுங்கா? அவர்களுக்கும் கடவுள் அல்லவா? காரணமின்றிக் குடிவெறி கொண்டவன் போல பேசுவதன் காரணமென்ன? பார்ப்பனப் பிள்ளையாகப் பிறந்த இவருக்குரஜோகுணம் எப்படி உண்டாயிற்று? மதுமாமிசம் சாப்பிட்டாரா? அப்படித்தான் இருக்கவேண்டும். அக்காலத்தில் யாகத்தின் பார்ப்பனர்கள் ஆட்டு மாமிசம், மாட்டுமாமிசங்களைச் சாப்பிட்டு சோமபானம் என்னும் சாராயத்தையும் குடிப்பது வழக்கம். அப்படி சாப்பிட்டிருந்தாலும் கடவுளாகிய இவருக்கு போதை ஏற்பட்டது விந்தையாகத் தானிருக்கிறது. நிற்க, இவர் யாருக்காகப் பரிந்துகொண்டு அவதாரம் செய்தாரோ! அந்த தேவர்களே அதாவது பிராமணர்களே நன்றி கெட்டவர்களாய் இவரைக் கொல்ல வேண்டும் என்று சிவனிடம் முறையிடுகிறார்கள். இந்தத்தேவர்கள் நன்றி கெட்டவர்கள் என்பதற்கு இதைவிட வேறு சான்று வேண்டுமோ? பிறகு வயிரவரை அனுப்ப அவர் இவரைக் கொல்கிறார். என்னே கடவுள்களின் லக்ஷணம்! பிறகு விஷ்ணு சய உருவோடு சிவனைக் கும்பிட்டு தமது ஆணவத்தை நீக்கிக்கொள்கிறார். ஆனால், மூன்று லோகங்களையும்அரசாளவேண்டுமென்று மாபலிச் சக்கரவர்த்திக்குச் சிவன் அளித்த வரத்தை விஷ்ணு நிராகரித்து விட்டதற்காக சிவன் யாதொரு நடவடிக்கையும், எடுத்துக்கொள்ளாதது வியப்பினும் வியப்பே! பாவம் அந்த எலி மாபலிச்சக்கரவர்த்தியாகப்பிறக்காமலிருந்தால் சுகமாகத் தன்பெண்டாட்டி பிள்ளைகளோடு தன் வளையில் வசித்துக் கொண்டிருக்கும். ஆனால், சிவன் கிருபையினாலும், விஷ்ணுவின் கருணையினாலும் பாவம் அந்த எலி அரசனாகப்பிறந்து சிறைச்சாலையில் கஷ்டப்பட நேர்ந்தது முனிவர்கள்விட்டது. ஒரு சிறு எலி விஷயத்தில் சிவன், விஷ்ணு தேவர்கள் ஆகிய இவர்களெல்லாம் இவ்வளவு தூரம் திருவிளையாடல் செய்ததும் இந்த எலியின் கதையை இவ்வளவு தூரம் அக்கரை எடுத்துக் கொண்டு புராணங்களில் பிரமாதமாகப் பாடி வைத்ததும் இந்த அண்டப் புளுகு ஆகாயப் புளுகு கதைகளை உண்மை என்று நம்பி உலகளந்த பெருமாளுக்குக் கோயில் கட்டி வைத்துப் பூஜை செய்து புண்ணியம் பெறுவதும் வெகு விந்தையாகத்தான் இருக்கிறது. ஆனால், நல்லதங்காள் கதை, டம்பாச்சாரி கதை, சதாரம் கதைகளை விட இந்த வாமனாவதாரக் கதை ஒரு விதத்திலும் சிறந்ததாக மாட்டாது. ஏனென்றால் அக்கதைகளில் எல்லாம் ஏதாகிலும் ஒரு நல்ல நீதி அடங்கியிருப்பதைக் காணலாம். ஆனால், ரிஷிகள் எழுதி வைத்த இந்தக் கட்டுக் கதையாகிய வாமனாவதாரக் கதையில் மனிதர் கொள்ள வேண்டிய ஒரு நீதியும் இல்லை என்பதே எமது துணிபு

இந்த ஆபாசமான அநியாயக் கதைகளைப் படித்துக் காலத்தை வீணாக்குவதைப் பார்க்கிலும் சயன்ஸ் என்னும் சாஸ்திரங்களைப் படித்து முன்னேற்றமடைவது அறிவுடைமையாகும். வாசகர்களே! சுயமரியாதை இரத்தம் உங்கள் தேகத்தில் ஓடவில்லையா? உங்களுக்கு தேசாபிமானமும், தேச முன்னேற்றத்தில் ஊக்கமும் இல்லையா? நமது பெரியோர்கள் புராணங்களை நம்பி மூட நம்பிக்கையுடையவர்களாய்த் தங்களையும் தங்கள் நாட்டையும் அடிமைத்தனத்திற்கு ஆளாக்கிக் கொண்டார்கள். நாமாவது இனி வரப்போகிற நமது எதிர்காலச் சந்ததியாருக்குச் சுதந்தரத்தையும், சுயமரியாதையையும் நிலை நாட்டிக் கொடுக்க வேண்டியது நமது கடமையல்லவா? சுதந்தரமும், சுயமரியாதையும் பெறவேண்டுமானால் கட்டுக் கதைகளாகிய புராணங்களையும், மூடப்பழக்க வழக்கங்களையும் பயங் கொள்ளித்தன மில்லாமல் தைரியமாக ஒழிக்கவேண்டும். இவைகளை ஒழிக்கிற வரையில் ஒருபோதும் விமோசனம் உண்டாகாது. அறியாமை அழிவதாக! பார்ப்பனீயம் பாழ்படுவதாக! புராணங்கள் புதையுண்டுபோவதாக! அறிவு விளங்குக! சுதந்திரமும், சுயமரியாதையும் ஓங்குக!

— —

செய்யாறு:—சென்ற 26, 27, 28 தேதிகளில் புரிசைக் கிராமத்தில் சுகாதார வாரக் கொண்டாட்டம் நடைபெற்றது. அதுகாலை திரு. பி. எஸ். துய்யாத்துரை அவர்கள் தலைமை வகித்து அரியதோர் பேருரை ஆற்றினர்.



## நான் யார் தெரியுமா?

ஒரு வருஷத்திற்குள் 8000 பிள்ளைகளைப் பெற்றவன் நான்!



என்னைப்பற்றி எந்த ஊரிலே வேண்டுமானாலும் கேளுங்கள். எங்கப்பன் மாதா மாதம் வந்து எங்களைக் குதூஹலப்படுத்தி விட்டுப் போகிறானென்று பெருமையோடு சொல்லிக் கொள்வார்கள். தினசரி முப்பது அல்லது நாற்பது புதிய பிள்ளைகளைப் பெற்று வருகிறேன். இன்னும் சலிக்காமல் இருக்கிறேன். குறைந்த பட்சம் 30,000 பிள்ளைகளையாவது பெற வேண்டுமென்பது நோக்கம். ஆனால், அப்பனைப் பார்க்கவேண்டுமானால் காசு கொடுத்துத்தான் பார்க்கவேண்டும். வருஷா வருஷம் 1 ரூபாய் கொடுத்தால் என்னை வருஷத்திற்குப் பன்னிரண்டு முறை பார்க்கலாம். ஒரு தடவை மாதிரியாகப் பார்க்கவேண்டுமானால் அரையணா செலவு செய்து ஒரு கார்டு எழுதுங்கள் மறுநாளே உங்கள் இருப்பிடம் தேடி வந்து குதித்திடுவேன். என் பெயர் படத்தில் பாருங்கள். என் இருப்பிடம்,

(3) 244, தங்கசாலை வீதி, சென்னை.




விலாசம்
**தனலக்ஷ்மி மோட்டார் கம்பெனி**
நெ. இராயப்பேட்டை ஐரோட், கோசப்பேட்டை
**மைலாப்பூர், மதராஸ்.**

நிமிஷக்கணக்கில் குணமடைவதை விட்டு ஏன் கவலைப்படுகிறாய்?
அபூர்வ சிகிச்சை! இதை—சோதனை செய் ஆச்சரிய நிவர்த்தி!!

## சுவாச காச நிவாரணி.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாச காச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சீதளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, கரகரப்பு, எரிச்சல், வலி, புண் முதலியவற்றையும், சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும் நாசியிலும் நீர்வடிதல், குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளையும் நமது ஆஸ்தமா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்தி செய்வதுடன் இரத்தத்தை சுத்தி செய்தும் கெட்டியான கபத்தை இளகச்செய்தும் கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய்ப்பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும் இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது.

45 நாள் ஒரு மண்டலம் உபயோகிக்கக்கூடிய டின் 1க்கு ரூ. 1—4.

தபால் கூலி அணா. 4. ஒரு டஜன் டின் விலை ரூ. 9.
6 டின் விலை ரூ. 5-4. 3 டின் விலை ரூ. 3.
முதலியனார்களுக்கு முன் பணம் ரூ. 2-8. அனுப்பவேண்டும்.
முன் பணம் இல்லாத ஆர்டர்களை கவனிக்கப்படமாட்டாது.

புரொப்ரைட்டர், திருநாவுக்கரசு வைத்தியசாலை,
அங்காளம்மன் கோவில் தெரு, செவ்வாய்ப்பேட்டை, சேலம். S. I.

# சமணர்களின் கொலைக்கு சம்பந்தரே காரணம்

இதைப்பற்றி 18-8-29ல் வெளியான 'குடி அரசு' வெளியீடு 8-ம் பக்கத்தில் இராவணப்பிரியர் அநேக மேற்கோள்களோடு வெளியிட்டிருக்கின்றார்கள். அங்ஙனமிருந்தும் சில பண்டித சிகாமணிகள் "சம்பந்தரோடு சமணர்கள் கனல் புனல் வாதத்தில் தோற்கப்பெற்றால் தாமாகவே கழுவேறி விடுவதாகச் செய்துகொண்ட சபதத்தின்படி அவர்களே செய்து கொண்டதற்குச் சம்பந்தர் காரணராகார் ஏனெனில் சம்பந்தரது கரங்களால் அவர்களைக் கொல்லவுமில்லை, கொலைக்காளாக வற்புறுத்தவுமில்லை" என்று கூறுகின்றார்கள். அங்ஙனமானால் சம்பந்தர் சமணர்களாக கனல் புனல் வாதத்தில் எந்த முறையில் வென்றார்? (1) இவர் கொண்டுள்ள ஜகத் காரண இறைவன் சிவபெருமான் ஒருவரேயன்றி அவருக்கயலாய் எத்தெய்வமும் எங்குமின்று. ஆதலின் அவரை வழிபட்டுய்யும் சைவ சமயமே மெய்ச்சமயம்; அதற்கயலாயுள்ள சமய மனைத்தும் பொய்ச் சமயமென்று உலகனைத்தும் உறுதியாயுணர்ந்து வழிபட்டுய்ய அச்சிவபெருமானே சம்பந்தர் வாயிலாய் அச் சமணர்களெல்லோரையும் கழுவிலேற்றிக் கொன்றாரா? (2) அல்லது சம்பந்தரது இச்சா பிரயத்தினத்திற்கு அச்சிவபெருமானே அனுகூலமாயிருந்து தனக்கு வெற்றி கிடைக்கும்படி செய்தாரா? (3) அல்லது இவரது மனோ வல்லபத்தினாலேயே வெற்றி பெற்றாரா? சிவபெருமானே சம்பந்தர் வாயிலாய் அங்ஙனம் செய்வித்தாரெனில், வைதீக சைவசித்தாந்த ரீதியாய் சமணர்களும் சம்பந்தரும் சிவபெருமானால் ஆட்டுவிக்க, ஆடியும் அடக்குவிக்க அடங்கியும், கூட்டுவிக்கக் கூடியும், பாடுவிக்கப்பப் பாடியும், பணிவிக்கப் பணிந்தும், காட்டுவிக்கக் காண்பவர்களுமாயிருக்க, இயற்கைக்கு மாறாக அக்கினியிலிட்ட ஓலை அழியாது நிற்கவும் புனலின் போக்கில் போட்டேடு எதிர்த்து வரவுஞ் செய்ததோடு, எலும்பைப் பெண்ணாக்கியும் எத்தனையோ காலத்துக்குமுன் முதலையுண்டு ஜீரணித்துப் போன பாலனை உயிர்த்தெழுந்து வரச்செய்தும், ஆண் பனையைப் பெண் பனையாக்கியும் இன்னோரன்ன அநேக அற்புதச் செயல்களை ஆற்றியும், அருளே திருமேனியாயிருந்து ஒன்றியே அனைத்துயிரையும் பற்றி வருத்தும் அனாதி மலத்தடையினின்று அகற்றியாட்கொள்ளுந் தன்மையே சுபாவமாயிருந்திலகுந் தயா சமுத்திரன் இச்சமணர்களது அறியாமையாலுண்டான பொய்யுணர்வைப் போக்கித் தன்னையே நம்பியும் மெய்யுணர்வைத் தந்து இரட்சித்தால் இவரது பேரருட்டிறத்திற்குப் பேரிழுக்கேற்பட்டு விடுமா? அக்காலத்து அங்ஙனம் செய்வித்த ஆண்டவன் அதன் பின்னர் வந்த மகமதியர்களுக்குப் பயந்து உருவத் திருமேனிகளெல்லாம் மண்ணுள் மறைந்திருந்து இன்றும் நாளையுமெழுந்தருளுவதெக் காரணத்தாலோ? அதன் பின்னர் வந்த ஆங்கிலேயரது கிறிஸ்துவ மதத்தவர்களால் வருடந்தோறும் ஆயிரக் கணக்கான இந்துக்கள் அவர்களது மதத்தில் சேர்ந்து கொண்டிருப்பதை யெந்தவருள் நோக்காலேற்றுக் கொண்டிருக்கிறாரோ அறிகிலம்.

அகண்ட பரிபூரண நிஷ்கள நிஷ்கிரியத் தன்மையால் சூரியன் சமுத்திராதிகளின் சந்நிதியில் சராசரங்களின் சிருஷ்டியாதிகள் நிகழ்வன போன்று, இறைவனது சந்நிதியில் அவரது இச்சா பிரயத்தனமின்றித் தன்னருட் சக்தி விசேடத்தால் பஞ்ச கிருத்தியங்களை நடாத்தும் பரமேஸ்வரன், தோத்திரப் பிரியத்தன்மையால் தன்னை மதித்துத் துதியாத சமணக் குழுவினரிடம் குரோதங்கொண்டு அவர்களைக் கொலைக்காளாக்கியது யெந்தக் கருணை ததும்பியெழுந்ததோ தெரியவில்லை. அவரது அறக்கருணை மறக்கருணையென்னு மிரண்டில் சமணர்களது தீச்செயலாகிய கன்மத்திற்கனுகுணமாக மறக்கருணையினாலேயே அங்ஙனம் மாள்வித்தாரெனில், மறக்கருணையால் அவர்களை மாய்த்து அதோகதியாக்கிய தெய்வம் தனது அறக்கருணையாலவர்களது அறிவைத் திருத்தவிடின் அவரது அருட்சக்தி முழுதும் அழிந்துபோமேயென்ற அச்சமுற்று அவர்களை அங்ஙனம் அழியச்செய்தாரோ? எந்தக் கருணையாலும் ஜீவகாருண்ய விரதியர்களான சமணர்கள் ஈடேறாமல் போனார்களேயன்றி இறைவனது இயற்கை அருட்டிறத்திற்குப் பாத்திரராகக் காண்கிலமே.

இவரது பேரருட்டிறம் இன்று மெவர்க்காகவிருக்கின்றதோ தெரியவில்லை. ஆட்டுவித்தாலாடவும் அறிவித்தா லறியுந்தன்மையரான உயிர்கள் தனக்கெனக் கிஞ்சிற்றுஞ் சுதந்தர இச்சை ஞானம் முயற்சி வடிவ கர்த்தாத்தன்மை இன்றி கருவியைப் போன்றிருக்க, அவர்கட்கு அனாதி கன்மத்தன்மை கற்பிப்பது பொருந்தவில்லையே யென்பதாக தாயுமான சுவாமிகள் "என்னை முந்தானின் னையன்றி யில்லையென்றால், யான் முனமே பண்ணுவினையேது பராபரமே" யென்று பகர்ந்திருக்க, அனாதியாய உயிர்கட்குக் கன்ம மலம் எவ்வாறு கலக்கலாயிற்றோ? ஆட்டுவித்தா லாடவும், அறிவித்தாலறியுந் தன்மைத் தர்ம மிருத்தலினாலேயே உயிர்கட்கு அனாதியே கன்ம மல மிருக்கலாயிற்று. அங்ஙனமிருப்பினும் தனது இச்சா பிரயத்தனத்தால தனது கோரிக்கையனைத்துங் குறைவின்றி நிறைவேத்திக்கொள்ளக் கூடாமையினாலேயே ஜீவர்கள் பரதந்திரர்களாயிருக்கின்றார்களென்னில், சுதந்திர கர்த்தத்வ மில்லாதவர்கட்கு சுகதுக்க அனுபவ போக்த்தத்வம் பொருந்துவதும் நியாயந்தானா? அற்ப கர்த்தத் மிருத்தலால் போக்தத்வமும் பொருந்துமென்னில், இந்த அற்பகர்த்தத்வந்தானா அபார ஆணவாதி மலங்களை யகற்றிவிடலாகும்? அங்ஙன மகற்றிக்கொள்ளக் கூடாமையினால் தான் அவர்களை ஆட்கொள்ளச் சம்பந்தராதிய தேசிகத் திருமேனிகளா யெழுந்தருளினாரென்னில் அத்தேசிகோத்தமர் அச்சமணர்களை வாதில் வென்று அறவே யழித்தனரன்றி அவரது பேரருட்டிறத்தாலும் ஆற்றலுடைமையாலும் அவர்களது அறிவை மாற்றித் தனது சமயத்தை நம்பச் செய்து ஆதரிக்கக் காணோமே; அங்ஙனம் தனது சமயத்தைப் பாதுகாக்கு மக்கறையுள்ள பரமசிவன் தனது சமயக் குழந்தைகள் எத்தனையோ கோடிக்கணக்காய் இன்றையும் இவரது சமயத்தையும் புறக்கணித்த மதஸ்தர்களாய் காசமாவதை எந்தக் கருணையாலேற்றுக் கொண்டிருக்கிறாரோ? அக்காலத்துப் புனல் கனலை வெல்லச்செய்த ஏடுகளைப் பின்னர் கரையான் புற்றுக்கு இறையாக்கிய காரணம் யாதோ அறிகிலம்.

ஒவ்வொருவரும் அன்னியருக்குண்டாகும் துக்கத்தைச் சகியாது தன்னு லியன்றவரையி லுதவி அவர்களிடத்து அன்பு செய்யின் பரஸ்பரம் இன்புற்று வாழ்வதும் அங்ஙனமின்றி அன்னிய உயிர்கள் எக்கட்சியாயினும் தமது சுகமே பெரிதென்று அவ்வுயிர்களிடத்துக் கிஞ்சிற்று மிரக்காத அன்புடையார்களிடையது துன்பமே கண்கூடாயிருக்கத் தனக்கு நேர்ந்துள்ள துக்கத்தைச் சகியாது வாயிட்டுச் சொல்ல, வலி இன்றி அலறி பதைபதைத்துத் துடிதுடிக்கக் காண்பிப்பதில் கிஞ்சிற்று மிரக்கம் காட்டாது தமது புசிப்பார்த்தமாய் அவ்வாடுகளின் வாயில் நூல் கயிற்றால் கட்டித் தூக்கிப் போட்டுக் கால்களை அமுக்கிக் கொண்டு தள்ளித் துடிக்க அதன் விரையைக் கிட்டிக் கழியால் கட்டிக் கசக்கிக் கொன்று அறுத்து அதன் மாமிசத்தைத் தீயில் வாட்டித் தின்று ஜீரணத்தை தேவர்கள் ஏற்று திருப்தியடைந்து மேக வாகனத்தின்மேற் சவாரி செய்து மண்ணுலகில் மழை பெய்யச்செய்து உலகைக் காப்பாற்றி வருகிறாரென்னும் வழக்கை இக்காலத்து எந்தப் பிரமாணத்தாலேற்கின்றீர்களோ அறிகிலம். இப்பொழுதும் பசு பதியாகம் பவுண்டரியாகம புரிந்து வருவதை அச்சாதியார்களே அருவருத்தால் அவர்களையும் ஜாதி ப்ரஷ்டம் செய்கிறதும் பண்டித சிகாமணிகளே உமது பகுத்தறிவுக்குப் பொருத்தமாகத் தானா புலனாகின்றது?

இத்தகைய நீய கொலை பாதகந்தானே சம்பந்தரும் "பறப்பைப் படுத்தெங்கும் பசுவேட்டெரியோம்பும் சிறப்பார் வாழ்தில்லைச்சிற்றம்பலம்" என்றும், "வேத வேள்வியை நிந்தனை செய்துழல் ஆதமில்லியமணொடு தேரரை வாதில் வென்றழிக்கத் திருவுள்ளமே" என்பதினாலேயே வேள்வி தர்மத்தை எவ்வளவு ஆதரிப்பதாகத் தெரிகின்றது. "அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றனுயிர் செகுத்துண்ணாமை நன்று" என்னும் திருவள்ளுவர் வாக்குக்கும் இவரது வாக்கு எந்த முறையில் சிறந்ததாகக் கொண்டாடுவன் சந்திரகளோ அறிகிலம். அவர் ஞானப்பூங்கோதையம்மையாரால் பாலில் ஞானம் கரைத்துப் பருகப் பெற்றவுடனே பொங்கியெழுந்த பக்தி மேலீட்டால் அம்மனது தனங்களின் கடினம் மென்மையை உய்த்துணர்ந்ததினாலன்றோ 'வடந்திகழ்மென்முலையாளைப் பாகமதாக தீத்து" என்றும "பட்டிலிசந்த வல்குலாள் பாவையாளோர் பாகமாய்" என்று பாடியுள்ள பாட்டிலொழுகும் பத்திரசத்தைச் சப்பிடச் சாப்பிட ஆனந்த பரவசமாவதினாலன்றோ சம்பந்தரால் சமணர்கட்கு நேர்ந்த படுகொலை தெரியாமல் போகின்றது. எனதன்பார்ந்த பண்டித சிகாமணிகாள்! இவர்களது பாடல்களிலுள்ள யெந்தச் சுவையும் நம்மடிமைத் தன்மையுணர்ந்து அகத்தையுமகற்று மென்பதைக் கனவிலுங் கருதவேண்டாம். சம்பந்தர் சமணர்களைக்கொலைக்காளாக்கியகுப்பைகளைக் கிளரக் கிளரச் செம்பொருளொளிவுஞ்சித்திப்பதரிது. இவர்கள் புகழ்ந்துகொண்டாடியுள்ள வேள்வியினாலேயே நந்தேசத்தில் பலி இட்டு பக்திசெய்யும் பாமரத்தன்மை மல்கி இருக்கின்றது. இவ்வேள்வி பூர்வமாய் புலால் புசிக்கும் பார்ப்பனர்கள் சிறு தெய்வங்கட்கு இடும்பலி வாயிலாய் மாமிசமேன புசிக்கலாகாது? கிராமாந்தரங்களில் நடைபெறும் (புத்தூர் குழுமியாயி) பிடாரித் திருவிழாக்களை இவர்களே தலைமையாயிருந்து நடைபெறச்செய்து பூசித்தும் வரும்பொழுது இவர்கள் மட்டும் பலியிடாதிருக்க பிராமணரல்லாதாரை மட்டும் பலி இடச்செய்யுங் காரணத்தைக் கிஞ்சிற்றுக் கருதிப்பார்க்குமிடத்து இவர்களிடத்துள்ள வஞ்சகம் கொஞ்சமேனும் விளங்காமலா போகும். கொலை, களவுகள், காமம், கோபம் விட்டாலன்றோ "மலைவிலக்காய் நின்னருள் தான வாய்க்கும் பராபரமே" என்றுள்ள வாக்கியத்திற்கு மாறாகக் கொலையாதிகளாலேயே குல தெய்வமாதிகள் திருப்தியடைந்து இவர்களது கோரிக்கைகளைக் குறைவற நிறைவேற்றி வைப்பதாகக் கொண்டுள்ள மூடக்கொள்கைகள் நமது நாட்டில் மென்மேலும் அதிகரித்துக் கொண்டுவருகின்றன. இக்கொள்கைகள் நமது ஜன சமூகத்திற்கு எவ்வளவு இழிவாயும், முன்னேற்றத் தடையாயு மிருப்பதைத் தாங்கள் தெரியாததன்றே. இவைகளை யகற்றுதற்குப் போதிய பிரயாசை முதலி லெடுப்பீர்களேயாகில்! அத்தகைய தொண்டு நம்

ரோஜா முத்தையா

ஜன சமூகத்திற்கு எவ்வளவோ நன்மை பயக்குமே. அத்தகைய தொண்டில் தங்களது ஆற்றலைக் காண்பிக்க முன்வருவதே தங்களது பெருந் தன்மையாகும்.

குடி அரசு நாஸ்திகப் பிரசாரம் செய்ய வந்திருப்பதாகத் தாங்கள் கொண்டிருப்பது தப்பெண்ணமாகும். என்னையெனில், நமக்கு முன்னிலையாகத் தோற்றும் ஒவ்வொரு நாமரூபங்களும் சூட்சும அணுக்களின் சேர்க்கையாலாகிய விகாரக் காரியப் பொருளென்பதும் அந்த சூட்சும அணுக்களும் அவைகட்குச் சுபாவமாயுள்ள அளவிறந்த சக்திகளினாலேயே செடி மர மாதிகளாய் சேர்ந்த காலத்து அக்காரியங்களிடத்து நூதனமான குணமாதிகள் தோன்றியும் அக்காரண அணுக்கள்பிரிந்த காலத்துக் காரிய சொரூபம் தோற்றாததுமாயிருப்பதும் இக்காரியங்களின் சேர்க்கைத் தொகுதியே. இச்சகத்தாகத் தோற்றுவதும் இதுபோன்றே சூரிய சந்திர நட்சத்திர அண்டங்கள் அளவிறந்தன ஆகாய விரிவில் தோன்றுவனவனைத்தும் இருந்திலகுவதற்கு இடமாக வெளி இருக்க வேண்டுமென்பதை எவரும் இல்லையென்று சொல்லவியலாது. அந்த வெளியென்னும் ஆகாசத்தையே மேல் நாட்டார் ஆக்ஸிஜன், நைட்ரோஜன், கார்பன் முதலான வாயுக்களாகவும் ஈதராகவும், எலக்டரான்களாகவும், ரேடியமாகவும், பரமாணுக்கள் அணுக்களாயிருப்பதாகவும் கூறுகின்றார்கள். இவையனைத்தும் போக்குவரத்துற்றதாய் அகண்ட பதார்த்தங்களாயிருப்பதால் இவைகள் தனக்குத் தானே இடமாகவும் பொருளாகவுமிருக்கக் கூடாமையால் இவற்றிற்கு வேறாக இட பதார்த்தமிருக்க வேண்டும். இவ்விடை வெளியையே புத்தர் பெருமான் சூனியமென்றனர். இச் சூனியமும் அறிவிற்குப் பின்னும் தோற்றுமையால் அச்சூனிய மென்னும் ஆகாசத்தையே சிதாகாசமாய்ச் செப்புவதாக ஆதி சங்கரர் அறிவித்திருக்கின்றார்கள். அந்த ஆகாசத்தையும் இல்லையென்று குடி அரசு நாஸ்திகம் ஸ்தாபிக்க வந்ததல்லவென்பதைத் திரு. கைவல்யமவர்களெழுதி வரும் கட்டுரைகளைக் கவனித்திருப்போர்க்கு நன்கு விளங்காமற் போகாது; அதைத் தெரிந்து கொள்வதற்கேற்ற அறிவின் அபிவிருத்திச் சாதனங்களைக் காலதேச வர்த்தமானங்களுக் கேற்பப் போதிப்பதை விடுத்துச் சிறிது விளக்குமுற்று வரும் நம்மக்களின் அறிவையும் மலினமடைய அனாவசியமான ஆலய புராணாதிகளிலீடுபடச் செய்யும் பிரசாரம் அனாவசியமென்று குடி அரசு கூறுவதுதானா தங்களுக்கு நாஸ்திகமாகத் தோற்றுகிறது. அவ்வாலயாதிகளில் நடைபெறு மொழுக்கீனங்கள் தங்களுக்கும் தெரியாமலாயிருக்கின்றன? அவைகளை வெளிப்படுத்துவதுதானா நாஸ்திகப் பிரசாரமாகிவிடும். ஒரு வாராகிலும் இந்த நாஸ்திகப் பிரசாரத்தினுண்மை தங்களுக்குத் தெரியாததன்று. ஆனால் புராணாலயங்களையே புகழ்ந்து பயின்று வந்திருக்கும் பழக்க வாசனையைச் சுலபமாய் நீக்கிக்கொள்ள முடியாமையாலும் இப்பொழுது நம்மவர்களில் பெரும்பாலோர் கொண்டுள்ள புராண ஆலய நம்பிக்கையை யனுசரித்துப் பிரசாரம் செய்வதினாலேயே தமக்குப் புகழும் ஜீவனமும் சாத்தியமாவதை முன்னிட்டே குடி அரசு நாஸ்திகப் பிரசாரம் செய்வதாக பறையறைகின்றீர்கள். கால சுபாவத்தால் இதினுண்மை ஜன சமூக முணராமல் போகாது. அதற்குள்ளாக இந்த நாத்திகப் பிரசாரம் நாசமாவதற்குச் சம்பந்தரைப்போன்ற அவதாரங்கள் எழுந்தருளுவதற்கு ஆத்திரமும் அவசரமுங்கொள்வதினாலாவதென்னே. தம் போன்ற பண்டித பக்த சிகாமணிகளின் கோரிக்கையின்படியே சாத்தியமாயிருந்தால் இவ்வுலகனைத்தும் இதுகாறும் சைவ சமயிகளாகவே இருக்கவேண்டும்; அங்ஙனமிலகுகின்றதா? ஆதலின் இது எத்தகைய ஆத்திரமும் அவசரமுமாகுமா என்பதை யோசியுங்கள்.

# செய்தித்திரள்

சின்னக்காளாம்பட்டி: — இவ்வூரில் உள்ள சோமவார பஜனை மடம் இப்பொழுது சுயமரியாதைப் பஜனை ஆலயமாக மாற்றப்பட்டு, அங்கு சுயமரியாதை இன்னிசைக் கீதங்களே இசைக்கப்பெற்று வருகின்றன என்று திரு. வெள்ளைச்சாமிப் பாண்டியன் வரைகின்றார்.

* * *

வளவனூர்:—வேளாண் மரபின் தோன்றல் திரு. முத்துக்குமாரசுவாமி அவர்கள் 18 ஆண்டுடைய ஒரு பெண்ணை மணம்புரிய விரும்புகின்றார். இவர் ஓர் வர்த்தகராம். பெண் எக்குலத்தினராயினும், விதவையாயினும், கன்னியாயினும் சுயமரியாதை நெறியில் மணம் செய்து கொள்ள இவர் விழைகின்றார்.

[இத்தகைய பிரசுரங்களை பொருள் உடையவர்கள் விளம்பரக்கூலி அளித்துப் பிரசுரித்துக் கொள்ளல் வேண்டும். ப-ர்]

* * *

அமராவதி புதூர்:—இங்கு புரட்டாசி 13, 14-ல் தனவைசிய ஆரம்பக் கலாசாலைகளின் மாணவர் பந்தய விளையாட்டு முதலிய வைபவங்கள் குமரன் ஆசிரியர் திரு சொ. முருகப்பர் அவர்கள் தலைமையில் நடாத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

* * *

குமாரெட்டையபுரம்:—இவ்வூரில் ஆவணி முதற்கொண்டு சுயமரியாதை வாலிபர் சங்கம் ஒன்று நிறுவப் பெற்றுள்ளது. நிறுவிய நாள் விழாவன்று திரு. பெருமாள் ரெட்டியார் சுயமரியாதை இயக்க மாண்பு என்னும் விஷயத்தைப்பற்றி நலம்படச் சொன்மாரி பொழிந்தனர்.

* * *

கபிஸ்தலம்:—இவ்வூரில் அறிவிற் சிறந்த, அழகில் மிகுந்த கனகசபாபதி என்னும் சிறுவன் எத்துணையோ தெய்வங்களை அவனது தாய் வேண்டியும், சுரநோயால் மாண்டனன் என்றும், மரணத்தைத் தடைசெய்யமுடியாத கடவுள்கட்கும் தெய்வங்கட்கும் வீணாகப் பலிபூசை வழங்குவது மடமை என்றும் திரு. சிவானந்தம் அவர்கள் வரைகின்றார்.

* * *

அம்மனூர்: —இவ்வூரில் ஆதிதிராவிட இளைஞர் சங்கம் வெகு விமரிசையாய்க் கூடியதென்றும், அதுகாலை பல சுயமரியாதைப் பேருரைகள் நிகழ்த்தப் பெற்றனவென்றும் காரியதரிசி திரு. சி. எஸ். முனிசாமி தெரிவிக்கின்றார்.

* * *

கரூர்:— வள்ளுவக்குடிவாசி திரு. சேதுமாணிக்கம் என்பவர் தனது சாதிப்பட்டம், சமயக்குறி முதலியவைகளைத் துறந்து சுயமரியாதைத் தூரந்தரராய்த் திகழ்கின்றனராம்.

* * *

வாலாஜாபாத்:— மதுவிலக்க அவசியத்தைப்பற்றி நன்கு எடுத்துக் காட்டவல்ல ஓர் நாடகம் தேவையென்று வாலாஜாபாத் இந்துமத பாடசாலை உபாத்தியாயர் ஒருவர் அறிவிக்கின்றார்.

* * *

இராமேச்சுரம்: — இவ்வூரிலுள்ள கோயிலில் அங்குள்ள சில பார்ப்பனப் புரோகிதர்கள் கோயிலுக்கு வரும் பெண்கள் மேல் வீழ்ந்து இடித்துக் காமத் திருவிளையாடல் புரிவதாயும் இவ்வித அக்கிரமங்கள் இக்கோயிலில் வாலாயமாய் நடைபெறுவதாயும் ஒரு நிருபர் தெரிவிக்கின்றார்.

* * *

முசிறி:—முசிறிதாலூகா தாசில்தார் அவர்கள் திருச்சி கவர்ன்மெண்ட் டிரெயினிங் ஸ்கூல் மாணவர் ஆதித்திராவிட பி. அந்தோனி முத்து என்பவரை கௌரவ மாஜிஸ்டிரேட்டாக தேர்ந்தெடுத்ததற்காக முசிறி தாசில்தார் அவர்களுக்கு முசிறி தாலூகா ஆதித்திராவிடர்கள் தமது நன்றியை தெரிவித்துக் கொள்ளுகிறார்கள் என்று சிக்கத்தம்பூர் போர்டு ஸ்கூல் மாஸ்டர் பி. மரியண்ணன் தெரிவிக்கின்றார்.

சென்னை அரசாங்க சுகாதார மந்திரி அவர்களாலும்,
அநேக ஜமீன்தாரர், பிரபுக்கள், ஜட்ஜுகள், வக்கீல்கள்,
டாக்டர்களாலும் தங்க மெடல்களும் நற்சாக்ஷிகளும் பெற்ற
தண்டபாணி வைத்தியசாலையின் மருந்துகள்.

அமிர்தம்

குடலைப்பற்றிய எல்லா வியாதிகளையும்போக்கும். அன்றாடம் மலப் பிரவர்த்தியைக் கிரமமாய் வெளிப்படுத்தி மூலாதார உஷ்ணம், மூல வியாதிகள் முதலிய எல்லா வியாதிகளையும் போக்கும். 1 சேர் டின் ரூ. 2.

பிரமமேக நிவாரணி

எவ்வளவு காலம் நீடித்த வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு வியாதிகளையும் உடனே குணப்படுத்தக் கூடியது.

மருந்து புட்டி 1-க்கு ரூ. 2-4-0.

அமிர்தரசம்

சகல நோய்களுக்கும், வலிகளுக்கும், உள்ளுக்கும், மேலுக்கும் உபயோகிக்கக் கூடியது. துளிக் கணக்கில் உபயோகிக்க மணிக்கணக்கில் சுகம்பெறலாம்.

புட்டி 1-க்கு ரூ. 1—8—0.

மகாமன்மத சிந்தாமணி லேகியம்

அபாரமான தாதுபுஷ்டியும், ஜீரண சக்தியும், புத்திக் கூர்மையும், பரமானந்த சுருசுருப்பும், ஞாபக சக்தியும் கொடுக்கக் கூடியது.

முதல்நம்பர் 1-சேர்டின் ரூ 3.

[வி. பி. வேறு.] அந்நிய நாட்டார் தபால் செலவு உள்பட முன்பணம் அனுப்ப வேண்டியது. விபரமான பெரிய காட்லாக் இனாமாய் அனுப்பப்படும்.

போலி டாக்டர்களிடம், போலி மருந்துகளை வாங்கி ஏமாந்து போகாமல் இருக்கும்படி பொது ஜனங்களை எச்சரிக்கின்றோம்

தண்டபாணி வைத்தியசாலை,
தபால் பெட்டி 292, சைனாபஜார், மதராஸ்.

'பல் ஜாக்கிரதை'

தங்கள் விலாசம் தெரிவித்தால் சுகஜீவி கல்நார் பற்பொடி இனாமாக அனுப்பப்படும்.

எங்கள் விலாசம்:—

ஏ. இ. முகையத்தீன் மெடிக்கல் ஹால்,
வலங்கைமான், தஞ்சை ஜில்லா.

# திரு. ஆர். கே. ஷண்முகம் அவர்கள் பேருரை

முனிசிபல் பத்திரத்திற்குப் பதிலளிக்கையில் திரு. ஆர். கே. ஷண்முகம் கூறியதாவது:—

ஈரோடு முனிசிபல் சபைத்தலைவரே! அங்கத்தினர்களே! சீமாட்டிகளே! கனவான்களே? எனக்கு இதுபோது அளிக்கப்பட்ட பத்திரத்திற்கு என்னை ஈரோடு முனிசிபல் சபை அங்கத்தினர்கள் நன்றியெனும் கட்டுப்பாட்டிற்கு உட்படுத்திவிட்டனரென்று யான் உண்மையாகக் கூறுவேன். முனிசிபல் சபையால் பத்திரமொன்றளிக்கப்படுவது எவரும் இறுமாப்படையத்தக்க கௌரவமென்பதை யான் அறியாமலில்லை. ஈரோடு முனிசிபாலிடியானது அத்தகைய பெரிய கௌரவத்தை எனக்களிப்பது தகுதியென்று நினைத்திருக்குமாயின், யான் அதனை எத்தகைய பெரிய சேவை செய்ததற்காகவென்று யான் எண்ணப் பேசுவதில்லை. மற்றும் தேசசேவைக்கு மேன்மேலும் முழுமனத்துடன் முன்னணியில் நிற்கத் தூண்டுதற்கருவியாகக் கருதுவேன். யான் கூறியதுபோன்று, யான் ஒரு முனிசிபாலிடி அளிக்கும் பத்திரத்தினால் ஏற்படும் கௌரவத்தை அறியாமலுமில்லை; இம்மாகாணத்திலும் மற்ற விடங்களிலும் ஆர்வமிக்கவர்களால் பல முனிசிபாலிடிகளிலும் ஸ்தல ஸ்தாபனங்களிலும் தேச முன்னேற்றத்திற்கான பெரும்பணிகள் ஆற்றப்பட்டு வருகின்றனவென்பதனையும் யான் அறியாமலில்லை. அப்பணிகளே தேச முன்னேற்றத்திற்குரியனவென்று கூறப்படுவது மிகவும் பொருத்தமானதாகும். யான் தொடக்கத்தில் எனது பட்டணத்திலுள்ள முனிசிபாலிடியிலேயே தொண்டாற்றத் தலைப்பட்டேன். பின்பு யான் எனது முனிசிபல் பட்டணத்திற்கு வெளியே அரசியல் தொண்டில் வசீகரிக்கப்பட்டபோதும் ஒரு அரசியல் வாதியின் வாழ்க்கைக்கு எவ்வளவு புகழ்ச்சி யேற்பட்டபோதிலும், நிலைக்கத்தக்க சரியான தொண்டு ஒருவரது கிராமத்திலோ அல்லது நகரிலோ தான் ஆற்றப்படுகிறதென்ற உண்மையை ஒருபோதும் மறந்தவனல்லன். இந்நோக்கத்துடனே தான் இந்திய சட்டசபை அங்கத்தினராகவுமிருப்பதிலும் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய கூட்டத்திற்கும் சர்வதேச சங்கத்திற்கும் இந்திய பிரதிநிதியாகச் சென்றதிலும் எனக்கு புகழ்ச்சி ஏற்பட்டிருந்த போதிலும் எனது நண்பரும் தலைவருமான திரு ரத்ன சபாபதி முதலியார் போன்ற பொது ஜன தொண்டர்களால் ஆற்றப்படும் பணிகள் எனது வாழ்க்கை காலத்தில் செய்த பணிகளைக் காட்டிலும் மிகவும் திண்மையானதும் நிலைத்திருக்கக் கூடியதுமான தன்மை வாய்ந்ததென்பதை யான் எப்பொழுதும் நினைத்திருந்ததோடு இதுபோதும் நம்புகின்றேன். அவர் அத்தகைய பணியாற்றியதைப் பாராட்டுவதாக நீங்கள் இன்று ஈரோடில் அளித்த பத்திரங்களில் சரியாக எடுத்துக் காட்டியிருக்கின்றீர்கள்.

### ஈரோடு முனிசிபல் சபைக்கு:-


நகர பரிபாலனத்தில் விற்பனம் அடைந்த தங்கட்கு அதிற்பயிற்சி இல்லாத நான் ஒன்றும்போதித்ததற்கு அருகனல்லேன். ஆயினும் இந்நாட்டில் மட்டுமின்றி மேனாடுகளிலும் சென்று இந்நிர்வாக முறையை நன்கறிந்த நான் சேரிய நகர பரிபாலன நிர்வாக முறை எவ்வாறு கையாளவேண்டும் என்பதுபற்றி கூறத் தொடங்குவதற்குத் தாங்கள் என்னை மன்னித்தல் வேண்டும். ஒரு நாட்டின் ஆட்சிமுறைக்குரிய ஆற்றல் அந்நாட்டு ஸ்தல ஸ்தாபன நிர்வாகத்தினின்றும் நன்கறிதல் கூடுமென்பது ஓர் நியாயம். இதன்படி நம் நாட்டில் வழங்கப்படும் நகரபரிபாலன முறைகளைப்பற்றி சிலர் புகழ்ந்திருக்கின்றனர்; சிலர் இகழ்ந்திருக்கின்றனர். சிலர் இதனின்றும் எதிர்காலத்தில் நன்னம்பிக்கையுங்கொண்டுளர். யார் எப்படிக்கூறியபோதிலும், முனிசிபல், தாலுக்கா போர்டு, ஜில்லாபோர்டு தேர்தல் ஊக்கத்திலிருந்து நான் இனி நம்நாடு சுயாட்சி முறையில் உயர்வு பெற்றுத் திகழுமென்றே நம்பிக்கை படைத்திருக்கின்றேன். உலக அநுபவத்திலிருந்து, முனிசிபல் முதலிய ஸ்தல ஸ்தாபனங்களிற்றான் லஞ்சம், பாரபட்சம் போன்ற நிர்வாக ஊழல்களுக்கு நிறைந்த வசதிகள் இருக்கின்றன என்று நான் நன்கறிந்திருக்கின்றேன். ஸ்தல ஸ்தாபனங்களில் உள்ள அங்கத்தினர்கள் வரிசெலுத்துவோரின் நலங்களையே தமது நோக்கமாகக் கருதுவரேல் இத்தகைய தீங்கு ஒழிந்துபோகும். கனவான்களே! இந்தியாவில் முனிசிபல் நிர்வாகம் குழந்தைப் பருவத்திற்றான் இருக்கின்றது. எனவே உலகத்தில் மற்றைப்பாகங்களில் நடைபெறும் முனிசிபல் ஸ்தாபனங்களைப் பார்த்தவரையில், ஒரு நகர சபை தன் ஆற்றல் மிக்க நிர்வாகிகளாற்றான் வெற்றி அடைகின்றது என்று நான் துணிந்து சொல்லுவேன். முனிசிபல் சபைகட்கு சீக்கிரத்தில் ஊழல்கட்கு இடந்தாராத நிர்வாகிகள் எவ்வளவு பிரதானமோ அவ்விதமாகவே, சனநாயக ஆட்சி முறைக்கும் இந்நிலைமை மகாப்பிரதானமாய் இருக்கின்றது. கட்சிகள் வரும்; கட்சிகள் போகும். மந்திரிகள் வருவார்கள்; மந்திரிகள் போவார்கள். எனவே, எக்கட்சியாயிருப்பினும், அமைச்சர்கள் யாராய் இருப்பினும், நிர்வாகம் தக்க மனிதர்கள் கையில் நிலவரமுற்று இருத்தல் ஒரு ஆட்சிமுறைக்கு இன்றியமையாததாகும். இதில் தான் ஒரு சமூகம் தனது நம்பிக்கையையும் வைத்து நிற்கின்றது. இதற்குத்தான் நிலவரமும் நீடிப்பும் வன்மையும் நடு நிலைமையும் ஒழுக்கமும் வேண்டும். இதிலிருந்து நம் இந்தியா இன்னும் இந்நிலைமையைச் சரிவர அடையவில்லை என்பது கண்கூடு. குறித்துக் காண்பிக்க எனக்கு இஷ்டமில்லா விட்டாலும் கூட, இந்தியாவில் பெரும் பாலும் முனிசிபல் ஸ்தாபனங்கட்கும், நிர்வாக ஸ்தாபனங்கட்கும் எப்பொழுதும் போராட்டமாகவே இருக்கின்றது என்பதை நான் தாராளமாய் எடுத்துரைப்பேன். இத்தகைய போராட்டம் நமது அடிப்படைக்கே உலை வைத்து விடுகின்றது. முனிசிபல் ஸ்தாபனங்களில் அடிக்கடி கட்சிப் பிரதிகட்சித் தொல்லை இருந்து கொண்டிருப்பதனாலேயே நிர்வாகத்தாரும் முனிசிபாலிட்டிகளை அவைகளின் வேலையை சரிவரச் செய்யாமல் செய்து விடுகின்றனர். எனவே தமக்குள் எவ்வளவு அபிப்பிராய வேற்றுமை இருப்பினும், முனிசிபல் சபையார் இதனை நிர்வாகஸ்தாபனங்கட்கு வெளிப்படுத்திக் கொள்வது மடமையாகும். இந்த பரமரகசியத்தை மட்டில் இந்நாட்டு நகரபரிபாலன சபையார்கள் செம்மையாய்த் தெளிவார்களானால் இப்பொழுதுள்ள சீர்கேடான நிலைமை அநேகமாய் முற்றிலும்கூட அகன்றுபோம் என்பதற்கையமில்லை. நீங்கள் நிர்வாக அதிகாரிகளிடமிருந்து விலகி நிற்றல் மட்டும் கூடாது. ஆனால் இத்தகைய அதிகாரிகளை நீங்கள் வெகு சாக்கிரதையாய்த் தேர்ந்தெடுத்துக்கொண்டு அவர்கட்குத் தக்க சம்பளம் அளித்தல் வேண்டும். தக்க மனிதர்களைத் தக்க சம்பளத்தில் தேர்ந்தெடுப்பீர்களானால் அவர்கள் ஒருபோழ்தும் உங்கள் கட்சிக்கொள்கைகளால் மயங்கி உழலமாட்டார்கள்; அதனைக் கடந்தே நிற்பார்கள்.

நான் முனிசிபல் நிர்வாகத்தைப் பற்றிய எல்லா நுட்பங்களையும் இங்கு எடுத்து விரிவுரை கூறுதல் நேர்மையல்ல. என்றாலும் சிற்சில விஷயங்களை மட்டும் சொல்லிவிடுகின்றேன். நீங்கள் ஒவ்வொரு குடியினிடத்தும் முனிசிபல் சபைக்கும் அவர்கட்கும் உள்ள தொடர்பை நன்குணர்த்துதல் வேண்டும். இந்தியர் ஒருவர் சாதாரணமாக நல்ல மனிதர் தான்; ஆனால் ஒரு பொது சபையில் சம்பந்தப்பட்ட வகையில் அவரது அறியாமை மிகவும் முன்னின்று மிளிரும். உதாரணமாக சுகாதாரத்தையும் சொந்த தூய்மையும் எடுத்துக் கொள்ளுங்கள். இந்தியர்கள் தனிப்பட மிகவும் சுத்தக்காரர்கள் தாம் என்றும், தொகைப்பட அவர்களைக் காட்டிலும் அசுத்த முடையவர்கள் இல்லை என்றும் மகாத்மா காந்தி கூறியிருக்கின்றார். இப்பேருரையை நீங்கள் சிந்திப்பீராயின் இதன் உண்மை இனிது தோற்றும். ஏனெனில் ஒவ்வொரு இந்தியரும் தன்னைப்பற்றியவரையில் மிகவும் தூய்மையாய்த் தான் இருப்பார். ஆனால், காலைக்கு இரண்டு வேளைகளும் குளிப்பார். ஆனால் தன் அயல் வீட்டார் நலத்தைக் குறித்தாவது, பொதுநலத்தைக் குறித்தாவது இந்த சுத்தத்தை அவர்கள் எள்ளளவும் அநுசரிக்கமாட்டார்கள். (அதாவது தெருக்களில் குப்பை கூளங்களைக் கொட்டுவதும், தெருக்களில் தங்கள் குழந்தை குட்டிகளை விட்டு மலம் ஜலம் கழிக்கச் செய்து தங்கள் வீட்டை மட்டும் சுத்தமாக வைத்துக்கொள்ளும்போது அவர்கட்குப் பொதுநலத்தின் தொடர்பால் சுத்த உணர்ச்சி இல்லை என்று இது எடுத்துக்காட்டுகின்றது).

எனவே முனிசிபல் அங்கத்தினர்களாய நீங்கள் நகரப்பொதுத் தூய்மையைப் பற்றியும், சுகாதாரத்தைப் பற்றியும் அறிவுறுத்த வேண்டியது உமது கடமை ஆகின்றது. இம்முறையில் நீங்கள் உங்கள் முனிசிபல் நிர்வாகத்தை மிக நன்றாய் நடத்திச் செல்லலாம். எனவே முதன்முதலாக நிர்வாக உத்தியோகத்தர்களைப்பற்றிய உ[..]மையும், இரண்டாவதாக பொது சனங்களிடை சுகாதாரத்தைப் பற்றியும் மற்றுமுள்ள தொடர்பைப்பற்றியும் உணர்த்தவேண்டும் என்ற கூறிய உண்மையும் தான் முனிசிபல் நிர்வாக தந்திரமாகும். இவ்விரண்டை மட்டிலும் நாம் நமது நோக்கங்களாய்வகித்துச் செல்வோமாயின், உலகத்தில் வெற்றிகரமான ஆட்சி முறையை நாம் நிறுவுவதற்கு அடிகோலுவதாகும்.

நீங்கள் என் ஊழியத்தை மிகவும் பாராட்டிக் கூறியிருக்கின்றீர்கள். என் ஊழியத்தைப்பற்றி நீங்கள் தான் சிலாக்கியம் செய்து கூறமுடியும். நான் ஜினிவாவில் என்ன செய்தேன் என்பதைப்பற்றி ஈண்டு, எனக்குப் பின்னர் பேசக்கூடியவர்கள் இருவரிருக்கையில், விரிவிரை நிகழ்த்துதல் நேர்மையல்ல. ஜினிவா சர்வதேச சங்கத்தில் இந்தியா தேசம் 10 ஆண்டுகளாக ஓர் அங்கமாய் இருப்பினும் கூட, இங்குள்ளவர்கள் இந்தியா அங்கு என்ன செய்தது என்பதைப்பற்றி சரிவரத் தெரிந்துகொள்ளவில்லை. இக்குற்றம் நம்முடையதே. சமூக, தொழில் விஷயங்களைப்பற்றி சட்ட திட்டங்கள் இயற்றும் சர்வதேச தொழிலாளர் சங்கத்திலும்கூட பல ஆண்டுகளாக இந்தியப் பிரதிநிதிகளில்லை. ஆனால் கடந்த 3 வருடங்களாக இந்திய வர்த்தக சங்கத்தாரும், ஏனைய பல கட்சியினரும் கிளர்ச்சி புரிந்ததன் பயனாய் இப்பொழுது இந்தியப் பிரதிநிதிகள் அங்கு அங்கத்தினர்களாய்ச் செல்லுகின்றனர். அடிக்கடி சர்வதேச சங்கத்தில் உள்ள பல இயக்கங்கட்கும் இந்தியர்கள் பிரதிநிதிகளாய்ச் செல்வது நமது செல்வாக்கைப்பற்றியும், நமது யோக்கியதா பட்சத்தைப்பற்றியும் மேனாட்டார் நன்கறிந்துகொள்

(தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க)



"அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே"

# குடி அரசு

சென்னை 1929 செப்டம்பர் மீ 8உ

## வேதாரண்யத்தில் தேசிய (பார்ப்பனர்) மகாநாடு

### திரு: பட்டேலின் யோக்கியதை

கடந்த மூன்று வருட காலமாக நமது பார்ப்பனர்கள் விடா முயற்சியுடன் ப்ரயத்தனப்பட்டு வந்த தமிழ் மாகாணத் தேசிய மகாநாடு சென்ற மாதம் 31ந் தேதி வேதாரண்யம் என்னும் ஒரு கிராமத்தில் கூடிக் கலைந்ததாக பேர் செய்து விளம்பரமும் செய்தாய் விட்டது.

ஆனாலும் அம்மகாநாடு நடைபெற்றதன் யோக்கியதைதான் என்ன என்று பார்ப்போமானால், சுருக்கக் கூறுமிடத்து, பார்ப்பனரல்லாதார் பணத்தையே இரண்டு பார்ப்பனத் தலைவர்கள் செலவு செய்து பார்ப்பனரல்லாதாருக்கு விரோதமாய் இருவரும் படை திரட்டிக் கொண்டு போய் ஒருவருக்கொருவர் தங்கள் சாமர்த்தியத்தை வெளியாக்கிக்கொண்டது தான் வேதாரண்ய மகாநாட்டின் தத்துவம் என்று சொல்லவேண்டும். அதாவது தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. எஸ். சீனிவாசய்யங்கார் அவர்கள் காங்கிரசின் பேரால் பொதுப் பணத்தை அள்ளிக்கொடுத்து சேர்த்துவைத்திருக்கும் படைகளான திருவாளர்கள் பழனியாண்டி பண்டாரம், சாமிநாத செட்டியார், அண்ணாமலைபிள்ளை சத்தியமூர்த்தி, கிருஷ்ணசாமிப் பாவலர் முதலிய தேசியத்தொண்டர்களாகிய திரு. அய்யங்கார் படைகள் ஒரு புறமும்; கதரின் பேரால் பார்ப்பனரல்லாதார் கொடுத்த பொதுப் பணத்தையே பார்ப்பனர்களுக்கே அள்ளிக்கொடுத்து சேர்த்து வைத்திருக்கும் படைகளான திருவாளர்கள் சந்தானம், என். எஸ். வரதாச்சாரி முதலிய "கதர் தொண்டர்களா"ன திரு. சி. ராஜகோபாலாச்சாரியாரின் படைகள் ஒருபுறமும் இருந்து போர் செய்து, முடிவில் திரு. சி. ராஜகோபாலாச்சாரியார் வெற்றிமாலை சூடி, இப்போது திக்கு விஜயமும் செய்துவருகிறார். திரு. அய்யங்காரைவிட திரு. ஆச்சாரியார் சூட்சியில் தேர்ந்தவர் என்பதை அய்யங்கார் தெரிந்திருந்தும் தனது பணத் திமிறினாலும் பேராசையினாலும் ஆணவம் கொண்டு வேதாரண்யத்தில் ஆச்சாரியாரிடம் நல்ல அடிபட்டு திரும்பி விட்டார். இது ஒரு புறமிருக்க; தமிழ் நாடு என்னும் 14 ஜில்லாக்களின் பேரால் மூன்று வருடம் பொறுத்து கூட்டப்பட்ட இந்த மாகாண மகாநாட்டிற்குச் சென்றிருந்த பிரதிநிதிகள் எத்தனை பேர்கள் என்று பார்ப்போமானால் சுமார் நூறு பேர்களேதான் இருக்கக்கூடும் என்று தெரிகின்றது. அதாவது பூரண சுயேச்சை தீர்மானசம்பந்தமாய் இரண்டு கட்சியிலும் தீவிரப்பிரசாரம் செய்து சேகரித்த ஓட்டுகளின் எண்ணிக்கை 240 என்பதாக மித்திரன் பத்திரிகையில் தெரியவருகின்றது. இதில் வரவேற்புக்கழக அங்கத்தினர்களும் ஓட்டு கொடுத்திருப்பதாயும், அவர்களுக்கும் ஓட்டுரிமை அளிக்கப்பட்டதாயும் கண்டிருக்கின்றது. இதில் வரவேற்புக் கழகத்தினர் நூறு கனவான்களுக்கு மேலாகவே இருந்திருக்கிறார்கள். பிறகு தஞ்சை ஜில்லா பிரதிநிதிகள் என்று சுமார் 50, 60 கனவான்களுக்கு மேலாகவே அந்த ஜில்லாக்காரர்கள் இருந்திருக்கிறார்கள். இவைபோக, வெளி ஜில்லாக்களில் இருந்து வந்திருந்த பிரதிநிதிகள் சுமார் 70, 80 பேர்களே இருந்திருக்கக் கூடும் என்பதாக நன்கறியலாகும். அந்த 70, 80 பேர்களும் அய்யங்கார் தன் பணமும் காங்கிரசு பணமும் போட்டு டிக்கட் வாங்கிக் கொடுத்து, சாப்பாடும் போட்டு அழைத்துக் கொண்டு போன கூட்டம் முக்கால் பகுதியும் ஆச்சாரியாரால் கதர் பணத்தை செலவு செய்து டிக்கட் வாங்கிக் கொடுத்து அழைத்துக் கொண்டு போகப்பட்ட திரு. ஆச்சாரியார் கூட்டம் கால்பகுதியும் சேர்ந்ததாகத்தானிருக்க முடியும்.

ஈதன்றி தனிப்பட்ட முறையில் மகாநாட்டிற்கு (வேடிக்கை பார்க்கவாவது) தனது சொந்தப் பணத்தை செலவு செய்து போயிருந்தவர்கள் சுமார் 5, 6 பேர்களாவது இருக்க முடியுமா என்று தீர்மானிப்பது கூட கஷ்டமாயிருக்கின்றது. எனவே, இந்தக் கூட்டம் தான் இப்போதைய தமிழ்நாடு தேசியவாதிகள் கூட்டமென்றும், அதிலும் பூரண சுயேச்சைக் கூட்டமென்றும், ஒத்துழையாதார் கூட்டமென்றும் சொல்லிக்கொள்ளப்படுவதாகும். நிற்க;

காங்கிரசுக்காக உழைக்கவே உடலை விடுவேன் என்று சொல்லும் காங்கிரஸ் பக்தர் திரு. கலியாணசுந்தர முதலியாருடையவும், தேசியத்திற்காகவே உடல், பொருள், ஆவி, மூன்றையும் விடுவேன் என்று சொல்லும் "தேசிய வீரரும், தேசியக் கட்சித் தலைவரு"மான திரு. வரதராஜுலு உடையவும், அவர்களை பின் பற்றுபவர்கள் (இருந்தால்) அவர்கள் உடையவும் வாசனையே "மகாநாட்டில்" இருந்ததாகத் தெரியவில்லை. ஏனெனில், காஞ்சிபுரம் மகாநாட்டில் மேற் கண்ட இருகனவான்களும் அய்யங்காருக்கும் ஆச்சாரியாருக்கும் நல்ல பிள்ளைகளாக ஒருவருக்கொருவர் போட்டி போட்டு வகுப்புவாரி உரிமை தீர்மானத்தை கொண்டுவரவொட்டாமல் செய்த "புண்ணிய காரியத்திற்கு"ப் பிறகு இருகனவான்களையும் எந்த மாகாண மகாநாட்டாரும் மதித்ததாகவாவது இவர்களாக அங்கு போனதாகவாவது தெரியவில்லையாதலால், இவ்விருகனவான்களைப்பொறுத்தவரை, மாகாண மகாநாட்டைப் பொருத்த அளவுக்கு அவரவர்கள் "கருமத்தின் பலனை" அவரவர்கள் அடைந்துவிட்டார்கள் என்றே சொல்லவேண்டும். மகாநாட்டுத் தலைமைக்கு தமிழ் மாகாணத்தில் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்கின்ற போட்டியில் திருவாளர்கள் சத்தியமூர்த்தியும், வரதராஜுலுவும் ஆகிய இருவர்களும் தாங்கள் தாங்கள் வரவேண்டும் என்று இரு கட்சிகளுக்கும் பல சூட்சிப் பிரசாரம் செய்தும் கடைசியாக ஒருவரும் வர முடியாமல் போனதோடு வடநாட்டிலிருந்து ஒரு பொம்மையைக் கொண்டு வந்து ஆட்டிவைத்து, அதன் மூலம் வழக்கம் போல் பார்ப்பனப் பிரசாரம் செய்ய உபயோகப்படுத்திக் கொள்ளப்பட்டது. இது எப்பொழுதும் இந்த மாகாணப் பார்ப்பனர்கள் செய்துகொண்டு வரும்வழிவழிச் சூட்சியேயாகும். அதாவது, தமிழ்நாட்டில் பார்ப்பன சூட்சிகள்வெளியாகி அவர்களுடைய யோக்கியதை குறைந்து விட்டால் வெளி மாகாணத்தில் இருந்து ஒரு பார்ப்பனரல்லாதாரைக் கூட்டி வந்து அவர் வாய் மூலம் பார்ப்பனப் பிரசாரம் செய்வதாகும். வெளியில் இருந்துவரும் பார்ப்பனரல்லாதாரும் அநேகமாய் பார்ப்பனர் கைக்குழந்தைகளாகவே இருந்து அவர்கள் சொல்லிக் கொடுத்ததை அப்படியே கிராமபோன் மிஷின் மாதிரி ஒப்புவித்து விட்டு அவர்கள் ஆட்டினபடி பயாஸ்கோப் மிஷின் போல் ஆடிவிட்டு போய்விடுவது வழக்கம். அதுபோலவே இப்போதும் திரு. பட்டேலைக் கூட்டி வந்து ஆட்டுகின்றார்கள்.

திரு. பட்டேல பார்ப்பனதாசராய் இருந்து பாடினார், ஆடினார் என்பதற்கு நாம் அதிகமாகக் கஷ்டப்பட்டு ஆதாரம் தேடவேண்டியதில்லை. அவர் வேதாரண்யத்தில் பார்ப்பனரல்லாதாரைப்பற்றிப் பேசி இருக்கும் பேச்சுக்களைப் பார்த்தாலே தெரியவரும். அதாவது இங்கு, "பிராமண வகுப்புக்கே விரோதமாய் பிரசாரம் செய்யப்பட்டு வருகின்றது. இந்த பிரசாரமானது பிராமணர்களைத் தாக்குவதாக மாத்திரமல்லாமல் நம்முடைய ஆரியநாகரிகத்தில் சிறந்தவற்றையெல்லாம் தாக்குவதாக இருக்கின்றது. பிராமணரல்லாதாரில் ஒருசிலர் சுயநலத்தினால் அறியாத ஜனங்களை குத்திவிட்டு குரோதத்தை உண்டாக்கி உத்தியோக வேட்டையாக இந்த இயக்கத்தை செய்துவிட்டார்கள். கதர் இயக்கத்தின்மேலும் பிராமண இயக்கமென்று தோஷம் கூறப்படுகிறது. மாசற்றவரும் ; பார்ப்பனீயப் பிற்போக்கில் எதுவும் தம்மிடம் காணப்படாதவரும், பிராமணரல்லாதாருக்கு ஊழியம் செய்யவென்றே தமது ஆயுள்காலம் முழுவதையும் அர்ப்பணம் செய்துவிட்டவருமான ஒரு பிராமணரை (திரு. ராஜகோபாலாச்சாரியாரை) சைத்தான் சொரூபம் என்று ஒரு சாரார் தூஷிக்கின்றார்கள். இது தேசிய தற்கொலையே யாகும். வகுப்புதுவேஷத்தை எதிர்த்து பிர

சாரம் செய்வதைக் காட்டிலும் சிறந்த தேசிய வேலை வேறு கிடையாது'' என்பதாகும். மற்றும் அவர் தனது முடிவுரையில்

''இந்த மாகாணத்தில் சுயராஜ்ய கட்சியினருக்கு அவர்கள் கோரும் உதவியை செய்து வரும்படி மாறுதல் வேண்டாதவர்களை நான் கேட்டுக் கொள்ளுகிறேன்''

என்றும், மற்றும் பூரணசுயேச்சைத் தீர்மானத்தை தான் எதிர்த்துப்பேசுகையில்,

''நான் வைதீக ஒத்துழையாதாராயினும் இந்த மாகாணத்தின் நிலையை கவனிக்கும்போது அதிகாரத்தைக் கொடுக்கக் கூடிய எல்லாப் பதவிகளையும் (சுயராஜ்ஜிய கட்சியார்) கைப்பற்றிக் கொள்வது சாத்தியமாகும்படி இங்கு ஒரு தனி வழியை பின்பற்றவேண்டும் என்பதை நான் ஒப்புக் கொள்ளுகிறேன். அதற்கு மாறாக நீங்கள் சொல்வது தற்கொலைக் கொப்பாகும்.

என்றும் சொல்லி இருக்கிறார்.

பின்பு மிராசுதார் மகாநாட்டில் பேசும்போது,

''உங்களுடைய அரசியல் பிரிவுகள் எனக்கு புரியவில்லை. இங்கு பிராமணர் பிராமணரல்லாதார் தகராறுக்கு காரணம் என்னவென்று இன்னும் நான் விசாரித்துக் கொண்டிருக்கிறேன்''

என்று சொல்லி இருக்கிறார். இவைகளிலிருந்து திரு. பட்டேல் கிராமபோன் மிஷினாயிருந்திருக்கிறாரா இல்லையா என்பதை யோசித்துப் பார்க்கும்படி வாசகர்களை வேண்டுகிறோம்.

முதலாவதாக இங்கு பிராமணர்களுக்கு விரோதமாக பிரசாரம் செய்யப்பட்டு வருவதாகச் சொல்லுவருவதற்கு திரு. பட்டேல் தனது பிரசங்கத்தில் என்ன ஆதாரம் கூறி இருக்கிறார்? அல்லது என்ன ஆதாரம் கூறக்கூடும்? என்பதை யோசித்தால் இது பார்ப்பனர்களின் பேச்சைக் கேட்டுக்கொண்டு பார்ப்பனரல்லாதார்மீது சுமத்தும் யோசனையற்றதும் அக்கிரமமானதுமான வீண் பழி அல்லவா? என்று கேட்கின்றோம். அன்றியும் பார்ப்பனர்கள் மீதுள்ள துவேஷத்தால் ஆரிய நாகரீகத்தில் எது எது சிறந்ததோ அதை எல்லாம் பார்ப்பனரல்லாதார் தாக்குவதாக சொல்லி இருக்கிறார். இதில் எந்த சிறந்த ஆரிய தர்மமானது தாக்கப்படுகிறது என்பதற்கு ஒரு உதாரணத்தையாவது திரு. பட்டேல் எடுத்துக் காட்டியிருக்கிறாரா? அல்லது காட்டக் கூடுமா? திரு. பட்டேல் எதை சிறந்த ஆரிய தர்மம் என்று நினைத்துக்கொண்டிருக்கிறார் என்பதும் நமக்கு சிறிதும் விளங்கவில்லை. திரு. ராஜகோபாலாச்சாரியின் பூணூலையும், உச்சிக்குடுமியையும், கொண்டி நாமத்தையும், சிறந்த ஆரிய தர்மமென்று நினைத்துக் கொண்டு இருக்கிறாரா? அல்லது புராணங்களையும், இதிகாசங்களையும் மநுதர்ம சாஸ்திரம், பாராசர ஸ்மிருதிகளையும் அவற்றினால் ஏற்பட்ட கோயில்களையும் உற்சவங்களையும் பார்ப்பன பூசாரிகளையும், சிறந்த ஆரிய தர்மமென்று நினைத்துக்கொண்டிருக்கிறாரா? அல்லது விக்கிரகங்களையும் அதன் பூஜை உற்சவங்களுக்காக பலகோடி ரூபாய்கள் செலவு செய்யப்படுபவைகளையும் சிறந்த ஆரிய தர்மம் என்று கருதிக் கொண்டிருக்கிறாரா? அல்லது வர்ணாச்சிரம தர்மத்தையும், சமஸ்கிருத பாஷை ''உயர்வையும்'' சிறந்த ஆரிய தர்மம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறாரா? என்பது நமக்கு விளங்கவில்லை. திராவிட தேசத்துக்கு வந்த இவருக்கு ஆரிய தர்மத்தைப் பற்றிய பிரசாரத்தில் கவலை எதற்காக ஏற்படவேண்டும்? திராவிட தர்மம் இன்னது என்று இவர் அறிந்தாரா? திராவிடர்களுக்கும் ஆரியர்களுக்குமுள்ள வேற்றுமை என்ன? ஆரியர்கள் திராவிடர்களை எவ்விதம் மதித்திருக்கிறார்கள், எவ்விதம் நடத்துகிறார்கள் என்பது இவருக்குத் தெரியுமா? ஆரிய பிரசாரம் என்பது அரசியல் தர்மத்துடன் சேர்ந்ததா? பார்ப்பன தர்மத்துடன் சேர்ந்ததா? என்பதையாவது இவர் உணர்ந்தாரா? இந்த நாட்டில் ஏற்பட்டிருக்க வேண்டிய சீர்திருத்தங்கட்கு எல்லாம் இது வரையில் முட்டுக் கட்டையாக இருந்து வந்திருப்பது ஆரிய பிரசாரமா? அல்லது ''பார்ப்பன துவேஷ'' பிரசாரமா? முதலாவது இந்த நாட்டிலுள்ள பார்ப்பனரல்லாதார் யோக்கியதையும், அந்தஸ்தும் இன்னது என்பது இவருக்குத் தெரியுமா? பார்ப்பனர்களில் திருவாளர்கள் சி. ராஜகோபாலாச்சாரி, சீனிவாசய்யங்கார், சந்தானம், சத்தியமூர்த்தி, வரதாச்சாரி, எ. ரெங்கசாமி ஐயங்கார், எம். கே. ஆச்சாரியார் முதலியோர்களுடைய யோக்கியதை திரு. பட்டேலுக்கு தெரிந்தது சரியாயிருக்குமா? அல்லது திரு. ராமநாதன், திரு. ராமசாமி முதலியோர்களுக்கு தெரிந்தது சரியாயிருக்குமா? தேசாபிமானம் என்பதும், தேசியமென்பதும் தென்னாட்டு பார்ப்பனருக்கும், வடநாட்டு பார்ப்பனரல்லாதார்களுக்கு மட்டும் தான் சொந்தமா? அல்லது திரு. பட்டேலுக்குத் தெரிந்த தென்னாட்டுபார்ப்பனரல்லாதார் யாருக்கும் சொந்தமாயிருக்க முடியாதா? தென்னாட்டில் வந்து திரு. பட்டேல் பார்ப்பனரல்லாதாரைப்பற்றி பேசுவதற்கு முன்பு, எந்த பார்ப்பனரல்லாதாரிடத்திலாவது பேசி எந்த விஷயத்தையாவது தெரிந்து கொண்டாரா? ஒன்றுமில்லாமல் அங்கிருந்து தட தட என்று வந்தவுடன் மேளத்தையும், தாளத்தையும், பாண்டையும், மாலையையும் பார்த்ததும் திடீரென்று பார்ப்பனர்கள் மகா உத்தமர்கள், பார்ப்பனரல்லாதார்கள் சுயநலக்காரர்கள், துவேஷக்காரர்கள் என்று சொல்லி விடுவதென்றால் இது ஒரு யோக்கியப்பொறுப்புடையதலைவருக்கு ஏற்றதாகுமா? இவர் சத்தியாக்கிரகமோ, வரிகொடா இயக்கமோ ஆரம்பித்தால் இவரை நம்பி எந்த பார்ப்பனரல்லாதாராவது பின்பற்ற முடியுமா? தவிர, பார்ப்பனரல்லாதார் இயக்கம் சுயநலக்காரர்கள் செய்யும் உத்தியோகவேட்டை இயக்கமென்று சொல்லி இருக்கிறார். இது யோக்கியமான பேச்சாகுமா? இந்தமாகாணத்தில் பெரும்பான்மையான உத்தியோகத்தில் இருப்பவர்கள் யார் என்றும் பாரம்பரையாக உத்தியோக வேட்டையாடிக் கொண்டிருப்பது யார் என்றும் கடுகளவாவது புத்தியையும் நேரத்தையும் செலவு செய்து பார்த்திருப்பாரானால் இம்மாதிரி சொல்லி இருக்க முடியுமா? இதிலிருந்தாவது வட தேசத்திலுள்ள அரசியல் தலைவர்களென்பவர்கள் எவ்வளவு தூரம் புத்தியிலும், பொறுப்பிலும் கட்டையானவர்கள் என்பது விளங்கவில்லையா? அன்றியும், மற்றோர் இடத்தில் இந்த நாட்டின் அரசியல் பிரச்சினை தனக்குப் புரியவில்லை என்றும், இங்குபிராமணர் பிராமணரல்லாதாருக்கு இடையிலுள்ள தகராறுக்கு மூல காரணம் இன்னதென்று தனக்கு இன்னும் தெரியவில்லை என்றும் சொல்லி இருக்கிறார். அப்படி இருக்கையில் இவர் எப்படி பார்ப்பனரல்லாதாரை உத்தியோக வேட்டைக் காரர்கள் என்று சொல்வதுடன் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தை எதிர்த்து பிரசாரம் செய்யவேண்டியது அவசியம் என்று சொல்லக் கூடும்? இதிலிருந்தாவது இவர் வேண்டுமென்றே இந்த நாட்டுக்கு பார்ப்பனர் பேச்சைக் கேட்டுக்கொண்டு பார்ப்பன பிரசாரம் செய்யவந்தவரே அல்லாமல் வேறல்லவென்பது விளங்கவில்லையா? தவிர, இந்த மாகாணத்தில் சுயராஜ்ய கட்சியாருக்கு வேண்டிய உதவி எல்லாம் செய்ய வேண்டுமென்றும், இந்த மாகாணத்து நிலைமையை பொறுத்தவரையில் அதிகாரம் பதவிகள் ஆகியவைகளையெல்லாம் சுயராஜ்ய கட்சியாரே கைப்பற்றும்படி ஒரு தனி வழி ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும், அப்படி செய்யாவிட்டால் அது தேசத்துரோகமென்றும் சொல்லி இருப்பது எவ்வளவு தூரம் பார்ப்பனர் மாய்கையில் சிக்கி, அவர்களால் ஊட்டப்பட்டதை அப்படியே கக்கி இருக்கிறார் என்பது வாசகர்களுக்கு விளங்கவில்லையா. இதற்கு முன் திருவாளர்கள் எஸ். சீனிவாச ஐயங்கார், சத்தியமூர்த்தி, ராஜகோபாலாச்சாரியார் ஆகியவர்கள் சேர்ந்து ''ஜஸ்டிஸ் கட்சியை ஒழிப்பதற்''காக மந்திரி பதவியை கைப்பற்றவோ அல்லது ஆதரிக்கவோ வேண்டியிருக்கிறது என்று சொல்லி, ஒரு (பினாமி) மந்திரி சபையை உற்பத்திசெய்து, அதை இவர்கள் சுயநலத்திற்கு ஆட்டி வைத்துக்கொண்டிருந்ததை சரி என்று ஒப்புக்கொள்வதோடு, இனியும் அப்படியே செய்யவேண்டுமென்பதற்கு இவர் ஒரு தூண்டுகோலல்லவா? வாயில் வைதீக ஒத்துழையாதார் என்று பேர் சொல்லிக் கொண்டு காரியத்தில் சர்க்கார் அதிகாரங்களையும், பதவிகளையும் கைப்பற்ற வேண்டியது அவசியம் என்று சொல்லுகிற ஒத்துழையாதார்கள் திரு. காந்தியுட்பட எவ்வளவு யோக்கியர்களாக இருக்கக் கூடுமென்பதும் ஒத்துழையாமை தோற்றுப் போனதற்குக் காரணமென்னவென்பதும் தாராளமாக இதிலிருந்து விளங்கவில்லையா என்று கேட்கிறோம். இந்த மாகாணத்தில் சுயராஜ்பக் கட்சி என்பதும் ஜஸ்டிஸ் கட்சி என்பதும் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் கட்சியே தவிரவேறல்ல என்று ஆயிரம் தடவை திரு காந்தியுட்பட வட நாட்டுத்தலைவர்களென்பவர்களுக்கெல்லாம்பல முறை விளக்கப்பட்டிருந்தும், மறுபடியும் சுய

ராஜ்யக் கட்சிக்காரர்களுக்கு ஒத்துழையாதார்கள் உத்தியோகம் சம்பாதித்துக் கொடுப்பதற்கு உதவிசெய்ய வேண்டியது தேசிய தர்மமென்று சொல்ல வந்தால், ஒத்துழையாமைக் கட்சியை பார்ப்பன கூலிக்கட்சி என்று சொல்லாமல் வேறு என்ன வென்றுதான் சொல்வது? இவைகளிலிருந்து அரசியலின் பேரால் எந்த கட்சி ஏற்பட்டாலும், எந்த கனவான் புறப்பட்டாலும் அவை அயோக்கிய கட்சி என்றும், அயோக்கியர்கள் கூட்டமென்றும், இதற்குமுன் சொல்லிக்கொண்டு வந்தவர்களெல்லாம் பெரிய தீர்க்கதரிசிகளென்றும், அநுபவசாலிகளென்றும் ஒப்புக் கொள்ள வேண்டியிருக்கிறது. முடிவாக திரு. பட்டேல் அவர்களின் தென்னாட்டு விஜயம் ஆரியதர்ம பிரசாரமும், சுயராஜ்ய கட்சி பிரசாரமும் பார்ப்பன ஆதிக்கப் பிரசாரமும் ஆகியவைகள்தான் என்பதோடு முடிவு கட்ட வேண்டிய நிர்ப்பந்தத்திலிருக்கிறோம். சென்றவாண்டில் திரு. காந்தி தென்னாட்டுக்கு வந்த பிறகு வர்ணாச்சிரமம் இருக்கவேண்டுமென்றும், பிறவியிலேயே "பிராமணர்கள்" "சூத்திரர்கள்" உண்டென்றும், மநுதர்ம சாஸ்திரப்படி அவரவர்கள் அவரவர்களுக்கு ஏற்பட்ட வேலையை செய்ய வேண்டுமென்றும், பிரசாரம் செய்து விட்டு போனார். அதற்குப் பிறகு திரு. மாளவியா வந்து, ஜாதி இருக்கவேண்டுமென்றும், கோயிலில் அந்தந்த ஜாதிக்கு தகுந்த இடம் பிரிக்க வேண்டுமென்றும் சொல்லி "ராமாயண பிரசங்கம்" செய்து விட்டுப்போனார் இப்பொழுது திரு. பட்டேலோ, வந்தவர்களையெல்லாம்விட ஒரு அடி முன்னால் வந்து, பார்ப்பனரல்லாதார் சுயநலக் காரர்களென்றும், அவர்களது கட்சி உத்தியோக வேட்டைகட்சியென்றும்சொன்னதோடு, பார்ப்பனர் கட்சியாகிய சுயராச்சியக்கட்சிக்குஉத்தியோகங்களும் அதிகாரங்களும் பதவிகளும் கிடைக்கும்படி செய்ய வேண்டியதே தேசிய வேலை என்று சொல்லி ஆரிய தர்ம பிரசாரம் செய்து விட்டுப் போகிறார். எனவே, எந்தகாரணத்தை முன்னிட்டும் தென்னாட்டுப் பார்ப்பனரல்லாதார் "சுயராச்சியம்" "தேசியம்" "காங்கிரஸ்" "ஒத்துழையாமை" ஆகிய பார்ப்பனிய விஷயங்களில் கலந்து கொள்ளக்கூடாதென்றும், அப்படி கலந்து கொள்வது பார்ப்பனரல்லாத சமூக முன்னேற்றத்தின் தற்கொலையும் பார்ப்பனரல்லாத சமூக துரோகமும் ஆகுமென்றும்தான் நாம்கூறவேண்டியிருக்கின்றதே தவிர வேறொன்றும் சொல்ல முடியவில்லை.

---

# கதர் புரட்டு

## இராட்டின் இரகசியம்

கதர் இயக்கம் என்பது பார்ப்பனர்கள் தங்கள் பிழைப்புக்கும் ஆதிக்கத்திற்கும் மோட்சம் என்றும், சுயராஜ்ஜியமென்றும், தேசியம் என்றும் பாமர மக்களை ஏமாற்றி வயிறு வளர்த்து வாழ்ந்து வருவது போலவே, ஏழைகளுக்கு மெத்த உதவி செய்கின்றவர்கள் போல் வேஷம்போட்டு கதர் என்னும் பெயரால் பாமர மக்களை ஏமாற்றி வருகின்றதற்கு உபயோகப்படக் கூடியதே தவிர அதனால் உண்மையான பலன் ஒன்றும் கிடைக்காதென்று பலதடவை புள்ளி விவரங்களுடன் எழுதியும் பேசியும் மெய்ப்பித்தும் வந்திருக்கின்றோம். ஆனால் பார்ப்பனரல்லாதார்களிலேயே பலர் நாம் எழுதிவந்ததை சரிவர பகுத்தறிவை உபயோகித்து கவனித்து பார்க்காமல் மேலாக நுனிப்புல்லை மேய்வது போல் அலட்சியமாய் இருந்துகொண்டு பார்ப்பனர்களும் அவர்களது பத்திரிகைகளும் சொல்லுவதையே கிளிப்பிள்ளைபோல் திருப்பிச் சொல்லிக்கொண்டு மிக்கபொதுநலக்கவலை இருப்பவர்கள்போல்வேஷம்போட்டு நம்மைக் கண்டித்து வந்தார்கள். இப்பொழுது வேதாரண்யம் மகாநாட்டில் திரு. ராஜகோபாலாச்சாரியார் கதர் கண்காட்சியை திறந்து வைக்கும்போது அவர் செய்த பிரசங்கத்தில் நமது அபிப்பிராயம் முழுதினையும் தாராளமாய்ஒப்புக்கொண்டு விட்டார். அதாவது "இராட்டினால் கிடைப்பது தினம் ஒரு அணா கூலி தான்" "இதில்கிடைக்கும்வருமானம் சொற்பம் தான்" ஒரு அணா கூட சம்பாதிக்க முடியாதவர்கள் இந்த வேலை செய்யட்டும்; மேல் கொண்டு சம்பாதிக்கக்கூடியவர்கள் வேறு வேலை செய்யட்டும்; வேறு வேலையில் அதிகக் கூலி கிடைக்கும் வரை இதை செய்வோம்" என்று சொல்லி இருக்கின்றார். இதிலிருந்து "இராட்டினமே சுயராஜ்யம் சம்பாதித்துக்கொடுக்கக் கூடியது, அதை தான் எல்லோரும் செய்ய வேண்டியது, சுயராஜ்யத்திற்கு மார்க்கம் ராட்டினம் சுற்ற வேண்டியது, என்று சொல்லிக்கொண்டிருந்த "அருள் வாக்கு" இப்போது திரு. ராஜகோபாலாச்சாரியார் சொல்வதிலிருந்தே மருள்வாக்காய் விட்டதை நன்றாய் உணரலாம். தவிரவும், கதர் சம்மந்தமான புள்ளி விவரங்கள் காட்டி அதனால் பொதுஜனங்களுக்கு ஏற்பட்ட நன்மையை எடுத்துச் சொல்லி இருப்பதில் 1928ம் வருஷத்தில் 60 லட்சம் சதுர கஜம் கதர் துணி உற்பத்தி செய்து சுமார் 25 லட்ச ரூபாய்க்கு விற்பனை செய்து இருப்பதாக எடுத்துக்காட்டி மிக்க பெருமை பாராட்டிக்கொண்டிருக்கின்றார்.

இதன் யோக்கியதையை சற்று கவனிப்போம். 60 லட்சம் ச. கஜம் 25லட்சரூபாய்ஆனால் ஒருசதுர கஜத் துணி 0-6-8. ஒரு ச. கஜம் 0 6-8பை ஆனால் ஒன்றரை கஜ அகலமுள்ள துணி கஜம்ஒன்றுக்கு 0-10-0 அணா ஆகின்றது. எனவே இந்த அறுபதுலட்சம் சதுரகஜம் துணிக்குப் பதிலாக இந்தியாவில் இந்தியக் கூலிகளைக் கொண்டு யந்திரத்தில் நூற்கப்பட்ட நூலால்செய்த மில் துணியை வாங்கினால், கஜம்ஒன்றுக்கு0-3-4 பை வீதம் கிடைக்கும். அதாவது ஒன்றரை கஜ அகலமுள்ள மில் துணி கதரை விட நல்ல நைசும் கெட்டியும் உள்ள துணி கஜம் ஒன்றுக்கு 0-5-0 அணாவுக்கு கிடைக்கும், இதற்குக் கிரயம் $12\frac{1}{2}$ லட்சம் ரூ. தான் ஆகிறது. எனவே, 1928 வருஷம் உற்பத்திசெய்த60 லட்சம் ச. கஜம் கதர் துணியை பொது ஜனங்கள் வாங்கினதின் பயனாய் ஒரு வருடத்தில் பன்னிரண்டரை லட்சம் ரூ. நஷ்டமடைந்திருக்கின்றார்கள் என்பதை திரு. ராஜகோபாலாச்சாரியாரும் திரு. காந்தியும் மற்றும் "கதர் தொண்டர்களும் அன்பர்களும்" எந்தக் காரணத்தைக் கொண்டு ஆட்சேபிக்கமுடியாது.

ஆனால் அந்த நஷ்டப்பட்ட ரூபாய் ஏழைகளுக்குப்போய்சேர்ந்தது என்று ஒரு சமாதானம் சொல்லவருவார்கள். அதன் யோக்கியதையையும் சற்று கவனிப்போம். அதை பிரசங்கத்தில் திரு. ராஜகோபாலாச்சாரியார் 1928ம் வருடத்தில் கதர் நூல் நூற்றதற்கு கூலியாக 98000 பேருக்கு6லக்ஷம் ரூபாய்நூற்புக்கூலி கொடுத்ததாக சொல்லி இருக்கின்றார். இதில் நெசவுகாரர்களைப் பற்றி நாம் கவனிக்க வேண்டியதில்லை. ஏனெனில் நெசவுக்காரர்கள் கதர் நெய்வதால் சரியான கூலி கிடைப்பதில்லை என்றும், மில் நூலினால் அதிக கூலி கிடைக்கின்றதென்றும் சொல்லுகின்றார்கள் அவர்களுக்கு எப்படியும் வேலைகிடைத்துத் தான் தீரும். ஆதலால் அவர்கள் விஷயத்தை விட்டுவிட்டு நூற்புக்காரர் விஷயத்தைக் கவனிப்போமானால்98000 அல்லது ஒரு லட்சம் பேர் ஒரு வருடத்திற்கு ஆறுலட்சரூபாய் கூலி சம்பாதித்தியத்திற்காக அதுவும் தினம் ஒன்றுக்கு ஒரு அணா—ஒரு மணிக்கு ஒருபைசாவீதம்சம்பாத்தியத்திற்காக பொது ஜனங்களிடமிருந்து அதிகக் கிரயம் $12\frac{1}{2}$ லட்ச ரூபாயும், இவ்வியக்கத்தை நடத்தப் பொது ஜனங்களின் வசூல் பணம் சுமார் ஒன்றரை லட்சம் ரூபாயும், ஆக மொத்தம் 14 லட்ச ரூபாயும்செலவுசெய்து, மேல்கொண்டுஇந்த தொண்டுக்காக "மகாத்மா" காந்தி "உத்தமப் பிராமணர்" ராஜகோபாலாச்சாரி மற்றும் சர்தார் பட்டேல் முதலிய "மகான்களும்" மாதம் 150 200, 250 வீதம் "குறைந்ததொகை" வாங்கிக்கொண்டுவேலைசெய்யும் பல "உத்தமப் பிராமணர்" கதர்தொண்டர்களும், வருடமெல்லாம் தியாகம் செய்து ஆகவேண்டியிருக்கின்றது என்றால், கதரினால் இந்தியாவுக்கு ஏற்பட்டலாபம் என்ன என்றுதான் கேட்கின்றோம். மேலும் கதர், இயக்கம் இனியும் சற்றுவெற்றி பெற்று இன்னும் ஒரு லட்சம் பேருக்கு இன்னும் ஒரு ஆறுலட்ச ரூபாய் ஒருவருடத்திற்குக் கிடைக்கவேண்டுமானால், பொது ஜனங்கள் இனியும் மேல் கொண்டு ஒரு $12\frac{1}{2}$ லட்சம் ரூபாய் செலவு செய்ய வேண்டாமா என்றும் கேட்கின்றோம். அன்றியும் நமது கிராமத்து பெண்மணி ஒருவர் ஒரு மணிக்கு ஒருபைசா கூலி கிடைக்கும்படி இரவும் பகலும் வேலை செய்து மொத்தத்தில் வருடத்திற்கு ஆறு ரூ. சம்பாதிக்கும் இயக்கத்தில் ஈடுபட்டிருக்கும் "உத்தம பிராமணர்"கள் மாதம் ரூபாய் 250 முதல் 50 ரூபாய் வரையில் குறைந்த சம்பளத்திற்கு ஈடுபட்டிருந்து கொண்டு, நம்மை என்ன கேட்கின்றார்கள் என்றால் 'இந்த மணிக்கு ஒரு பைசா கூலியாவது கிடைக்கும்படி வேறு வேலை காட்டு பார்ப்போம்' என்று கேட்கின்றார்கள். அப்படியாவது உண்மையிலேயே இந்த தொண்டில் மணிக்கு ஒரு பையாவது கிடைக்கின்றதா என்று பார்ப்போம். நூற்புக்காரர்கள் இத்தக்கதரை வாங்கி கட்டிவிட்டார்களேயானால் அவர்கள் கொடுத்த அதிக விலைக்கும் அவர்களுக்குக் கிடைத்த கூலிக்கும் சரியாய் போகின்றது. மற்றும் வீட்டிலுள்ளவர்களுக்கு வாங்கிக் கொடுத்துவிட்டால் வேலைசெய்த பணமும் போய் மேல்கொண்டும் கையிலிருந்த பணமும் போய்விடுகின்றது. ஆனால் இந்த தொண்டில்ஈடுபட்ட 'தியாகிகளான' உத்தமப் பிராமணர்களுக்கு மாதம் 250 முதல் 50 ரூபாய் வரைமீதியாவதில் எந்தவித ஆட்சேபனையுமில்லை. எனவே சில "உத்தம பிராமணர்களின்" வயிற்றுப்பிழைப்புக்காக எத்தனை ஏழை மக்கள் நஷ்டமடைவது என்று கேட்கின்றோம். ஒருவனிடம் தேசம் என்றும், ஏழை என்றும், தர்மம் என்றும், சொல்லி மனதார ஏமாற்றி அடித்துப் பிடுங்கி மற்றொருவனிடம் நன்றாய் வேலை வாங்கிக்கொண்டு அரைக்கூலி கொடுப்பதென்றால், இதில் தேசியமோ கைத்தொழில் லாபமோ என்ன இருக்கின்றது என்றுதான் கேட்கின்றோம். இதற்காக வேலை வாங்காமல் இந்தக் கூலி கொடுப்பதாயிருந்தால் கூட பொது ஜனங்களுக்கு இவ்வளவு நஷ்டம் உண்டாகாதென்றே சொல்லுவோம். இந்தப் பெரிய தர்ம கைங்கரியத்திற்குஆச்சிரமம் வேண்டியதில்லை; மகாத்மாக்கள் வேண்டியதில்லை; உத்தமப் பிராமணத் தொண்டர்களும் வேண்டியதில்லை; என்ப

# சுதந்தரம்

[சுஞானந்தம் வரைவது]

உலகத்தில் அறியாமையே தவிர அடிமைத்தனம்கிடையாது. சுதந்தரம் அறிவின் குழந்தை.

மனிதனின் சரித்திரத்தை கவனித்துப் பார்ப்போமானால், அது மிருகத்தன்மை, அநீதி, அடிமைத்தனம் இவைகளின் சரித்திரமாகவே காணப்படும். இவைகளின் வழியாய் அநேக லட்சக்கணக்கான வருஷங்களாய் மெள்ளமாகவும் கஷ்டத்தோடும் மனிதன் முன்னேறி இருக்கின்றான். அவன் குரு, அரசன் இவர்களின் விளையாட்டுப் பதுமையாகவும், மூட பக்தி கொடிய பலாத்காரம் இவைகளின் இரையாகவும் இருந்திருக்கிறான். முடி சூட்டப்பட்ட அதிகாரம் அறியாமையை பயத்தால் ஆண்டுவந்தது. வஞ்சகம், கொடுங்கோன்மை இந்த இரண்டு கழுகுகள் மனிதனின் சுதந்தரங்களைக்கிழித்துசாப்பிட்டுவந்தன. இவைகளிலிருந்தெல்லாம் தப்பிவர ஒரே வழிதான் இருந்தது; ஒரே வழிதான் இருக்கின்றது. அதாவது அறிவின் முன்னேற்றம்; மூளை மூட பக்தியின் விலங்குகளால் சிறைவைக்கப்பட்டிருந்தது; சுதந்தரத்தின் விரோதிகளால் தீங்கிழைக்காமல் விடப்பட்டது உலகத்தில் ஒன்றுமில்லை. மனிதனின் சுதந்தரங்களை அழித்து ஒழிக்க குரூரமும் கொடுங்கோன்மையும், முழுதும் பிரயோகிக்கப்பட்டு வந்தது. இந்த பெரிய போராட்டத்தில் ஒவ்வொரு குற்றத்துக்கும் வெகுமதியும், ஒவ்வொரு நன்மைக்கும் தண்டனையும் அளிக்கப்பட்டது படித்தல், எழுதல், எண்ணுதல், ஆராய்தல், இவைகளெல்லாம் குற்றங்களாக பாவிக்கப்பட்டது.

ஒவ்வொரு சாஸ்திரமும் வெறுத்து தாரத்தள்ளப்பட்டது. பலிபீடமும், சிம்மாசனமும் சேர்ந்து மனித வர்க்கத்தின் முன்னேற்றத்தை தடுத்தன. மனிதன், தனக்காக வேலை செய்யக்கூடாது என்று அரசன் சொன்னான். மனிதன் தனக்காக யோசிக்கக்கூடாது என்று குரு சொன்னார். ஒருவன் கைகளுக்கு விலங்கிட்டான். மற்றவன் ஆத்மாவிற்கு விலங்கிட்டான். இந்த அநியாயமான முறையின்படி மனிதனின் உயர்ந்த அறிவானது காலால் மிதித்து நசுக்கப்பட்டிருந்தது.

மனித ஜாதி சிறையிடப்பட்டிருந்தது. சில சிறைச்சாலை ஜன்னல்களின் வழியாக வெளிச்சம் கொஞ்சம் சிறிது சிறிதாக தன் வெளுத்த யோசனையுள்ள முகத்தை கொஞ்சமாக வெளிப் பிரகாசிக்க ஆரம்பித்தது. அறிவானது காட்டிற்று. ஒவ்வொன்றாக சிறைச்சாலைகளின் கம்பிகள் உடைத்தெறியப்பட்டது. பெருந்தகையுடையமனிதர்கள் சிலர் தப்பியோடி தங்களின் சகோதர பிரஜைகளின் சுதந்தரங்களைக் காப்பாற்ற தங்களின்சக்தியையும் உயிரையும் தியாகம் செய்தார்கள்.

சில வருஷங்களுக்கு முன் தான் மனிதனின் இருதயத்தில் ஓர் புது சக்தி தோன்றி விழிப்பை உண்டாக்கிற்று. ஒரு முடியணிந்த திருடன் பிறரை தனக்காக வேலைசெய்யும்படி கட்டாயப்படுத்த அவனுக்கென்ன அதிகாரம் உண்டென்று மனிதன் கேட்க ஆரம்பித்தான். இந்த கேள்வி கேட்கும் மனிதனை துரோகி என்றார்கள். இன்னும் சிலர் தங்கள் எண்ணத்தை அடக்கி ஆள இந்த குருவிற்கு என்ன அதிகாரமிருக்கிறதென்று கேட்டார்கள். அவர்கள் மதத்துவேஷிகளென்று அடைக்கப்பட்டார்கள். இந்த ஆராய்ச்சிகளைத் தடுக்க என்ன ஏற்பாடுகள் செய்யலாமென்று குருக்களும் அரசர்களும் யோசித்தார்கள். மனிதன் சுதந்தரத்துடனிருந்தால் பெரும் அபாயம் சம்பவிக்குமென்று அவர்கள் சொன்னார்கள். இப்பொழுதும்சொல்லுகிறார்கள். என்ன அநியாயம்! இந்த அகண்ட அறிவின் சமுத்திரத்தில் ஒவ்வொரு கப்பலுக்கும் மிதந்துபோக இடமுண்டு. இந்த அகண்ட அறிவின் ஆகாயத்தில் ஒவ்வொரு பக்ஷிக்கும் பறந்து கொண்டிருக்க இடமுண்டு.

எந்த மனிதன், தன் எண்ணப்படி செய்து முடிக்க பயப்படுகிறானோ அவன் அடிமையாகிறான். அவன், தனக்கும், அவனுடைய சகோதர பிரஜைகளுக்கும் தீங்கிழைத்தவனாகிறான்.

அப்படி நின்று கொண்டிருக்கும் ஒவ்வொருவனும் " தனக்குத்தான் யோசித்துக்கொள்ள சம சுதந்தரமுள்ளவனாகிறான். ஒவ்வொருவனுக்கும் தன் வருங்கால நிலைமையையும், இன்னும் அநேக முக்கியகேள்விகளையும் யோசித்து முடிவு செய்ய சம சுதந்தரம்வேண்டும். எல்லா மனிதர்களுக்கும் யோசிக்கவும், யோசித்ததை வெளியிடவும் சுதந்தரம் வேண்டும். எவனொருவன் அந்த சுதந்தரத்தை மறுக்கிறானோ அவன் அறிவு சம்பந்தமான திருடனும், கள்ளனுமாகிறான்.

மனிதனின் ஆத்மாவிலிருந்து சங்கிலியை கழட்டி விடு. அந்தத்தடையங்களை உடைத்தெறி. எனக்கு யோசிக்க சுதந்தரமில்லா விட்டால், எனக்கு மூளை ஏன் உண்டாக்கப்பட்டிருக்கிறது? எனக்கு யோசிக்க சுதந்தரமில்லாவிட்டால் பிறருக்கு மாத்திரம் உண்டோ? கொஞ்சம் எண்ணுள்ள ஒரு வகுப்பார் ஒன்றாகக் கூடி ஒரு வீட்டைக் கட்டி, கற்சிலையையும் வைத்து மணியையும் மாட்டிவிட்டால், அவர்களுக்கு மாத்திரம் யோசித்து முடிவு செய்ய சுதந்தரம் உண்டோ? சுதந்தரமுள்ளவன் பிறருக்கும் சுதந்தரமளிக்கிறான். எவனொருவன் தான் பிறருக்கு கொடுக்க இஷ்டப்படாத சுதந்தரங்களை தனக்காக மட்டும் கேட்கிறானோ அவன் பொய்யனும், வெட்கங்கெட்டவனுமாவான்.

வெகு பழைய காலங்களில் நம் முன்னோர்கள் (ஆம். அவர்கள் நல்ல வேளையாக இறந்து மண்ணோடு மண்ணாய் விட்டார்கள்) தங்களுக்கு பிரியமுள்ள அபிப்பிராயங்களை ஜனங்களை ஏற்றுக்கொள்ளும்படி அவர்களை பலாத்காரப்படுத்தக் கூடுமென்று விபரீத எண்ணங்கொண்டிருந்தார்கள். ஏன்? இப்பொழுதும் இந்த தேசத்தின்பலபாகங்களில்இம்மாதிரி எண்ணங்கள் பிரவர்த்தித்துக் கொண்டிருக்கிறது. மிகவும் மதக் கொள்கைகளை அனுஷ்டிக்கும் சிலர், நாஸ்திகர்களை பற்றியும், காரணவாதிகளை பற்றியும் சொல்வதாவது: "நாம் அவனோடு வியாபாரம் செய்ய மாட்டோம்; அவனுக்கு ஓட்கொடுக்க மாட்டோம். அவன் நியாயவாதியாக இருந்தால் எங்கள் கேசுக்கு அவனை அமர்த்தமாட்டோம்; அவன் வைத்தியனாகஇருந்தால், இறந்தாலும் கூட அவன் மருந்தை உட்கொள்ளோம். அவனை விருந்திற்கு அழைக்கமாட்டோம். அவனை எல்லாவற்றிலும் தள்ளிவைப்போம். அவன் நம் கொள்கைகளை நம்பவேண்டும். நம் கடவுளை அவன் வணங்கவேண்டும். இல்லாவிட்டால் அவனுக்குபயோகமான எதுவும் நாங்கள் செய்யமாட்டோம்"

பழைய காலங்களில், ஜனங்கள் எல்லோரையும் ஒரேவித அபிப்பிராயத்துக்கும், தீர்மானத்துக்கும் ஒருங்கே கொண்டுவர சில புத்திமான்கள் வெகு பாடுபட்டார்கள். மூளையிலும் சுற்றுப் பக்கங்களிலும், படிப்பிலும், நோக்கங்களிலும், அறிவிலும் அனுபோகத்திலும் எவ்வளவோ வித்யாசமுள்ள இந்த கோடிக் கணக்கான ஜனங்களை கட்டாயத்தின் பேரில் ஒரேவி அபிப்பிராயத்துக்கும், தீர்மானத்துக்கும் கொண்டு வருவது எப்படி சாத்தியமாகும்?

மதத்தின் பெயரால் எவ்வளவோ கொடுங்கோன்மைகள் நடத்தப்பட்டது; எத்தனையோவித வேதனையந்திரங்கள் அவர்களால் கண்டு பிடிக்கப்பட்டு கையாளப்பட்டன. எவனுக்காவது மத விஷயமாக கொஞ்சம் சந்தேகம் வந்து வெளியிட்டுவிட்டானோ, போதும்! மறுபடியும்அவன் எண்ணத்தைமாற்றும்வரை அல்லது தனது எண்ணத்தை மாற்றிவிட்டேனென்றுசொல்லும்வரைமேற்படிவேதனை யந்திரங்களினால் மரணவஸ்தைதான். ஜனங்கள் நம் முன்னோர்களிடம் அனுபவித்த துன்பங்களும் கஷ்டங்களும் விரிவாக சொல்ல முடியுமா?

ஆனால் இதன் மத்தியில் தங்கள் அபிப்பிராயத்தையும், தீர்மானத்தையும் ஒரு மயிரிழையும் விட்டுக் கொடுக்காத தைரியம் வாய்ந்த புருஷர்கள் தோன்றாமலில்லை.

"மரணம் வந்தாலும் வரட்டும் என் தீர்மானத்தை மாற்றேன் என்று சொன்ன மாட்சிமை தங்கிய சில இருதயங்கள் மனித வர்க்கத்தில் இருந்தில்லாமலில்லை. இவ்வித சிரேஷ்டர்கள் இல்லாமலிருந்தால் நாம் இப்போது இந்த நிமிஷம் நரமாமிச பக்ஷிணிகளாய், நம் உடம்பிலெல்லாம் மிருகங்களின் உருவங்களை பச்சை குத்திகொண்டு ஏதோ ஓர் உலர்ந்த பாம்பை சுற்றி நடனமாடிக்கொண்டிருப்போம்.

தான் உண்மை என்று நம்பினதைப் பகைக்கும், மரணத்துக்கும் சற்றும் அஞ்சாமல் மேன்மையாகவும், தைரியமாகவும், காப்பாற்றி நின்ற ஒவ்வொரு பெருந் தன்மையுள்ள நல்ல மனிதனுக்கும் நாம் நம் மனமார்ந்த வந்தனத்தை செலுத்த வேண்டும்.

---

தோடு இது கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைக்கும் வேலையை விட மோசமானதா இல்லையா? இந்தக் காரியம் என்று தான் பொது ஜனங்களை கேட்கின்றோம். ஆகவே கதர் இயக்கமென்பது சிலர் தங்களுக்கு ஆதிக்கமும், சிலர் தங்களுக்கு வயிற்றுப் பிழைப்பும் இருக்கட்டும் என்று கருதி பொது ஜனங்கள் பணத்தில் அனுபவிக்கும் ஒரு பதவியே தவிர, அதனால் உண்மையான வருமானமோ தர்மமோ ஒன்றும் இல்லை என்றும், தமிழ் நாட்டைப் பொறுத்த வரை பார்ப்பனரல்லாதாருக்கு தொல்லை விளைவிக்க பார்ப்பனர்களால் உபயோகப்படுத்தப்படும் ஒரு சாதனமென்றும் தைரியமாய்ச் சொல்லுகிறோம்.

---

## உடுமலைப்பேட்டை டி. மு. கோர்ட்டு

1929ளு சி நெ. 223.

ரா. தி. பா. திருமலைப்ப செட்டியார் — வாதி

சங்கர நாராயண நாயர்—1
நீலகிரி ஜில்லா உதகமண்டலம் சப்கோர்ட்கல்பா குன்னூரிலிருக்கும் சாயாக்கடை பாஸ்கர நாயர்-2 } பிரதிவாதிகள்

ஷை 2-ம் பிரதிவாதிக்கு தெரிவிக்கின்ற நோட்டீஸ்; மேற்படி நெம்பரில் வாதி பிரதிவாதிகள் பேரில் கணக்குப்படி ரூ. 34-4-0க்கும் பின் வட்டி செலவு தொகை வகையறாவுக்கும் வியாஜ்யம் செய்து விசாரணைக்காக 16-9-1929ᵗ தேதியில் வாய்தா போடப்பட்டிருக்கிறது. ஷை தேதியில் ஷை 2-ம் பிரதிவாதி ஷை கோர்ட்டில் காலை 10-மணிக்கு ஆஜராகத் தவறினால் ஷை 2-ம் பிரதிவாதிபேரில் ஒரு கக்ஷியாய் தீர்ப்புச் செய்யப்படும்.

எ. முத்தையா பிள்ளை
உடுமலைப்பேட்டை, 4—9—29 | பி.ஏ., பி.எல்., வாதி வக்கீல்.

---

மதன லீலா படங்கள்

64 வகை சித்திரப்ப ரகசிய உருவ ஒரிஜனல் மாதர் போட்டோ படங்கள்

ஆல்பம் உள்பட விலை ரூ. 5.
K. G. STORES, VEPERY, MADRAS·

(9-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ளுமாறு ஓர் நிலைமை அளித்து வருகின்றது. இந்தியர்கள் ஏனையதேசங்களுடன் சம அந்தஸ்துடன் பிரதிநிதிகளாய்த்தோன்றும் ஓர்சமஉயர்வுடையவர்கள்தாம்என்பதை இது நிரூபித்துக்காட்டுகின்றது. (கரகோஷம்) ஜினிவாவுக்குச்செல்லும் ஒவ்வொருவரும், ஆங்கு இந்தியாவின் யோக்கியதையைப் பிறருக்கு நன்கெடுத்துக் காட்டும் ஒரு பெரும் பொறுப்பைத் தாங்கிச் செல்லுகின்றார். நான் தனிப்பட இந்தியாவை பிறர் கண்களில் உயர்த்திக் காண்பித்திருப்பதைப்பற்றி நான் கூறமுடியாவிட்டாலும், என் சகாக்கள் பலர் இவ்வுலக அறிஞர்களில் ஆங்கு ஈடற்றுத் திகழ்ந்தார்கள் என்று மட்டும் உறுதியாகக் கூறுவேன். அங்கு இவர்கட்கு ஏனைய அங்கத்தினர்களுடன் பேசும் உரிமை அளிக்கப்பட்ட காரணத்தால், இவர்கள் இந்தியாவின் நோக்கங்களைப்பற்றியும், இந்தியாவின் தன்மையைப் பற்றியும் நன்கெடுத்துப் பேசி, பிறர்க்கு நம்மீது ஓர் அநுதாபம் ஏற்படும் வகையில் வேலை செய்திருக்கின்றனர் என்பதும் நிச்சயமே. நான் இந்த ஒரு பயனைக்கருதியே தான், நான் ஓர் இந்தியப் பிரதிநிதியாய் சர்வதேச சங்கத்திற்குச் செல்ல ஒருப்பட்டேன். சீமாட்டிகளே! சீமான்களே! இந்தியாவைப் பிறநாட்டார் நன்குணர்ந்துகொள்ளும்படி நாம் விளம்பரப்படுத்திக்கொள்வதனால் மிகவும் விரிந்த பயன் உண்டு என்பதை நம் மக்கள் நன்றாக அறிந்துகொள்ளவேண்டும். தேசியத் தொடர்பாய் எமது பிரதிநிதித்துவங்கள் எந்த விதமான நன்மைகளைப் பயக்கின என்பதைப்பற்றி நான் சமயம் வாய்ந்தபோழ்து விரிவாக எடுத்துரைக்கக் கருதியிருக்கிறேன். ஜினிவா சர்வதேச அரசியல் சங்கம் எத்தகைய நலனைப் புரிந்திருப்பினும், அது உலக சமாதானத்திற்கு உண்மையான அடிப்படை கோலியிருப்பினும், இல்லாமலிருப்பினும், சர்வதேச தொழிலாளர் சங்கத்தால் சமுதாய விஷயங்களிலும், தொழிலாளர் நிலைமையைப்பற்றிய விஷயங்களிலும் பெரும் நன்மை ஏற்பட்டிருக்கின்றது என்றே கூறுவேன். இவ்விஷயங்களைப் பொறுத்த மட்டில் சர்வதேச அரசியல் சங்கமும், தொழிலாளர் சங்கமும் பெருமை படைக்கலாம் என்று நான் உறுதியாய்த் தெரிவிக்கின்றேன். உலகத்தில் உள்ள தொழிலாளர்கட்கும், முதலாளிகட்கும் சமரசம் இருந்தாற்றான் உலகம் சமாதானத்துடன் இருக்கும் என்று வெர்சேல்ஸ் சமாதான உடன்படிக்கையில் அங்கீகரித்திருக்கப்பட்டுள்ள உண்மைப்படி, இப்பொழுது சர்வதேச தொழிலாளர் சங்கம் முற்போக்குடைய பல முறைகளை அநுஷ்டித்து வந்திருக்கின்றது.

பள்ளி மாணவர்கட்கு:

என் இளந் தோழர்களே! நீங்களும் உங்கள்போன்ற சென்னை மாணவர்களும் என்னைக் கனப்படுத்தி, நான் உங்கட்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டவனாகச் செய்து விட்டீர்கள். சென்னை மாணவர்களும், மற்றுமுள்ள மாணவர்கள் அனைவரும் எப்பொழுதும் என்மீது அதிக பட்சத்தைச் செலுத்தி வருகின்றனர். எப்பொழுதும் என் குறைகளை மன்னித்து, நான் செய்துள்ள வேலைகள் அணுத்துணையாயினும், அவைகளை மலைத்துணையாகப் போற்றிப் புகழ்கின்றனர். நான் சிறிது காலத்திற்குமுன் ஓர் மாணவனாய் இருந்தமைபற்றி, இப்பொழுது மாணவர்கள்தம் மதிப்பின் வலிமையைப்பற்றி நான் நன்குணர்ந்திருக்கின்றேன்.

இன்றுகாலை நான் முன்விம் மாணவர்களிடம் பேசும் பாக்கியத்தைப் பெற்றிருந்தேன். அவர்களிடை கூறியதுதான் உங்கட்கும். நீங்கள் சாதி, சமயம், வகுப்பு முதலிய வேற்றுமைகளைக் கடந்து முற்போக்கடைதல் வேண்டும். இந்த சமயத்தில் இளைஞர் இயக்கங்கள் இவ்வுலகத்தில் செய்துள்ள வேலைகளைப்பற்றி நான் கூறுவதற்கில்லை இப்பொழுது நம் நாட்டு இளைஞர்பால் இயங்கும் புத்துணர்ச்சிதான் நம் பிற்கால நலனுக்கு சாதகமான நல்விதையாகும். எனவே, உங்கள் முன்னேற்றமுயற்சிகளில் நீங்கள் வெற்றிபெற வேண்டும் என்று வாழ்த்துகின்றேன். இதற்கு நீங்கள் மனிதனுக்கு மனிதன் வேற்றுமைப்பட்டு இருக்கத்தக்க வகையில் உங்கள் சமூக, வகுப்புத் தீமைகளைக்கடந்து கரையேறுதலே முக்கியமெனக் கருத வேண்டும். இத்தீமைகட்கு ஆதாரமாய் உள்ள மதங்களின் கட்டுப்பாடுகளை வீரத்துடன் உடைத்தெறிந்துமுற்போதல் வேண்டும். இதனாற்றான் நம் நாட்டின் சுயேச்சைக்கு நீங்கள் உங்கள் ஊழியத்தைச் செய்தல் வேண்டும்.

ஈரோடு நகரசபைத் தலைவருக்கும் மற்றைய அங்கத்தினர்கட்கும் என் மனமார்ந்த வந்தனம்.

## சுயமரியாதைத் திருமணங்கள்

முத்துப்பேட்டை:—இவ்வூர் பேட்டையில் 25-8-29ந்தேதி காலை திரு. சாம்பசிவத்திற்கும், செல்வி பாப்பம்மாளுக்கும் சுயமரியாதை முறையில் பட்டுக்கோட்டை தமிழ்ப் பண்டிதர் திரு: கி. வ. திருஞான சம்பந்தமவர்களால் திருமணம் செய்து வைக்கப்பட்டது என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

*　　*　　*

குண்ணத்தூர்:—மோட்டார்சொந்தக்காரர் திரு. டி. கே. சங்கரையா நாயுடு குமாரர் திரு: சங்கரையாவிற்கும், திரு. நாராயணசாமி நாயுடு குமாரத்தி செல்வி வெங்கிடம்மாளுக்கும் மணமகன் கிரகத்தில் சுயமரியாதை முறையில் ஆவணி மாதம் 10-ந் தேதியன்று திருமணம் நடைபெற்றது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

*　　*　　*

கோறுக்கை:—திரு. குமாரசாமியாருக்கும், செல்வி ரஞ்சிதத்தம்மாளுக்கும் சுயமரியாதை முறையில் கதராடைகளுடனும், கதர் நூல் மங்கிலியத்துடனும் 1–9–29-ல் மணமகளின் தந்தையாராலேயே திருமணம் நடத்தி வைக்கப்பெற்றது என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

*　　*　　*

பாம்பக்குடி:—இதைச் சேர்ந்த காமக்கோட்டையில் திரு. காசிவிஸ்வநாத பிள்ளைக்கும், செல்வி சுப்பம்மாளுக்கும், சுயமரியாதை முறையில் 25-8-29ந் தேதியன்று விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

*　　*　　*

ஈரோடு:—நிறைநாட் செல்வன் ஈ. வி. வாசுதேவனுக்கும், வேலூர் திருநிறைச் செல்வி முத்தம்மாளுக்கும் 8-9-29 அன்றுகாலை 5-மணிக்கு திருமணம் நடைபெற்றது.

*　　*　　*

திருச்சி:—நிறைநாட் செல்வரும், சுயமரியாதைப் பெருந்தொண்டருமாய திருச்சி திரு: கி. ஆ. பெ. விசுவநாதனுக்கும் பூதகுடிரயில்வேஸ்டேஷன் மாஸ்டர் திருவாளர் தி. அ. பெரியசாமிபிள்ளை அவர்கள் தலைமகள் திருநிறை சுப்புலட்சுமி அம்மாளுக்கும் 8-9-29ல் காலை 6-30 மணிக்கு திருமணம் நிகழ்ந்தது.

*　　*　　*

திருநெல்வேலி:—நிறைநாட் செல்வர் மருதவிநாயகம் பிள்ளைக்கும் திருநிறைச்செல்வி சித்திர வடிவாம்பாளுக்கும் சுயமரியாதைத் திருமணம் 1-9-29ல் நிகழ்ந்தது.

*　　*　　*

சூலூர்:— சூலூர் யூனியன்போர்டு காரியாலயம் ராவ்பகதூர் சி. எஸ். ரெத்தினசபாபதி முதலியார் அவர்களால் திறந்து வைக்கப்படும். அது காலை கோலாட்டம். சிறுவர் வழக்கம் முதலிய நடைபெறும்.

## தேர்தல் நிராகரிக்கப்படல்

—0—

### மாஜி மந்திரியின்மனு விளைவு


மாஜி மந்திரி ரெவரெண்டு நிகலெஸ்ராய், ராய்பகதூர் நாகேந்திர நாத் சவுத்திரி தேர்ந்தெடுக்கப்பட்டது சரியான தல்லவென்று மனு கொடுத்தார். அவ்வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்யப்பட்டு, தேர்தல் சரியானதல்லவென்று விளம்பரஞ் செய்யப்பட்டது. எனவே புதிய தேர்தல் நடைபெறும்.


## படக்காட்சி

ரூ 20 ஆகயிருந்தது ரூ. 5-0-0 தான்

### அமெரிக்கன் சிறிய சினிமா மெஷின்

வெகு நூதனமான இந்த மெஷினினால்பொதுப் படக்காட்சிச் சாலையில் அநுபவிக்கும் ஆனந்தத்தை உங்கள் வீட்டிலேயே அடையலாம்.



நர்த்தனமாடுவது, நீரச்செயல், கள் மோட்டார், ரயில், ஏரோப்ளேன் விபத்துகள், பாரிஸ் மாதர் லீலைகள், மலைகள், ஆறுகள் முதலிய காக்ஷிகள் ஓடுவதும் அசைவதும் மிகத் தெளிவாகத் தெரியும். பிலிம் டேப் ஒரு கஜம்கூட அனுப்பப்படும். உபயோகிக்கும் முறையும் மெஷினுடன் உண்டு.

மெஷின் குறைந்த (அசல்)

| | | | |
|---|---|---|---|
| விலை ரூ. | 5 | 0 | 0 |
| தனி பிலிம் டேப் 1 கஜம் | 0 | 6 | 0 |
| 3 கஜங்கள் | 1 | 0 | 0 |

முந்துங்கள்!

லக்ஷ்மி ட்ரேட்ஸ் கம்பெனி,
173, தங்கசாலை வீதி, சென்னை.
(30)

## ஆனந்தபோதினி

இனிய தமிழில் வெளிவரும் மாதப் பத்திரிகை; தமிழ் நாட்டில் வெளிவரும் மாதச் சஞ்சிகைகளில் முதன்மை பெற்றது; 20,000 சந்தாதாரர்களையுடையது; கல்வியிற் சிறந்தோர் பலரால் எழுதப்பட்டு வரும் உயர்ந்த வியாசங்களைக் கொண்டு வெளிவருவது; எம்மதத்தார்க்கும் சம்மதமான பொது நன்மைகளைப் போதிப்பது; 64-பக்கங்கொண்டது; முகப்பு ஆப்டோன் படத்துடனும், லயன் பிளாக்குகளுடனும் மாதந்தோறும் குறித்த தேதி தவறாமல் வெளியாகிப் பலர்க்கும் ஆனந்தத்தை யூட்டி வருவது; மிகக் குறைந்த சந்தாத் தொகையுள்ளது.

மாதிரி காபி இனாம்.

வருட சந்தா தபால்கூலி யுள்பட
உள்நாடுகளுக்கு ரூபா 1—0—0
வெளிநாடுகளுக்கு ,, 1—4—0

ஆனந்தபோதினி ஆபீஸ்,
தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.
(5)


## கடவுள் கடவுளென கதையை துவையாதே

ரோஜா முத்தையா

# மதுரை-இராமநாதபுரம் பார்ப்பனரல்லாத இளைஞர் 2-வது மகாநாடு

## செங்கற்பட்டு சுயமரியாதை மகாநாட்டு தீர்மானங்கள் ஒப்புக்கொள்ளப்பட்டன

ஆகஸ்ட் 26ம் தேதி காலை 9 மணிக்கு மதுரை இராமநாதபுரம் பார்ப்பனரல்லாத இளைஞர் இரண்டாவது மகாநாடு மறுபடியும் திரு. என். சிவராஜ் அவர்கள் பி. ஏ. பி. எல்., எம். எல். சி. தலைமையில் கூடியது. மகாநாட்டு கூட்டத்திற்கு ஏராளமான சனங்கள் வந்திருந்தார்கள். பிறகு கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### தீர்மானங்கள்

1. மாட்சிமை தங்கிய நமது சக்ரவர்த்தி அவர்கள் அபாயகரமான நோயிலிருந்து பூரண சௌக்கியமடைந்ததற்காக இம்மகாநாடு தனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றது.

இந்தத் தீர்மானம் அக்கிராசனாதிபதி அவர்களால் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது.

2. ஒப்புயர்வற்ற நமது தலைவர்பானகல்அரசரும், இராமநாதபுரம் இராஜா அவர்களும், நீதிபதி ஓ. தணிகாசலம் அவர்களும் காலமானதுபற்றி இம்மகாநாடு தனது ஆழ்ந்த துக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றது.

நமது மகாநாட்டிற்காக மிகுந்த ஊக்கத்துடன் உழைத்த தொண்டர் படைத் தலைவர் திரு. கே. எஸ். குருசாமி அவர்களின் மனைவியார் நேற்று இரவு திடீரென அகால மரணம் அடைந்ததற்காக இம்மகாநாடு அவருக்குத் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

இந்த இரண்டு தீர்மானங்களும் அக்கிராசனாதிபதியவர்களால் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது.

3. பார்ப்பனரல்லாதாருடைய நன்மைக்காக உழைப்பதற்கென்றே இந்திய ஊழியச் சங்கத்தைப்போல ஒரு சபையை ஏற்படுத்த வேண்டியது அவசியமென்று இம்மகாநாடு கருதுகிறது.

மேற்கண்ட தீர்மானத்தை திரு. எல். எம். மிக்கேல் அவர்களால் முன்மொழியப்பட்டு திரு. டி. எல். கந்தசாமியவர்களால் வழி மொழியப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது.

4. (அ) பள்ளிக்கூடங்களில் மூடக்கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு, மூட நம்பிக்கையை வளர்க்கக்கூடிய நூல்களை பாடப்புத்தகங்களாக எடுத்துக்கொள்ளக்கூடாதென்று இம்மகாநாடு சர்க்காரையும் ஸ்தலஸ்தாபன அதிகாரிகளையும் பிரைவேட்பாடசாலைகளின் தலைவர்களையும் பலமாகக் கேட்டுக் கொள்ளுவதோடு பார்ப்பனரல்லாத ஆசிரியர்கள் அம்மாதிரிப் புத்தகங்களை எழுதக்கூடாதென்றும் இம்மகாநாடு கேட்டுக் கொள்ளுகிறது:

(ஆ) இதன் சார்பாக சர்க்காரால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள பாடப் புத்தக கமிட்டியாரால் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிற புத்தகங்களில் எந்த எந்தப் பாடங்களை எடுத்துவிட வேண்டுமென்று அறிக்கைவெளியிடும்படி ஒரு கமிட்டி நியமிக்க வேண்டுமென இம்மகாநாடு கோருகிறது.

இவ்விரு தீர்மானங்களும் காரைக்குடி திரு. பீம்சின் அவர்களால் முன்மொழியப்பட்டு, அருப்புக்கோட்டை திரு. டி. கருப்பையா அவர்களால் வழி மொழியப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது.

5. மதுரை இராமநாதபுரம்ஜில்லாக்களின் தலை நகரங்களிலும் கவர்ன்மெண்டு லோகல் போர்டுமிஷன் பள்ளிக்கூடங்களில் பழைய மாதிரியே மகமதிய மாணவர்களுக்கு அரைச்சம்பளம் வாங்க வேண்டுமென்றும், அவர்களுடைய தாய்மொழிகளான அரபி உருது பாரசீகம் முதலிய பாஷைகளை இஷ்டப் பாடமாக வைக்க வேண்டுமென்றும், மகமதியப்-பெண்களுக்கு வசதியான டிரெயினிங் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்த வேண்டுமென்றும் இம்மகாநாடு அரசாங்கத்தாரைக் கேட்டுக் கொள்ளுகிறது.

இத் தீர்மானம் சின்ன காஜியார் ஜனாப்எஸ்.ஏ, எப். இப்ராகிம் அவர்களால் முன் மொழியப்பட்டு, மதுரை முனிசிபல் கவுன்சிலர் திரு. துரைசாமி அவர்களால் வழி மொழியப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது.

(6) விவாக வயது, இணக்க வயது ஆகிய இவையிரண்டையும்நிர்ணயிப்பதற்காகப் பொது சன அபிப்பிராயத்தை யறிந்து அறிக்கை வெளியிடும்படி அரசாங்கத்தாரால்நியமிக்கப்பட்ட கழகத்தின் சிபார்சுகளை இம்மகாநாடு முழு மனதுடன் ஆதரிக்கிறது.

(ஆ) இந்த அறிக்கை அடுத்த அகில இந்திய சட்டசபையின் ஆலோசனைக்கு வரும்போது அதை ஆதரித்து நிறைவேற்ற வேண்டிய முயற்சிகளைச் செய்யும்படி இம்மாகாண இந்திய சட்டசபை அங்கத்தினர்களை இம்மகாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

இத்தீர்மானங்கள் திரு. வி. வி. ராமசாமியவர்களால் முன் மொழியப்பட்டு, திரு. என். வி. லிங்கம் அவர்களால் வழி மொழியப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது.

7. மக்கள் ஒருவருடன் ஒருவர் பேசுகையில் எஜமானன், ஊழியன் என்ற வித்தியாசங்களும், உயர்வு தாழ்வு, வகுப்பு வித்தியாசங்களும் பாராட்டாமல் மரியாதையாகப் பன்மையில் பேசும் வழக்கத்தைக் கைக்கொள்ள வேண்டுமென்றும், சிறப்பாக இளைஞர்கள் சிறுவயதிலிருந்தே இந்த வழக்கத்தைப் பழகிக்கொள்ள வேண்டுமென்றும் இம்மகாநாடு வற்புறுத்துகிறது.

திரு: டி. எஸ். கந்தசாமி அவர்களால் இத்தீர்மானம் முன் மொழியப்பட்டு, திரு. பிச்சப்பா சுப்பிரமண்யம் அவர்களால் வழிமொழியப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது.

8. சர்க்காருடையவும், ஸ்தலஸ்தாபனங்களுடையவும் ஆதீனத்திலிருக்கிற சத்திரம், சாவடி, வைத்தியசாலை முதலிய இடங்களிலும் ரயில்வே அதிகாரத்துக்குட்பட்ட உண்வுச் சாலைகளிலும் பார்ப்பனர் அல்லாதாரென்ற பாகுபாடு காட்டப்படுவதை அறவே ஒழித்து எல்லாப்பொது இடங்களிலும் எல்லோருக்கும் சம உரிமை கொடுக்கவேண்டுமென்று இம்மகாநாடு கண்டிப்பாகத் தெரிவித்துக் கொள்ளுகின்றது. இத்தீர்மானம் அருப்புக்கோட்டை திரு. சொக்கலிங்கப் பாண்டியர் அவர்களால் முன் மொழியப்பட்டு, திரு. சுப்பிரமணியன் அவர்களால் வழி மொழியப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது.

9. மதுரை இராமநாதபுரம் ஜில்லாக்களில் உள்ள பார்ப்பனரல்லாத இளைஞர்கள் சார்பாக சங்கக்கொள்கைகளை இவ்விரு ஜில்லாவிலுள்ள கிராமங்களில் தீவிரமாகப் பிரசாரம் செய்வதற்கு அடியிற்கண்ட கனவான்களடங்கிய ஒரு நிரந்தர சபையைத் தேர்ந்தெடுத்து அவர்களைக் கொண்டு பிரசாரஞ் செய்யும்படியும் இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

திருவாளர்கள் எல். இராமச்சந்திரன் வக்கீல் சிவகங்கை, 2. ப. ஜீவானந்தன் சிராவயல், 3. சின்னக் காஜியார் இப்ராகிம் மதுரை, 4. எம். எஸ். பி. சோலை சேர்மென், திண்டுக்கல், 5. வி.வி. இராமசாமி விருதுநகர், 6. டி. எல். கந்தசாமி வக்கீல் சாத்தூர், 7. கே. வி. அழகர்சாமி மதுரை, 8. ஏ. எல். அருணாசலம் மதுரை, 9. கு. அ. முத்து, பத்திராதிபர் "நாடார் குல மித்திரன்" அருப்புக்கோட்டை, 10 கே. எல். சிங்காரவேலு முனிசிபல் கவுன்சிலர் காரை, 11. சொ. முருகப்பர் குமரன் ஆசிரியர் காரைக்குடி, 12. டாக்டர் ஆர். பீம்சிங் காரைக்குடி, 13. ஏ. கே. சி. சிவசுப்பிரமணியம் காரைக்குடி, 14. எஸ. பி. சிவாமிநாதன் ஸ்ரீவில்லிபுத்தூர், 15. டி. கருப்பையா அருப்புக்கோட்டை, 16. எல். எம் மைக்கேல் இராமநாதபுரம் 17 எல் வி. சாமி. ஆகியவர்கள் இக்கமிட்டியின் தலைவராக திரு. எல். இராமச்சந்திரன் அவர்களும, எம். எஸ். பி. சோலை அவர்களைப் பொருளாளராகவும், அருப்புக்கோட்டை டி. கருப்பையா அமைச்சராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கின்றனர். இன்னும் அங்கத்தினர்களைச் சேர்த்துக்கொள்ள காரியதரிசிக்கு உரிமையளிக்கப்பட்டிருக்கிறது.

இதை முன் மொழிந்தவர் திரு. எம். அருணாசலம் அவர்கள். வழி மொழிந்தவர் திரு. சொ. முருகப்பர்.

10. பார்ப்பனரல்லாத மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குப் பார்ப்பன ஆசிரியர்களே பெருந்தடையாயிருந்து வருவதை மாணவர்கள் நன்கு உணர்வதால்முனிசிபாலிட்டி, தாலூகா போர்டு முதலிய பாடசாலைகளிலும், மற்ற உயர்தரக்கல்லூரிகளிலும் பார்ப்பனரல்லாதவர்களையே உபாத்தியாயர்களாக நியமிக்கவேண்டுமென்றும், முக்கியமாக பார்ப்பனரல்லாதவர்களே தலைமை ஆசிரியர்களாக இருக்கவேண்டுமென்றும் இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

இத்தீர்மானம் திரு. கே வி. அழகர்சாமியவர்களால் முன்மொழியப்பட்டு திரு. ஜி ஏ. சின்னு அவர்களால் வழிமொழியப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது.

11. ஆதிதிராவிட மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளாத பள்ளிக்கூடங்களுக்கு கிராண்டு கொடுப்பதில்லையென்று கவர்ன்மெண்டு உத்திரவு இருந்தும், கிராண்டு பெற்றுக்கொண்டு மேற்படி மாணவர்களுக்கு இடமில்லையென்று மறுப்பு வருவதை சர்க்காரும் ஸ்தலஸ்தாபன அதிகாரிகளும் ஜில்லா கல்விச் சபையாரும் கவனித்து மேற்படி பள்ளிக்கூடங்களுக்கு கிராண்டு கொடுப்பதை உடனே நிறுத்திவிட வேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

இத்தீர்மானம் திரு. பெரியதம்பியவர்களால் முன் மொழியப்பட்டு, திரு. செட்டோ அவர்களால் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது.

தலைவருக்கு திரு. சாமியவர்கள் மாலையிட்டு வந்தனங் கூறினர்.

திரும்பவும் மகாநாடு மாலை 3-30 மணிக்கு மகாநாட்டு மண்டபத்தில் கூடியது. அது சமயம் திரு. மைக்கேல் ஓர் ஆங்கிலக் கவியொன்றைப் பாடினர். பின்னர் திரு. தி. அ. வெங்கடசாமி அவர்கள் சிறிது நேரம் சுயமரியாதைக் கீதங்கள் பாடினர். பின் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின.

12. ஏற்கனவே சர்க்கார் உத்தியோகத்திலிருக்கும் பார்ப்பனரல்லாதார் சமூகத்தைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் கல்வி யோக்கியாம்சத்தில் சற்று குறைந்திருந்தாலும்அனுபவத்தை உத்தேசித்து அவர்களுடைய வேலையை காயஞ்செய்ய வேண்டுமென்று இம்மகாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

இந்தத் தீர்மானம் திரு. எல். எம். மைக்கேல் அவர்களால் முன்மொழியப்பட்டு, திரு. கோவிந்தராஜ் அவர்களால் வழி மொழியப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது.

13. வகுப்பு வேற்றுமைகள் காட்டும் ஹோட்டல்களுக்கு லைசென்சு கொடுக்கக் கூடாதென்று ஸ்தலஸ்தாபன அதிகாரிகளைக் கேட்டுக் கொள்ளுவதோடு இதற்கு விக்கின

மாயிருக்கும் சட்டங்களைத் திருத்தி அமைப்பதற்கு சட்டசபை அங்கத்தினர்கள் முயற்சி செய்யவேண்டுமென்றும் இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகின்றது.

இத்தீர்மானம் திரு. கருப்பையா அவர்களால் முன் மொழியப்பட்டு, திரு. டி. நாராயணன் அவர்களால் வழி மொழியப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது.

14. சிவில் புரொசிஜர் கோடு சட்டத்திலும், ரிஜிஸ்டரேஷன் சட்டங்களிலும் ஊர், பெயர், தொழில், வயது என்பவைகளோடு ஜாதிமதம் முதலியவைகளை எழுதவேண்டுமெனக் கட்டாயப்படுத்தக் கூடாதென்று இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகின்றது.

இத்தீர்மானம் திரு. சிவகுருநாதன் அவர்களால் முன் மொழியப்பட்டு திரு. சி. வ. சின்னு அவர்களால் வழிமொழியப்பட்டு ஏகமானதாக நிறைவேறியது.

15 இம்மகாநாட்டின் தீர்மானங்களையெல்லாம் அந்த அந்தத் தீர்மானங்களில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தலைவரின் மூலம் அனுப்பிவிடவேண்டுமென்று காரியதரிசி அவர்களுக்கு இம்மகாநாடு அதிகாரம் அளிக்கின்றது.

இத்தீர்மானம் தலைவரவர்களால் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது.

17. இம்மகாநாடு செங்கல்பட்டு சுயமரியாதை மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்களை ஒப்புக்கொள்ளுகின்றது.

இத்தீர்மானம் திரு. ஈ. வெ ராமசாமி அவர்களால் முன்மொழியப்பட்டு திரு. எஸ். வி. சாமியவர்களால் வழிமொழியப்பட்டு மிகுந்த கரகோஷத்தினிடையே ஏகமனதாக நிறைவேறியது.

பின்னர் மெசர்ஸ். வி. கே. அண்டு சன்ஸ் அவர்களால் கொடுக்கப்பட்ட சர்பத் புட்டிகள், பிஸ்கட்டுகள் எல்லாமவலம் போடப்பட்டது. திரு ஈ. வெ. ராமசாமிப் பெரியார் நான்கு சர்பத் புட்டிகளை ரூபா 5-க்கு ஏலத்தில் எடுத்தார்.

முடிவாக தலைவர் திரு. சொ. முருகப்பர் தன்னுடைய முடிவுரைப் பிரசங்கத்தை நிகழ்த்தினார்.

வரவேற்புக் கழகத் தலைவர் திரு. எஸ். வி. சாமியவர்கள் தலைவரவர்களுக்கும், பிரதிநிதிகளுக்கும் தொண்டர்களுக்கும், கொட்டகை சொந்தக்காரருக்கும், வி. கே. அண்டு சன்ஸ் மானேஜருக்கும், மற்றோருக்கும் வந்தனங் கூறி, தலைவர்கள் திரு. சொ. முருகப்பர், திரு. ஈ. வெ ராமசாமி பெரியார் முதலியோர்களுக்கு ரோஜா மாலை சூட்டினார். தலைவர் திரு. சொ. முருகப்பர், மதுரை ராமகிருஷ்ண பார்ப்பனரல்லாத காப்பி ஹோட்டல் மானேஜருக்கு நூர் நற்சாட்சிப் பத்திரம் மகாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு அவர் இனிய சிறுண்டி வழங்கியதற்காக அளித்தார்.

[illegible]டன் மகாநாடு இரவு 8-30 மணிக்கு மிகுந்த கரகோஷத்தினிடையே, 'ஈ. வெ. இராமசாமிக்கு ஜே' 'சுயமரியாதைக்கு ஜே' என்ற முழக்கத்தோடும் முடிந்தது.

## இராமநாதபுரம் ஜில்லா முதலாவது ஆதிதிராவிடர் மகாநாடு, காரைக்குடி

### வரவு செலவு விவரம்

| | | | |
|---|---|---|---|
| ஆகஸ்டு 30-ந் தேதி வரை நன்கொடை வரவு ரூ. | 648 | 10 | 0 |
| பிரதிநிதிகள் வரவேற்பு சீட்டுகள் விற்றவரவு ரூ. | 105 | 0 | 0 |
| காய்கறி சாமான்கள் விற்றவரவு ரூ. | 10 | 1 | 6 |
| | 763 | 11 | 6 |

### செலவு

| | | | |
|---|---|---|---|
| இலவசச் சீட்டுக்கள் ரூ. | 50 | 0 | 0 |
| தபால் தந்தி | 14 | 10 | 0 |
| சாப்பாட்டுச் செலவு | 245 | 14 | 6 |
| சைக்கிள் | 2 | 6 | 0 |
| மேளம் | 12 | 0 | 0 |
| பூமாலை | 8 | 0 | 0 |
| அச்சுக்கூலி | 22 | 8 | 6 |
| மோட்டார் செலவு | 78 | 0 | 0 |
| பந்தல் | 50 | 0 | 0 |
| தான் முதலியவை | 8 | 8 | 0 |
| போட்டோ | 10 | 0 | 0 |
| கன்னி வெட்ட நிலத்தைச் சமப்படுத்த | 10 | 0 | 0 |
| மூங்கில், கயிறு | 8 | 7 | 0 |
| கியாஸ்லைட் | 12 | 8 | 0 |
| வண்டிக்கூலி | 4 | 9 | 0 |
| ஹைக்கோல் | 3 | 8 | 0 |
| ஸோடா | 1 | 0 | 0 |
| கொடி, பாட்ஜ் | 5 | 3 | 9 |
| பிரயாணச் செலவு | 27 | 2 | 0 |
| சில்லரைச் செலவு | 3 | 6 | 9 |
| | 577-11-6 | | |

| | |
|---|---|
| வரவு | 763–11–6 |
| செலவு | 577–11–6 |
| இருப்பு ரூ. | 186 0 0 |
| | 763–11–6 |

(ஒப்பம்)
காரைக்குடி 1-9-29 } ப. சிவானந்தன், ஆ. சுப்பையா, காரியதரிசிகள்.

---

சிலாக்கூர்:—மருத்துவர்கள் நலனை நாடி ஒரு மருத்துவ சங்கத்தை நிறுவுவதாக ஆகஸ்ட் 15-ந் தேதியன்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

* * *

ஏர்வாடி:—31-8-29 அன்று ஏர்வாடியில் பாலிய முஸ்லீம் சங்கத்து வருடப் பூர்த்திவிழா சீரும் சிறப்புமுடன் நடைபெற்றது. அதுகாலை மாவட்ட புலிக்க ஜூலி ஜனாப் பா. தாவுத்ஷா பி. ஏ. அவர்கள் தலைமை வகித்தார்.

---

வியாபாரத்திற்கழகு — விளம்பரம் செய்தல்

## அறிவுரைத் திரட்டு

முதன் முதலாக நமது நாட்டு இளைஞர்கள் உடற் கட்டுடையவர்களாய் இருத்தல்வேண்டும். மதம் அதன் பிறகுதானே வரும். எனது வாலிப தோழர்களே! வலிமையை அடையுங்கள்; இதுவே எனதுபுத்திமதி. கீதையைப்படிப்பதைக் காட்டிலும் பந்தாட்டத்தினால் கடவுளை எளிதில் காணலாம். உங்களுடைய வன்மையான தசைகளினால் கீதையை நன்றாய் அறியமுடியும்.

விவேகானந்தர்.

* * *

ஏடுகளில் எழுதி வைத்திருக்கின்ற காரணத்தாலேயே ஒன்றை நம்பிவிடாதீர்கள். சிறு குழந்தைப் பருவத்திலிருந்தே நம்பும்படி வற்புறுத்தப்பட்ட பழக்கத்தினால் மட்டும் ஒன்றையும் நம்பிவிடாதீர்கள். உங்கள் பகுத்தறிவை உபயோகித்து, நன்றாய் ஆருவிப்பார்த்து அவை எல்லோருக்கும் நன்மை பயக்கக்கூடியதாயின், அவைகளை நம்புங்கள். அவைகட்கேற்ப நடக்க முயலுங்கள், மற்றவர்களையும், அவ்வாறு நடக்க வற்புறுத்துங்கள்.

கௌதம புத்தர்.

* * *

இந்தியா தேசத்தில்மூலாயிரம்கடவுள்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் ஹிந்துக்கள்மற்றொரு கடவுளை உண்டாக்குகின்ற பாதிரிமார்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

பிரீ திங்க்கர்

* * *

என்னிடத்திலுள்ள ஒரு குற்றத்தைக் கண்டு பிடித்தால் நான் என்னுடைய அபிப்பிராயத்தையே மாற்றிக் கொள்ளுகிறேன். ஏனெனில் உண்மையே எனது ஆர்வம். உண்மையால் விஷயங்கள் ஒருவரையும் பாதிப்பதில்லை. யார் ஒருவர் அறியாமையிலும் குற்றத்திலுமே வாழ்கிறார்களோ அவர்களே அதிக துன்பத்தை யடைகிறார்கள்.

மார்க்யூஸ் ஆரிலியஸ்.

* * *

மனித சக்தியையும், மனோவேகத்தையும்தடுத்து விலங்குகளால் பிணைக்க முயலுபவர்களையெல்லாம் நான் வெறுக்கிறேன். இவர்களில் மதமந்திரிகளையும், பெரும்பான்மையான பாடசாலை உபாத்தியாயர்களையும், 100க்கு 90 நியாயாதிபதிகளையும், [illegible] [illegible] ஆட்சி பார்சனில் [illegible] கட்டுப்பாட்டை உண்டாக்கி மரியாதை பெற்றவர்களையும், சேர்க்கிறேன்.

பெர்ட்ராண்ட் ரஸ்ஸல்.

* * *

ஜனநாயக முற்போக்குக்கு இடையூறாயிருக்கின்ற எந்த ஸ்தாபனங்களும் தங்களைத் தாங்களே திருத்திக்கொள்ள முற்படவேண்டும். இல்லையேல் அவற்றை உடைத்துத் தகர்க்க பின் வாங்கலாகாது.

பெப்ரல் காண்டரு.

* * *

உலகத்துக்கு அறிவு, அன்பு தைரியமும் தேவை. பண்டைய காலத்திய பெருமையைப் பேசிக்கொள்வதாவது அல்லது மூதாதைகளின் கால்வழி நடக்கவேண்டுமென்ற எண்ணமாவது தேவையில்லை. அஞ்சாத திருஷ்டியும், தாராள எண்ணமும் வேண்டும் மடிந்து, மக்கிப்போன இறந்த காலத்தைப்பற்றிய கவலையை ஒழித்து, நமது தாராள எண்ணத்தால் உண்டாக்கப்போகும் நிகழ்கால செழுமையையே குறிகொள்ள வேண்டும்.

பெர்ட்ராண்ட் ரஸ்ஸல்.

[நாகலிங்கம்.]

---


நூதனம் ! அதிசயம் !!
குறைந்த விலைக்கு விற்பனை!!!
எலெக்டிரிக்

மேஜை விளக்கு

இந்த விளக்கு மேஜையின்மேல்



வைக்கக் கூடியதாய் பல்புடனும், மேல் மூடனும் இருக்கிறது. சுவிச்சைப் போட்டவுடன் பளிச்சென்று நல்ல பிரகாசத்தை நாலா பக்கமும் பரப்புகிறது. விசேஷ சமயங்களிலும், சபைகளிலும், கூட்டங்கள் மத்தியிலும், இந்த விளக்கை வைத்துக் கொண்டால் ஒருவிதகஷ்டமுமில்லாதிருப்பதோடு மிக அழகாகவு மிருக்கும். மாணக்கர்கள் மேஜையின்மீது வைத்துப் படிக்கச் சௌகரியம். உடனே எழுதுங்கள். இந்த தினுசில் கொஞ்சம்தான் கையிலிருக்கின்றன.

குறைந்த விலை ரூபாய் 4-8 0
தபால் செலவு தனி.
லக்ஷ்மி ட்ரேட்ஸ் கம்பெனி,
173, தங்கசாலை, மதராஸ்.

---

ஒரே மணி நேரத்தில்
ஆச்சரிய குணமுண்டு.

மன்மத ஸ்தம்பன குளிகை.

இந்த குளிகையை டைரக்ஷனில் சொல்லியிருப்பதுபோல் 10 நாள் சாப்பிட்டு வந்தால் ஆண் சிங்கத்தைப் போன்ற பலமும், முக தேஜஸும் அழகும், தைரியமும் உண்டாகும். நீர்த்துப்போன இந்திரியத்தைக் கெட்டிப்படுத்தும். ஒரு குளிகையை அருந்தி மணவாழ்க்கையில் புகுந்தால் நீடித்த இன்பம் உண்டாகும்.

டப்பி 1 ரூபாய் 2—0—0
ஸ்ரீதனம் அண்டு கம்பெனி,
(3) தபால்பெட்டி 119, மதராஸ்.

(4-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

வணங்கினதாகவும் இராமன் அவனைத் தேற்றி கொடிப் பூசூட்டி யனுப்பியதாகவும் கூறுகிறார். நிகழ்ச்சியை இவ்வாறு கம்பர் மாற்றியதன் நோக்கம் இராமனுடைய இழிந்த சிந்தையினையும் சிற்றறிவையும் மறைப்பதே. மேலும் இந்நிகழ்ச்சிகளையும் அவர் ஒரே பாட்டில் பாடிவிட்டார். அது வருமாறு:—

"மலைந்தபோது இளைந்து இரவிசெய்
ஐயன்மாடணுகி
உலைந்த சிந்தையோடு உணங்கினன்
வணங்கிட உள்ளம்
குலைந்திடேல் உமைவேற்றுமை
தெரிந்திலம் கொடிப்பூ
மிலைந்து செல்கென விடுத்தனன்
எதிர்த்தனன் மீட்டும்".

தீயவனுகிய சுக்கிரீவன் தன்னுடன் பிறந்தவனுகிய வாலியைக் கொல்வதற்காக இராமனையும் துணைக்கழைத்துச் சென்று மறைவிடத் திருத்தி வாலியின் முன் சென்று நின்று போர் தொடுத்தான். முன்னரும் இவன் வாலி சென்ற குகைவாயிலை அடைத்தான். இத்தீய வெறுக்கத்தகுந்த கொடுமையை நினைக்க கம்பர் மனமும் வெறுத்ததில்லை. இராமனுடையவும் அவனைச் சேர்ந்தவர்களுடையவும் ஆகிய குற்றங்களை மறைத்து அவர்களிடம் இல்லாத பெருங்குணங்களை அவர்கள்மேல் சுமத்திக்கூறுவதிலேயே கண்ணுங்கருத்துமாக இருக்கும் கம்பர் இலக்குவனுடைய பேச்சாகத் தமது கருத்தைக் கூறியது வியப்பே! அப்பாடல்கள் வருமாறு:—

"வள்ள(லுக்கு) இளையான் பகர்
வான் இவன் தம் முன்வாணுள்
கொள்ளக்கொடும் கூற்றினைக்
கொணர்ந்தான் குரங்கின்
எள்ளற்கரும்போர திசைகலன்
என்னும் இன்னல்
உள்ளத்தின் ஊன்ற உணர்வற்றி
லன் ஒன்றும்" என்றார்.

"ஆற்றுது பின்னும் பகர்வான் அற
த்தாறு அழுங்க
தேற்றுது செய்வார்களைத் தேறுதல்
செவ்விது அன்றால்.
மாற்றான் எனத் தம்முனைக்கொல்
லிய வந்து நின்றான்
வேற்றார்கள் திறத்து இவன் தஞ்சம்
என்? வீர என்றான்

இப்பாடல்களின் கருத்து வருமாறு:— "இலக்குவன் இராமனை நோக்கி தன் அண்ணனுடையஉயிரை வாங்கும் எமனைப் போல உன்னை அழைத்து வந்திருக்கிறான் இந்த சுக்கிரீவன் என்று கூறிப், பின்னரும் மனம் பொறுக்காமல் அறத்தாறு தவறி இவ்வாறு தகாத காரியங்களை செய்வார்களை நாம் நம்புவது நல்லதில்லை. இந்த சுக்ரீவன் பகைவனைப் போல தன் முன் பிறந்தவனுகிய வாலியைக் கொல்ல வந்து நின்றனனே. தன்னுடைய அண்ணனையே இவ்வாறு கொல்லத் துணிந்த இவன் அந்நியர்களாகிய நம்மிடத்து எவ்வாறு நடந்துகொள்வானோ? எனப் புகன்றனன்."

மேலே கண்டபடி இலக்குவன் கூற்றாகக் கூறிய கம்பர் அதற்கு இராமன் கூறினதாகக் கூறும் மறுமொழி வியப்பாகவே உள்ளது! அது வருமாறு:—

"அத்தா! இதுகேள் என ஆரியன்
கூறுவான் இப்
பித்தாய விலங்கின் ஒழுக்கினைப்பேச
லாமோ?
எத்தாயர் வயிற்றினும் பின்பிறந்தார்
கள் எல்லாம்
ஒத்தால் பரதன் பெரிது உத்தமன்
ஆதல் உண்டோ?"

"வில் தாங்கு வெற்பன்ன விளங்கு
எழில்தோள! மெய்ம்மை
உற்றார் சிலரல்லவரே பலர் என்பது
உண்மை
பெற்றுகுழைப் பெற்றபயன் பெறும்
பெற்றி அல்லால்
அற்றார் நவை என்றலுக்கு ஆகுநர்
ஆர்கொல்" என்றான்.

இப்பாடல்களின் கருத்து வருமாறு:—"இராமன் இலக்குவனிடம், "அப்பா! அறிவற்ற இம்மிருகங்களினிடம் ஒழுக்கத்தைப் பேசலாமோ? முன் பிறந்தாரிடம் பின் பிறந்தாரெல்லாரும் ஒற்றுமையாயிருந்தால் பரதனுடைய பெருமை விளங்குவதெப்படி? எத்தகையராயினும் உதவி பெற்றவர்களிடம் நாம் பயன் பெறும் அளவில் நிற்கவேண்டுமே யொழியவேறில்லை. குற்றம் அற்றவர்கள் என்ற பேருக்கு உரியவராபவர் யாரே உளர்?" என்றனன்.

மேலே கண்ட இராமனுடைய பேச்சால் அவனும் சுக்கிரீவனைக் கெட்டவனென்று ஒப்புக்கொள்கிறனென்பதும், யார் எப்படிப்பட்ட தீயவராக இருந்தாலும் தமக்கு வேண்டிய உதவிகளைப் பெற்றுக் கொள்வதில் குற்றமில்லை எனச் சுயநலம்மட்டுமே இருத்தினனென்பதும் விளங்குகிறது. இனிமேற் செல்லுவதும்.


அசல்

# தாம்பர பஸ்பம்

மூன்றே வேளையில் குணம் தெரியும்.

குணமில்லாவிடில் பணம் வாபீஸ்.

கொடிய ரோகமாயிருந்தபோதிலும் சரியே நமது அசல் தாம்பர பஸ்பத்தை 12 நாள சாப்பிட்டால் போதுமானது. மற்ற மருந்துகளைப்போல் நம்பிக்கையில்லாமல் நினைத்து தருவித்து சாப்பிடாமல் நோயால் கஷ்டப்படாதீர்கள். நம்பிக்கையுடன் தருவித்து சாப்பிட்டு குணத்தை அடையுங்கள். நிச்சயமாய் குணமுண்டாகும்.

சாப்பிடுங்கள்; கைகண்ட மருந்து.

குஷ்டம், குறை நோய், தடிப்பு, திமிர், மதமதப்பு, செம்மேகப் பற்று, கருமேகப் பற்று, கருங் குஷ்டம், வெண் குஷ்டம், அரிப்பு, நமைச்சல், கிரந்தி, ஆராத ரணங்கள், குழிப்புண்-புரை, கண்டமாலை, பவுத்திரம், கன்னப் புத்து, யோனிப் புத்து, குன்மம், சூலை முதலிய கொடிய வியாதிகளும், தீராதென கைவிடப்பட்ட இதர நோய்களும் அவசியம் குணமாகின்றன.

உங்கள் கவலை தீர்ந்துவிட்டது!

உங்களைப்போலிருந்து கவலை ஒழிந்த மனிதன் கூறுவதைக் கவனியுங்கள்:—

நற்சாக்ஷி: கோலாலம்பூர், கண்டங்கர்பு ரோட்டு, பஜனை மடம், ஸ்கூல்மாஸ்டர், எல். குழந்தைசாமி பிள்ளை 31-10-1928-ல் எழுதுவதை பாருங்கள்:—

ஐயா, தாங்களனுப்பிய தாம்பர பஸ்பத்தை 12 நாள் என் மகனுக்குக் கொடுத்ததில் வளைந்திருந்த விரல்கள் நிமிர்ந்துவிட்டன. நெருப்புப் பட்ட போதிலும் தெரியாமல் சொரணையற்றிருந்த இடங்களில் சொரணையும் கை விரல்களில் கெட்டியும் உண்டாகிவிட்டது.

12 நாள் சாப்பிடக்கூடிய அனுபானம் உள்பட ரூ. 15—0—0.

அரண்மனை வைத்தியர் S. T. மாணிக்கம் பிள்ளை,

ஆபக்குடி போஸ்டு, (Via.) திண்டுக்கல் S. I. R.

குறிப்பு:—நம்மிடம் சகல வியாதிகளுக்கும் உயர்ந்த மருந்துகளிருக்கின்றன. மலாய் நாட்டுவாசிகள் மருந்துக்கு ஆர்டர் செய்யும் போது ரூபா 5 அட்வான்சு அனுப்பவேண்டும்.



பகுத்தறிவு

கூடிய விரைவில் "குடிஅரசு" பதிப்பகத்தாரால் வெளிவரப் போகும் மாதப்பத்திரிகை.

இதில் பகுத்தறிவில் சிறந்த பல அறிஞர்களின் கட்டுரைகளும் 'சித்திரபுத்திரன்' வேடிக்கை சம்பாஷணைகளும் ஏராளமாக வெளி வரும். இப்பொழுதே ஆயிரத்துக்கு மேற்பட்ட சந்தாதாரர்கள் முன் பணம் அனுப்பித் தங்கள்பெயரைப் பதிவு செய்திருக்கின்றனர். வருடசந்தா அணு 0—8—0 எட்டே. வெளிநாடுகளுக்கு 0 12 0.

(எப்) விலாசம்:— "பகுத்தறிவு" காரியாலயம், 14, மவுண்ட்ரோட், சென்னை.


மூராதாபாத் கிராமம்:—கள்ளக்குறிச்சி தாலுக்கா, மூராதபாத் கிராமத்தில் உள்ள ஆதித்திராவிடச் சிறுவர்கள் படிக்க மிகவும் பிரியப்படுகின்றார்கள் என்றும், எஜமைஇதனைத் தடைபுரிகிறதென்றும், ஜீவகாருண்யமுள்ளவர்கள் அக்கிராமத்துச் சிறுவர்களில் இரண்டொரு பிள்ளைகளையேனும் முன்னேற்றத்திற்குக் கொண்டுவருவார்களாயின் பெரிதும் போற்றற்குரிய செயலாமென்றும் ஒரு நிருபர் தெரிவிக்கின்றார்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பஞ்சமர்களும் சைவர்களே என்கிறார். நமது கோர்ட்டுகளில் ஹிந்து லாவான மனுதர்ம சாஸ்திரப்படி மீதாட்சார விதிப்படி பஞ்சமர்களுக்குத் தீர்ப்பும் வழங்கப்படுகிறது.

சைவம் என்றால் என்ன?

சைவமதம் அன்பு மயமானது; விசுவாச சகோதரத்துவத்தை ஆதரிப்பது; சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் ஆதரிப்பது சைவமதம். அதை எல்லோரும் எளிதில் உணரலாம்; எளிதில் பின் பற்றலாம்.

சைவமதம் ஒரு நூதன மதமல்ல ஆரியர்கள் வருமுன்பே அந்த மதம் தென்னாட்டில் சர்வசாதாரணமாக வழங்கிவந்தது. புத்தமதமும் சமண மதமும் சேர்ந்து அந்த சைவமதத்தை உருப்படுத்தின. அந்த சைவமதம் இன்னும் நமது இரத்தத்தோடு கலந்திருக்கிறது. நாம் ஒவ்வொருவரும் ஒரு காலத்தில் திருநாவுக்கரசைப் போல் பௌத்தராகவோ, சமணராகவோ இருந்தவர்களே. இந்த பிராமண சிவமதம், வைதீக சிவமதம் தோன்றுமுன் நாமெல்லாம் ஜீவகாருண்ய ஒழுக்கத்தில் சிறந்தவர்களாக யிருந்தோம்.

தென்னாட்டுச் சித்தர்கள்

மற்றும் நமது சுயமரியாதைப் புரட்சியியக்கம்புதியதல்ல. தென்னாட்டுச் சித்தர்களெல்லாம் நம்மைப்போலவே புரட்சிக் காரர்களாகவே இருந்தனர். அவர்கள் பாதச் சுவடுகளைத்தான் நாம் இப்பொழுது பின்பற்றுகிறோம்.

நமது எதிரிகள் நம்மைப் புரட்சிக்காரர் அமித வாதிகள் பகுத்தறிவு கண்போர் அவிசுவாசிகள் நாஸ்திகர்கள் என அழைக்கிறார்கள். இன்னும் வேண்டுமானால் போல்ஷ்விக்குகள் என்றுகூட அழைக்கட்டும். நமக்கு அதைப்பற்றி கவலையில்லை.

அவிசுவாசிகளாகவும் நாஸ்திகர்களாகவும் மாறும்படி நாமெல்லாம்கட்டாயப் படுத்தப்படுகிறோமெனினும், நமது குறைபாடுகளைச்சிவபெருமானுக்கு அறிவுறுத்தவும், நமது மதத்தை சீர்திருத்தவுங் காம்பிரியமுடையவர்களாகவே இருக்கிறோம். ஆனால், சிவபெருமான் பிராமணக் கண்களைக் கொண்டு விஷயங்களைப் பார்க்கக் கூடாது. மெய்யான நெற்றிக்கண்ணைத் திறந்து பார்த்தால் நமதுகுறைபாடுகளெல்லாம் நீங்கிவிடும்; மதமும் சுத்தமாகிவிடும்.

சிவன் அன்புமயமானால் சிவஜீவர்களுக்கெல்லாம் பொதுப் பிதாவானால் உலக மக்களுக்கெல்லாம் சமத்துவமளிக்க மறுப்பது, சிவத்துரோக மல்லவா என்று நான் தற்கால சைவர்களைக் கேட்கிறேன்.

ஆஸ்திகர் கொடுமை

நமது சத்துருக்கள் இழைத்த துன்பங்களைச் செவ்வையாகக் கடவுளிடம் விளக்கிக் கூறுவோமாக:—

''ஆண்டவனே! உமது புனிதப் பெயரால் அவர்கள் செய்யும் கொடுமைகளுக்கு கையும் கணக்குமில்லை. உமது பெயரால் அவர்கள் பண்டு உமது மக்களான சமணர்களைக் கழுவேற்றினார்கள். அவர்களுடைய ஆலயங்களையும் மடங்களையும் கொள்ளையடித்தார்கள். அவர்களுடைய இலக்கியங்களையும் நாசஞ்செய்தார்கள். தாம் பண்டு செய்த பாவங்களை எண்ணி வருந்தாமல் அவர்கள் இப்பொழுதும் அதைப்பற்றி பெருமை பாராட்டுகிறார்கள். அவர்கள் கொடுஞ்செயல்களை யெல்லாம் விளக்கும் நூல்களைப் புராணங்களாக்கி பிரதிதினமும் பாராயணம் செய்து வருகிறார்கள். அம்மட்டோ! எங்களை யெல்லாம் சிவத்துரோகிகள் என்கிறார்கள். விபூதி உருத்திராட்சம் முதலிய சிவச் சின்னங்கள் அணிய வேண்டுமென்று எங்களைக் கட்டாயப் படுத்துகிறார்கள். பாவிகளும் துரோகிகளும் சதா அணிந்துகொண்டிருக்கும் காரணத்தால் அந்த சிவச் சின்னங்களின் பெருமையும் குன்றி விட்டது. அவர்கள் பூர்வத்தில் செய்த பாவ விமோசனத்துக்காக அந்த சிவச் சின்னங்களை அவர்கள் அணிவதுமில்லை. பிராமணர்கள் யாகஞ்செய்து அவர்களும் நூறு தலைமுறையாக அவர்களுடைய பிதுர்க்களும் செய்த பாவத்தைப் போக்கிக் கொள்கிறார்கள். எங்கள் மனச்சாட்சிப்படியும், பகுத்தறிவின் படியும் நாங்கள் நடக்கக் கூடாதென்று அவர்கள் வற்புறுத்துகிறார்கள். எங்கள் முறைபாடுகளுக்கும் பிணக்குகளுக்கும் இவைகளே முக்கிய காரணம்.

நமது ஆஸ்திகச் சகோதரர்களைப் பழித்துப் பேச எனக்கு விருப்பமில்லை. ஆனால், அவர்கள் உண்மையிலேயே ஆஸ்திகர்களா யிருந்தால் அவர்கள்புத்தக வியாபாரிகளாகவும், பிரசுரக்காரர்களாகவும், விளம்பரக் காரரா"வும் இருந்திருக்கக்கூடாது.

இனி சிவபுராணங்களைச் சுயமரியாதை இயக்கத்தார் தாக்குவதைப் பற்றி ஆஸ்திகர் கூறும் பழமொழிகளுக்குச் சமாதானம் கூற எத்தனிக்கிறேன். (தொடரும்)

---


# ராஜாமிர்தம்.

இதன் அபார மகிமை யாராலும் அளவிடற்பாலதன்று. ரத்த விர்த்தி, தாது புஷ்டி, இல்லற இன்பம் கொடுப்பதில் இணையற்றது. இதன் அருமை ஒரு முறை பரீக்ஷித்தவர்கள் உள்ள நாளும் மறக்கமுடியாது.

1மண்டலம் ரூ. 10 ½மண்டலம் ரூ 5. வெளிநாட்டு ஆர்டருக்கு முன்பணம் தேவை

பி. நடராஜ பண்டாரம்
27; அமிஞர் கவுண்டர் தெரு,
பழனி. எஸ். ஐ. ஆர்.

---

## பாக்கெட் டிடக்டிவ்
அல்லது
## லீ பாக்ராஸ் கோப்

இது கெட்டி ரப்பரால் நூதனமாகச் செய்யப்பட்ட அமெரிக்கன் கருவி. நகை வியாபாரிகள் பூதக்கண்ணாடி உபயோகிப்பது போல் இதைக் கண்ணில் வைத்துக் கொள்ள வேண்டும். ஆச்சரியம்!




முன்னும் பின்னும் என்ன நடப்பதென்பதைத் திரும்பிப் பாராமலே தெரிந்து கொள்ளலாம். உமது காதலியின் செய்கைகளை அவளறியாமல் நீங்கள் கண்டு பிடிக்கலாம். வெகு தமாஷை உண்டாக்கும் கருவி இது. நான்கு லீலா விநோத பிரெஞ்சுப் படங்கள் இனமாக அனுப்பப்படும்.

ஒரு கருவியின் குறைந்த விலை ரூ. 1/8.

இன்டோ பாரின் கம்பெனி,
(39) நெ, 27 பீட், ஜி.டி., மதாரஸ்.

---

வாசனை மிக்கது! குணம் பெற்றது!

## எங்கள் புகழ்பெற்ற வாசனைச் சாமான்கள்

மூளைக்கு குளிர்ச்சியையும் வலுவையும் கொடுக்கக்கூடிய சந்தனாதித் தைலம் அரைக்கீரை விதைத் தைலம். இன்னும் அனேக வாசனை சாமான்களும் கிடைக்கும்.

கேட்லாக் இனமாக அனுப்பப்படும்.

ஸ்ரீ கிருஷ்ண பரிமள ஸ்டோர்,
23, பவழக்காரத் தெரு,
மண்ணடி, சென்னை.

---



# தாதுபுஷ்டிக்குக் கைகண்டது
# சி. எம். சாமி மன்மத கோலாகல குளிகை

அநேக பரிசுகள் பெற்று உலகெங்கும் புகழப்பட்டது. தாதுபுஷ்டிக்கு நிகரற்றது. ஒரே குளிகையில் பரீக்ஷிக்கலாம். இழந்த ஆண்மையும், பலமும் திரும்பவரும். நல்ல ஜீரணம், ரத்த விர்த்தி, இந்திரியக்கட்டு, போகசக்தி, தாது புஷ்டி இவற்றைத் தரவல்லது. எவ்வித பலஹீனம், தாது நஷ்டம், துரிதஸ்கலிதம், இடுப்புவலி, உஷ்ண ரோகங்கள் நீங்கும். ஒரு முறை பரீக்ஷித்தவர்களுக்கே இதனருங் குணம் விளங்கும்.

120-குளிகைக்கு ரூ. 10. 60 குளிகை ரூ. 5. 30 குளிகை ரூ. 3. வி. பி. சார்ஜ் வேறு.

**குருநாக பஸ்பம்** மூலத்திற்கு ஆப்ரேஷன் அவசியமில்லை. மூளை தானே கரையும். சீழ் மூலம், ரத்த மூலம், குத்தல், மூலமுளை, மலபந்தம் முதலிய மூலம் ஒன்பதும் அதிசீக்கிரம் குணமாகும். உத்தரவாதமுள்ள சிறந்த ஔஷதம். 20 நாள் புட்டி 1-க்கு ரூபா 16. மாதிரி புட்டி 1-க்கு ரூபா 4-0-0.

சகல வியாதிகளுக்கும் நம்மிடம் முதல்தரமான தேவ ஔஷதங்களிருக்கின்றன.

மலாய் நாட்டிலுள்ளவர் மருந்திற்கு ஆர்டர் செய்யும்போது முன்பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்

நற்சாக்ஷிகளையும், வேறு ஔஷதங்களையும் கியாட் லாக்கில் பார்க்கவும்.


சித்த ஆயுள்வேத வைத்திய ஆசிரியர் **சி. மலையப்பசாமி** நித்தியானந்த வைத்தியசாலை, பழநி, (தென் இந்தியா),

ஒரே மாதம் வரையில் ரூ. 5-14

**ஒரு உண்மையான கிராமபோன்**

என்ன விலைக்குக் கிடைக்கிறது பாருங்கள்.

பிக்மி போன் என்று சொல்லப்படும் சிறிய சைஸ் கிராமபோன் இது 200, 300 விலையுள்ள பெரிய கிராமபோன்களுக்கு இணையாக வாசிக்கக் கூடியது.



இதன் இயந்திர அமைப்பு பெரிய கிராமபோனைப்போலவே உள்ளது. இந்த கிராமபோன் பெட்டியில் சவுண்டு பாக்ஸ், ஆரன், இரண்டு டஜன் கொண்ட ஊசிப்பெட்டி எல்லாம் உண்டு. இரண்டு பக்கமும் பாடக்கூடிய ஒரு ரிக்கார்டும் இனாமாகச் சேர்த்தனுப்பப்படும். இங்கிலீஷ் பாண்டுகள், சிரித்தல், விகடம் பேசுதல் முதலிய ரிக்கார்டுகள் தயாரிலுள்ளன.

தனி ரிக்கார்டு 1-க்கு ரூ. 1.
ஒரு ரிக்கார்டுடன் கிராமபோன் பெட்டி 1-க்கு ரூ. 5-14.
தபால் செலவு ரூ. 1-5.

உடனே எழுதுங்கள்.

Sole distributors.—
CANADION WATCH PEOPLE,
(5) G. P. O. MADRAS.



**ஏஜண்டுகள் தேவை**

"குடி அரசு", "ரிவோல்ட்" பத்திரிகைகளை விற்பனை செய்ய லால்குடி, சிலக்கோட்டை, செங்கோட்டை, திருவண்ணாமலை, கும்பகோணம், திருநெல்வேலி, திருவிடைமருதூர், விழுப்புரம், அம்பாசமுத்திரம், சிவகாசி முதலிய இடங்களிலும் இன்னும் பல முக்கிய இடங்களிலும் ஏஜண்டுகள் தேவை.

மானேஜர்.



**படித்தீர்களா?**

| | | | |
|---|---|---|---|
| பிரபஞ்ச உற்பத்தி 560 பக்கங்கள்; இரண்டாம் பதிப்பு; பொன் கிலிட்டு பைண்டு விலை ரூபாய் | 4 | 0 | 0 |
| அன்புற்ற மங்கை 346 பக்கம் | 1 | 12 | 0 |
| குடும்ப கதைகள் 800 பக்கம் | 2 | 0 | 0 |
| பாக்கெட் வைத்தியம் | 1 | 0 | 0 |
| கொக்கோகம் | 1 | 0 | 0 |
| மண வாழ்க்கையின் மர்மம் | 2 | 4 | 0 |
| கர்ப்ப சாஸ்திரம் | 1 | 8 | 0 |
| மதனுகம லீலை | 2 | 0 | 0 |

தபால் கூலி வேறு; விபர ஜாப்தா இனம்

விலாசம்:—

லக்ஷ்மண பிரசாத் கம்பெனி,
(25) (டிபாட் 19) புதுச்சேரி.



அற்புத

**எலெக்ட்ரிக் மோதிரம்**

அமெரிக்கா தேசத்தில் ஓர் மின்சார நிபுணரால் இப்பொழுது நூதனமாய்க் கண்டு பிடிக்கப்பெற்றது!



இம்மோதிரத்தை பாலர் முதல் விருத்தர்வரை ஆண் பெண் இருதாரத்தார்களும் உபயோகப்படுத்தலாம். இம்மோதிரத்திற்குள்ளிருக்கும் எலக்டிரிக் பவர் குறையாமல் எக்காலமும் நீடித்திருக்கும். தாங்கள் நோய்வராமல் தடுத்துக் கொள்வதற்கும், இருக்கும் நோயை குணப்படுத்திக் கொள்வதற்கும் இம்மோதிரத்தை உபயோகியுங்கள்!

இம்மோதிரமானது 8-வித லோகங்களைக் கொண்டு வெகு அழகாகவும், பார்வையாகவும் செய்யப்பெற்றிருக்கின்றது. இதை விரலில் போட்ட மாத்திரத்தில் அதினின்றும் எலெக்டிரிக் பவர் மின்சார சக்தி வெளியாகி விரல் மூலம் அது தேகமெங்கும் பரவி பலத்தைக் கொடுப்பதோடு காய்ச்சல், வாந்திபேதி, தொத்து வியாதிகள், வைசூரி, இன்புளூயன்சா, க்ஷயம், குஷ்டம், பிளேக், தலைவலி, அஜீர்ணம், மூலம், அன்னத்துவேஷம், மலச்சிக்கல், வாதம் சூலை முதலிய கொடூரமான வியாதிகள் அணுகாது. நற்சாட்சிப் பத்திரங்கள் பிரதிதினமும் வந்து குவிந்துக் கொண்டிருக்கின்றன.

மோதிரம் 1-க்கு விலை ரூபா 1 8 0
மோதிரம் 3-க்கு விலை ரூபா 3 12 0

ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி,
3) தபால் பெட்டி 119, மதராஸ்.



ஜனங்களுக்குச் சந்தோஷத்தைத் தரும்

**ஜனோபகாரி தைலம்.**

இத்தைலமானது 27 வகை வன மூலிகைகளால் செய்யப்பட்டது. அநேக நற்சாட்சிகள் பெற்றது.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"
நல்ல குளிர்ந்த வாசனையுள்ள தைலம்.

இத்தைலத்தால் தீரும் வியாதிகள்:—தீராத தலைக்கனம், ஓயாத மண்டையிடி, ஒருதலைக்குத்து, தலையரிப்பு, முடிகழிதல் இவைகளை நீக்கிக் கூந்தலை வளரச்செய்யும் காதிரைச்சல், காதடைப்பு, குத்தல், கண்வலி, எரிவு, கூச்சம், நீர்வடிதல், சிகப்பு விழுதல், நாசியிலிருந்து மஞ்சள்நிறத் தண்ணீர் வடிதல், ஓயாத் தும்மல், சிராபோல் விழுதல், வாய்க்கசப்பு, புளிப்பு, தூர்க்கந்த மடித்தல் முதலிய வியாதிகள்நீங்கி தேகத்திற்குச்சுகம்உண்டாகும். கண்டத்துக்குமேல் ஏற்படக்கூடிய 96 வியாதிகளும் தீரும்.

பெரிய டின் ரூ. 1—12—0 } தபால் சார்ஜ் வேறு.
சிறிய டின் ரூ. 1—0—0 }

**பார்சவாய்வு மருந்து.**

விதை வாய்வு, நரம்புத்தடிப்பு, வலி, வீக்கம் முதலிய விதை சம்மந்தமான சகல வியாதிகளுக்கும் இந்த மருந்தை உபயோகியுங்கள். பத்தியம் கிடையாது. பெண்கள் அண்டவாய்வுக்கும் உபயோகிக்கலாம்.

14 வேளை மருந்து ரூபா 1—0—0. தபால் சார்ஜ் வேறு.

சிங்கப்பூர், பினாங்கு முதலிய வெளிநாட்டு நேயர்கள் வி. பி. செலவு சேர்த்து முன்பணம் அனுப்பவேண்டும். நீங்கள் கடிதம் எழுதும்போது தெளிவாய் அச்செழுத்தைப்போல இங்கிலீஷிலோ, தமிழிலோ எழுதவேண்டும். சோல் ஏஜண்டுகள் தேவை விவரம் நேரில் எழுதி தெரிந்துகொள்ளவும்.

உ. கா. நாகூர்மீரா அன் பிரதர்,
7-வது தெரு, ஏர்வாடி போஸ்டு,
திருநெல்வேலி ஜில்லா (தென்னிந்தியா.)

(41)



**Beauty For Ladies!**

**பெண்களுக்கு**

அழகான புடவை! உயர்ந்த மல்லில் பச்சை, புளு, வயலெட், கருப்பு, செம்பு, ஆரஞ்சி, ரோஸ், ஸ்கைப் கலர்கள். கரைக்கும் முந்திக்கும் பூவேலையினமுள்ள நூதனமான புடவை.

18 முழம் × 2½ அகலம் ரூ. 4- 6
15 முழம் × 2½ அகலம் ரூ. 3-12.

The Madura Oriental Trading Co.,
Laxmi, Cloth Store, MADURA.

(34)



**எங்கு சரசமான விலை? நயம் சரக்கு?**

அயல் நாட்டிலிருந்து இவண் வந்து விற்பதற்கு சரியான பெங்கால், கலர், சில்வர், மேச்சஸ்கள், மாவிக்வயர் அடியிற் கண்டவர்களிடம் தேவையானது கிடைக்கும்.

காரியஸ்தர், தீப்பெட்டிகம்பெனி,
(37) பாலக்காடு, (தென்மலபார்.)



**குமரன்**

காரைக்குடி தனவணிக நாட்டில் பிராமணரல்லாதார் முன்னேற்றத்துக்காக உழைக்கும் சிறந்த செந்தமிழ்ப்பத்திரிகை,

அடிமை வாழ்வைப் போக்கிக் குருட்டு நம்பிக்கையை நீக்கி, அறிவுச் சுடர் கொளுத்தும், கட்டுரைகளைத் தாங்கி வெளிவருகின்றது.

வருடச் சந்தா விவரம்:—
வாரப்பதிப்பு ரூ. 5—0—0
(எப்) மாதப்பதிப்பு ரூ. 1—8—0



**முன்னேற்றம்**

இஃது சுயமரியாதைக் கொள்கையை ஆயுதமாகக் கொண்டு சிங்கப்பூரிலிருந்து வெளியாகும் ஒரு தமிழ் வாரப் பத்திரிகை.

இதன் ஆசிரியர்-வே. சி. நாராயணசாமி
இதன் சந்தா ரூ. 4-0-0 அல்லது $ 2—25.

விலாசம்:—மானேஜர்,
"முன்னேற்றம்"
(எப்) 155, சிலிகிரோட், சிங்கப்பூர்



**திருப்பூர் ஜவுளி தினுசுகள்**

அழகான பல ரகம் அச்சுவேஷ்டிகள், சால்வை ரகங்கள், துண்டு மடிகள், ஷர்ட்டிங் பீஸ்கள் மிக நயமானதாகவே தயார் செய்யப்படுகிறது. வேண்டியவர்கள் நேரே எங்கட்கு ஆர்டர் செய்யவும். விலை விவரஜாபிதாவுக்கு எழுதுங்கள்.

M. V. Karuppanna Chettiar,
Khaddar Merchant
Tirupur, (S. India).

(6)

# அசல் ஷண்முகம்

## பட்டணம் பொடி

**80 வருஷ காலமாக உலகத்தில்பிரக்கியாதி பெற்றது!**

**பொடி உபயோகிப்பவர்களால் கொண்டாடப்படுவது!!**



அசல் ஷண்முகம் உத்தியோகஸ்தர்களை சுறுசுறுப்பாய் வைக்கின்றது!


நமது நாட்டிற்கு அசல் ஷண்முகம் பொடியே தேசிய சேவையில் அளவற்ற வேலைக்குப் பயன்படுகிறது. உங்களுக்கும் உழைக்கக் காத்துக் கொண்டிருக்கிறது.

12 தோலா 13 அணா.

24 தோலா ரூ. 1-6-0




அசல் ஷண்முகம் ஜட்ஜுகளை நுட்பமாக கவனிக்கச்செய்கிறது.



அசல் ஷண்முகம் உபாத்தியார்களை அநேக நேரம் வேலை செய்ய சக்தி உண்டாக்குகிறது!

டாக்டர் ஆர். கே. பரிமள மூக்குத்தூள் 4 அணா. காலணா சாதா மூக்குத்தூளுடன் இந்தத்தூள் இரண்டொரு சிட்டிகை மட்டும் கலந்தால் தூள் முழுவதும் சுகந்தமாய் விடும்.



அசல் ஷண்முகம் பாடல்களை உற்சாகத்தோடு பாடச்செய்கிறது.

**ஷண்முகம் மூக்குந்தூள் கம்பெனி லிமிடெட்,** தபால் பெட்டி 140, மதராஸ்.

---

### கைத்தொழில் முறைகள்.

1000 இரகசிய முறைகள் கொண்டது. சோப்புகள், மெழுகுவர்த்திகள், தீக்குச்சிகள், வார்னிஷ்கள், பிஸ்கத்துகள், பென்ஸில்கள், பலவித மருந்துகள் இன்னும் இதுபோன்ற 1000 எளிய முறைகள்கொண்டது. வேலையில்லாத் திண்டாட்டமுள்ள இக்காலத்தில் ஒவ்வொருவரிடமும் இந்நூல் இருக்கவேண்டும். 300 பக்கம் ஏரோப்ளேன் டிரேட் மார்க் உள்ளது.

ரூபா 1—8—0

உடனே எழுதுங்கள்.

வாஸன் புஸ்தகசாலை,

8) 244, தங்கசாலை வீதி, மதராஸ்

### "ரஸ்மக்"

**முகப்பருக்களுக்கு**

ஆச்சரியமான மருந்து

டப்பி விலை 12 அணா.

விலாசம்:—

**கேஷலேன் கம்பெனி,**

(33) வேலூர், (வட ஆர்காடு.)

### திருப்பூர் பனியன்கள்

முதல்தரம் கார்டிகன் 32 இஞ்சு டஜன் 1-க்கு 6-8-0. வேண்டியவர்கள் உடனே ஆர்டர் செய்யவும்.

The General Knitting Factory,
(6) TIRUPUR

### குடி அரசு புத்தகாலயம்

வேதப்புரட்டை வெளியாக்கும்,

| | | |
|---|---|---|
| ஞானசூரியன் 2-ம் பதிப்பு | ... | 0—8—0 |
| இராமாயணத்தின் ஆபாசம் பாலகாண்டம் | | 0—4—0 |
| சுயமரியாதைப் பாடல்கள். | ... | 0—2—0 |
| இராமலிங்க சுவாமி பாடல் திரட்டு. | ... | 0—2—0 |
| சுயமரியாதைத் தாலாட்டு | ... | 0—2—0 |

விலாசம்:—

**மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,**

(எப்) 14, மவுண்ரோட், மதராஸ்.

ந. மு. எஸ். கண்ணப்பர் அவர்களால் சென்னை "திராவிடன்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை